# இக்காலத் தமிழ்

முத்துச் சண்முகன்

ஜீயோன் பதிப்பகம்
மதுரை.

# இக்காலத் தமிழ்

முத்துச் சண்முகன், M. A., M. Litt.,
மதுரைப் பல்கலைக் கழகம்

டாக்டர் இராம. சண்முகம்,
பேராசிரியர்,
தமிழ்த்துறை,
அஞ்சல் வழித்தொடர் கல்வித்துறை,
காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 625 021.

சீயோன் பதிப்பகம்
பங்கசம் காலனி
மதுரை-9

முதற் பதிப்பு – நவம்பர் 1967

விலை ரூபாய் 2·50

| | |
|---|---|
| Author's Name | M. Shanmugam Pillai |
| Date of Birth | 4—1—1920 |
| Title of the Book | Ikkaalattamil |
| Language | Tamil |
| Price | Rs. 2-50 |
| Edition | First Edition<br>November 1967 |
| Publisher | Zion Publishing Co.,<br>Madurai-9 |
| Printers | Arul Printers<br>Tirunelveli-2 |

அருள் அச்சகம், பாளையங்கோட்டை.

# அணிந்துரை

MADURAI UNIVERSITY

T. P. MEENAKSHISUNDARAN
*Vice-Chancellor*

UNIVERSITY BUILDING
MADURAI-2

*எண்: 2334 / வி.* *தேதி: 22 – 11 – 1967*

நண்பர் திரு முத்துச் சண்முகனார் "இக்காலத் தமிழ்" என்ற நூலை எழுதி வெளியிடுகிறார். மொழி நூலாசிரியராக இருந்த அவர் பேச்சு மொழியில் சிந்தனையைச் செலுத்துவது இயல்பே. இத்தகைய முயற்சிகள் பல எழுதல் வேண்டும். அப்போதுதான் முடிந்த முடிவுகள் தெள்ளத் தெளிய விளங்கும். தொல்காப்பியர் மருஉ வழக்கை ஆராய்கின்றார் என்பதை உணர்வோமானால் இத்தகைய முயற்சிகள் தமிழ் இலக்கியப் புலவர்கள் அறியாதனவல்ல என்பது விளங்கும்.

தெ. பொ. மீனாட்சிசுந்தரன்.

# முன்னுரை

பல பொழுது பல இதழ்களில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுதி இது - இரண்டு நீங்க. தொகுத்து வெளியிட உடன்பாடு தந்த இதழ் ஆசிரியர்களுக்கு என் நன்றி.

இன்று தமிழ் மொழியில் ஊடுருவிப் பாய்ந்திருக்கும் புதுமைகளில் சிலவற்றையே இங்கு எடுத்துக் காட்டுகிறேன். விடப்பட்டவை எவ்வளவோ ? பல நாம் கையாண்டு வரும் மரபிற்கு மாறுபட்டிருக்கலாம். அதனால்தானே சொல்ல வருகிறேன். சொன்னதையே சொல்வானேன் ? அதற்கு நான் எதற்கு ? மொழி நாம் கையாளும் மரபிற்கு உடன்படவில்லை என்றால் நாம் என்ன செய்ய முடியும் ? மரபை - ஆராயும் முறையைத் தான் மாற்ற வேண்டும்.

இன்று எழுதுந்தமிழும் பேசுந்தமிழும் கூடிக்குலாவி மோதுவதோடு தொடங்குகிறது இந்நூல். யாழ்ப்பாணத் தமிழில் நம் தமிழில் காணாத புதுமைகள், பழமைகள் பல. இன்று எழுதுந் "தமிழின் ஒலியன்கள்" எந்த இதழிலும் இதுவரை வெளிவரவில்லை. மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ் முதுகலை மாணவர்களுக்கு மொழியியல் கற்பிக்கும் பொழுது தமிழின் ஒலியமைப்பை விளக்க எழுந்த முயற்சியின் விளைவு இது. இன்று நாம் பெயர்ச் சொற்களைக் கையாளும் முறையில் காணும் புதுமைகள் பலப்பல. எதிர்மறையும், வினாவும் - இன்னும் நமது மொழியில் நாம் காணாத புதுமைகள் எவ்வளவோ ? எப்பொழுது காணப்போகிறோம் ? என்ற மலைப்பையே கொடுக்கின்றன. ஙனமா ? அனமா ? என்றே (1937 - 1939) இரண்டு பெரியவர்கள் நிகழ்த்திய

ஆராய்ச்சிப்போர் இது. அதில் திடீரெனப் புகுந்தேன். அய்யர்கள் இப்பொழுது இருந்தால், இதைப் படித்தால் என்ன எழுதுவார்களோ? இறுதியாக ஒலியியல் கலைச் சொற்கள். இதற்கும் மதுரைப் பல்கலைக் கழக முதுகலை மாணவர்களே காரணம் மொழியியல் வகுப்பில் நுழைந்ததும் "சார், நோட்ஸ்" என்று கேட்டார்கள். இது என்ன புதுமை என்று மலைத்தேன். என்னவோ மொழியியலைத் தமிழில் புத்தகமாகக் கொண்டுவந்தால் தான் உருப்படுவோம் என்று எழுதத் தொடங்கினேன். அதன் முன்னோடியே இது. எல்லாச் சொற்களையும் இங்குக் கொடுக்கவில்லை. கட்டுரைகளில் வரும் கலைச் சொற்களைப் புரிந்துகொள்வதற்கும் இது உதவும் என்ற நோக்கத்தோடு கொடுக்கிறேன். ஒவ்வொன்றிற்கும் உதாரணம் கொடுத்திருக்கலாம். உதாரணந்தான் "மொழியியல்" நூலில் வருகிறதே என்று விட்டு விட்டேன். படிப்பவர்களுக்கும், படிப்பிக்கின்றவர்களுக்கும் வேலையும் வேண்டுமே அவர்கள் உதாரணங்களையாவது தேடட்டுமே.

இந்நூலை இவ்வளவு சிறப்பாக வெளியிட்ட சீயோன் பதிப்பகததார்க்கு என் நன்றி.

எல்லாம் இருந்தும் என்ன? பூசாரி அனுமதி இல்லை என்றால் தரிசனம் கிடைக்குமா? நான் விரும்பியதும் மதுரைப் பல்கலைக் கழகம் வெளியிட உடன்பாடு தந்தது. பல்கலைக் கழகத்தார்க்கு என் நன்றி.

இந்நூற்கு அணிந்துரை கொடுத்தருளிய மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர், பன்மொழிப் புலவர், பேராசிரியர், தெ. பொ. மீ. அவர்களுக்கு எனது நன்றி.

முத்துச் சண்முகம்

# பொருள் அடக்கம்

1. மக்கள் தமிழும் இலக்கியத் தமிழும் ... 1

2. யாழ்ப்பணத் தமிழ் ... 15

3. தமிழின் ஒலியனியல் ... 34

4. பெயர் ... 44

5. ஆக்கப் பெயர்கள் ... 56

6. எதிர்மறைகள் ... 69

7. வினை ... 85

8. ஙனமா? அனமா? ... 95

9. வற்றென் சாரியை ... 104

10. மொழியியல் — கலைச்சொல் விளக்கம் ... 109

# 1. மக்கள் தமிழும் இலக்கியத் தமிழும்

**முன்னுரை**

தென்னிந்திய மொழிகளில், தற்காலத் தெலுங்கு இலக்கியம் கையாளும் மொழிக்கும், பேசும் தெலுங்கிற்கும் அதிக வேறுபாடு இல்லை. கன்னடத்தில் இவை இரண்டும் தெலுங்கைவிட அதிகமாக வேறுபடுகின்றன. ஆனால், இவை இரண்டும் மிகவும் விலகி நிற்பது தமிழிலேதான். இன்றைய பேச்சுத் தமிழும் (மக்கள் தமிழ்) இலக்கியத் தமிழும் இரு வேறு மொழிகளோ எனவும் ஐயுற வேண்டியிருக்கிறது. மேலை நாட்டார் ஒருவர் தமிழ்ப் புத்தகங்கள் மூலம் இக்காலத் தமிழை நன்கு கற்று, நன்றாக எழுதப் படிக்கத் தெரிந்திருந்தாலும், திடீரெனத் தமிழ் நாட்டுக் கிராம மொன்றில் புகுந்து, அங்குள்ளவர் பேசுவதைக் கேட்டால், சிறிதும் புரிந்துகொள்ள மாட்டார். உத்தரப் பிரதேசத்தில் புத்தகத் தமிழைக் கற்றவர்கள் சிலர், அண்மையில் தமிழ்நாட்டில் கிராமங்களின் உள்ளே புகுந்து பேசமுயன்றபோது, அவர்கள் பேசிய பேச்சைக் கிராமவாசிகள் புரிந்துகொண்டனர். ஆனால், கிராம வாசிகள் பேசியதை உத்தரப் பிரதேசத்தார் புரிந்து கொள்ள முடியவில்லை. என்னோடு வேலைபார்க்கும்

வங்காள மொழித் துணைப் பேராசிரியர் திரு. பட்டாச்சாரியார் அவர்கள், வங்காளத்தில் இருக்கும் பொழுதே தமிழை நன்ருக எழுதப் படிக்கக் கற்றவர். அவர் இங்கு மக்கள் தமிழைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்கிருர். அவர் இலக்கியத் தமிழில் பேசுகின்ருர். ஆறு மாதங்களாகியும் இன்னும் மக்கள் தமிழைப் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கின்ருர். ஆனுல், மக்கள் தமிழும் இலக்கியத் தமிழும் நெருங்கிக் கலந்த புதிய தமிழ் ஒன்று உருவாகும் நிலை இன்று தமிழ் நாட்டில் தொடங்கி இருக்கிறது. இதனை இன்றைய பத்திரிகைகள், தற்கால எழுத்தாளர்கள் எழுதும் கதைகள், மேடைப் பேச்சுக்கள், ரேடியோ நிகழ்ச்சிகள், நாடகங்கள், பேசும் படங்கள் இங்கெல்லாம் காணலாம். இவற்றில் மக்கள் தமிழையும் இலக்கியத் தமிழையும் மாறி மாறிப் பயன்படுத்துகின்றனர்.

**பத்திரிகைகள்**

இன்றைய தமிழ்ப் பத்திரிகைகளை மூன்ருகப் பிரிக்கலாம். மக்கள் தமிழிலேயே வெளிவரும் பத்திரிகை எதுவும் இன்று தமிழ் நாட்டில் இல்லை. மக்கள் தமிழையும் சிற்சில இடங்களில் பயன்படுத்தும் பத்திரிகைகள் முதல் வகையைச் சார்ந்தவை. ஆனந்த விகடனில் "பத்து கேள்விகள்", "இங்கே போயிருக்கிறீர்களா ?" – இவை மக்கள் தமிழில் வருகின்றன. பத்து கேள்விகளில் ஆசிரியர் இன்றைய தமிழ்ச் சமூகத்தில் பல்வேறு மக்களைப் பேட்டி கண்டு அவைகளை வெளியிடுகின்ருர். படித்தவர்கள், உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் இவர்களோடு நடைபெற்ற பேட்டியாயின், ஆசிரியர் இலக்கியத் தமிழைப் பயன்படுத்துகின்ருர். மற்றவர்களோடு நடைபெற்ற பேட்டியாயின், மக்கள் தமிழைப் பயன்படுத்துகின்ருர். "இங்கே போயிருக்கிறீர்களா ?" என்பதில்

ஆசிரியர் மக்கள் கூடுகின்ற பல்வேறு இடங்களை வருணிக்கின்ருர். இதில் ஒவ்வொருவனும் அவனவன் தமிழிலேயே பேசுகின்ருன். ஆனந்த விகடனும், குமுதமுமே மக்கள் தமிழை இந்த அளவிற்காவது பயன்படுத்துகின்றன.

இரண்டாவது பிரிவைச் சார்ந்த பத்திரிகைகள் எப்பொழுதும் இலக்கியத் தமிழையே பயன்படுத்துகின்றன. எந்தப் பொருளைப்பற்றி எழுதினுலும் இலக்கியத் தமிழையே பயன்படுத்துகின்றன. தினசரிப் பத்திரிகைகள் எல்லாம் இப் பிரிவில் அடங்கும். கல்கி, கலைமகள், கலைக்கதிர், குறிஞ்சி, காஞ்சி, முத்தாரம் போன்ற வார, மாத வெளியீடுகளும் இப் பிரிவில் அடங்கும்.

மூன்ருவது பிரிவைச் சார்ந்த பத்திரிகைகள் பண்டிதர் நடையிலேயே எழுதுவன. இவற்றில் வருகின்ற கட்டுரைகளைப் படிக்கும் பொழுது பழந் தமிழைப் படிப்பது போன்ற உணர்ச்சியே ஏற்படும். இவை தூய தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துகின்றன. செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப் பொழில், தென்மொழி போன்ற பத்திரிகைகள் இப் பிரிவில் அடங்கும். அப்பத்திரிகைகள், குறிப்பிட்ட சிலரிடையேதான் வழங்குகின்றன. பழைய இலக்கண இலக்கியங்களில் பரம்பரை பயிற்சி உடையவர்களே இவற்றைப் படிக்கின்றனர்.

விகடத்துணுக்குகளை வெளியிடும் பொழுது எல்லாப் பத்திரிகைகளும் (மூன்ருவது பிரிவு நீங்க) மக்கள் தமிழையே பயன்படுத்துகின்றன. மூன்ருவது பிரிவைச் சார்ந்த பத்திரிகைகள் பெரும்பாலும் விகடத்துணுக்குகளை வெளியிடுவதில்லை; வெளியிட்டால் இலக்கியத் தமிழையே பயன்படுத்துகின்றன.

பத்திரிகைகள் கையாளுகின்ற நடைக்கும், பத்திரிகைகளின் செலவிற்கும் எத்தகைய தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. இரண்டாவது பிரிவைச் சார்ந்த தினசரிப் பத்திரிகைகள் நீங்க, முதல் பிரிவைச் சார்ந்த குமுதம், ஆனந்த விகடன், இரண்டாவது பிரிவைச் சார்ந்த கல்கி இவைகளே அதிகம் செலவாகின்றன. பத்திரிகைகளில் வருகின்ற செய்திகள், கதைகள், கட்டுரைகள், அரசியல் நோக்கு — இவைகளே பத்திரிகைகளின் செலவைக் கணக்கிடுகின்றன.

**தமிழ் எழுத்தாளர்கள்**

பத்திரிகைகளைப் போல எழுத்தாளர்களையும் மூன்றாகப் பிரிக்கலாம். தற்கால இலக்கியங்களான சிறுகதை, நாவல் முதலியன எழுதுபவர்கள் முதல் வகையைச் சார்ந்தவர்கள். அவர்கள் தங்கள் கதைகளில் மக்கள் தமிழை ஆங்காங்கே பயன்படுத்துகின்றனர். பெரும்பாலும் உரையாடல் மக்கள் தமிழிலும், விளக்கப் பகுதிகள் இலக்கியத் தமிழிலும் அமைந்திருக்கின்றன. முற்றிலும் மக்கள் தமிழில் எழுதப்பட்ட நாடகம், பூவை ஆறுமுகம் ஆனந்தவிகடனில் (17-9-61) எழுதிய மகுடி. தற்கால எழுத்தாளர்களில், ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான மக்கள் தமிழில் பெருவாரியாக எழுதுகின்றனர். புதுமைப்பித்தன் திருநெல்வேலித் தமிழில் எழுதினர். ஜெயகாந்தன் சென்னை நகர 'ஸ்லம்' வாசிகள் தமிழில் பெரும்பாலும் எழுதுகிறார். ஜானகிராமன், எல். எஸ். இராமாமிர்தம் இவர்கள் பார்ப்பனர் தமிழில் எழுதுகின்றனர். சி. என். செல்லப்பா மதுரை ஜில்லா கள்ளர் தமிழில் எழுதுகிறார். சண்முகசுந்தரம் கோயம்புத்தூர்த் தமிழில் எழுதுகிறார். ஹெப்சிபா ஜேசுதாஸ் நாகர்கோவில் கிருத்தவர் தமிழில் எழுதுகிறார். இவ்வாறு குறிப்பிட்ட ஒருவகை மக்கள் தமிழிலே பெரும்பாலும் எழுதுபவர்கள்

தமிழ்நாட்டில் அப்பகுதியில் இருந்து வருகின்றனர்; அல்லது அவ்வகுப்பைச் சார்ந்தவர்களாக இருக்கின்றனர். அகிலன், மு. வரதராசன், இவர்கள் பொதுப் பேச்சுத் தமிழில் எழுதுகின்றனர். இவர்கள் அனைவரும் மக்கள் தமிழில் காணப்படுகின்ற ஒலி வேறுபாடுகளைத் தமிழ் எழுத்துக்களாலேயே காட்ட முற்படுகின்றனர். இதில் ஆசிரியர்கள் வேறுபடுவதோடு, ஒருவர் எழுதுவதிலேயே முரண்பாடுகளும் இருக்கின்றன. இவர்களில் பெரும் பாலோர் இளம் வயதினர். பலர் வேறு வேலைகளில் இருந்துகொண்டு எழுதுகின்றனர். சிலர் பத்திரிகைகளில் வேலை பார்க்கின்றனர். எந்த எழுத்தாளனும் கட்டுரை எழுதும் போது இன்னும் மக்கள் தமிழைப் பயன்படுத்த வில்லை.

**பேசும் முறை**

இனி, மக்கள் பேசும் முறைகளைக் காண்போம். குடும்பத்தினரோடும், நண்பர்களோடும் சாதாரணமாக உரையாடும் பொழுது படித்தவர்களும் படிக்காதவர்களும் மக்கள் தமிழிலேயே பேசுகின்றனர். படித்தவர்கள் மேடை மீது ஏறிச் சொற்பொழிவு ஆற்றும் பொழு தெல்லாம் இலக்கியத் தமிழிலேயே பேசி வந்தனர். இது ஒரு விதி போல் அமைந்திருந்தது. இதுவும் இப்பொழுது சிறிது சிறிதாகத் தளர்ந்து வருகிறது. மேடைப் பேச்சால் பெரும் வெற்றி கண்டவர்கள் தி. க., தி. மு. க., ஆகிய இரு கட்சியினருமாவார். இவர்கள் தமக்கென ஒரு இலக்கிய நடையை அமைத்துக் கொண்டனர். இவர்களுடைய கட்சியில் பற்றில்லாதவர்கள் கூட இவர்களுடைய பேச்சைத் தேனுண்ணும் வண்டு போல் மணிக்கணக்காக அமர்ந்து கேட்பார்கள். பொருத்த மான எதுகை மோனை; பன்னிப்பன்னிப் பெருகிச் செல்லும் நீண்ட வாக்கியங்கள்; எழுவாயை வாக்கிய இறுதியில்

கொண்டு வருவது; இவர்களுக்கெனத் தனியான ஒருவகைக் குரலிசை (Intonation) — இவை இவர்களுடைய நடையின் தனி இயல்புகள். இவர்களும் இப்பொழுது இந்த நடையைக் கைவிட்டு வருகின்றனர். அண்ணாத்துரை அவர்கள்கூட இந்த நடையை விட்டுவிட்டு எளிய இலக்கிய நடையிலேயே பேசுகின்றார். ஆனால், இவர்கள் மேடையில் இன்னும் மக்கள் தமிழைக் கையாளவில்லை — ஒருவர் இருவர்தாம் ஆங்காங்கே கையாளுகின்றனர்.

இன்று, தமிழ் நாட்டின் இருபெருந் தலைவர்களாகக் காமராஜரும் பெரியாரும் திகழ்கின்றனர். இவர்கள் இருவரும் மேடையிலும் மக்கள் தமிழிலேயே பேசுகின்றனர். இருவரும் பொது மக்களுடைய உள்ளத்தைக் தொடக்கூடியவர்கள். வீட்டில் நண்பர்களோடு பேசுவதைப் போலவே மேடையிலும் இவர்கள் பேசுகின்றார்கள். இதில், பெரியார் தி. க., காமராஜர் காங்கிரஸ். பெரியார், தாம் மக்கள் தமிழில் பேசுவதோடு நில்லாமல், தன் கழகத்திலுள்ள மற்றவர்கள் இலக்கியத் தமிழில் பேசுவதைக் கண்டிக்கவும் செய்கிறார். காமராஜர், பெரியாரிடமிருந்தே இந்த முறையைக் கற்றிருக்கவேண்டும். சிலர் இவர்களுடைய கல்வி முறையே இதற்குக் காரணம் என்கின்றனர். இரண்டுபேரும் கல்லூரிகளில் படிக்கவில்லை. இருவரும் பொது மக்களோடு எப்பொழுதும் உறவாடிக் கலந்து வாழ்பவர்கள். தாங்கள் கூறுவது பொது மக்களுடைய உள்ளத்தில் நன்கு ஊன்ற வேண்டும் என்ற ஆர்வமே இவர்கள் மக்கள் தமிழிலேயே மேடையிலும் பேசுவதற்குக் காரணம் என்று கூறுவது பொருந்தும். மற்றொரு தலைவர் சிவஞான கிராமணியார். இவர் அரசியல் கூட்டங்களாயின் மக்கள்தமிழில் பேசுகின்றார்; இலக்கியக் கூட்டமாயின் இலக்கியத் தமிழில் பேசுகிறார். இது அண்மையில் இவரிடம் தோன்றிய மாறுதல். முன்பெல்

லாம், இவர் எப்பொழுதும் இலக்கியத் தமிழிலேயே பேசி வந்தார்.

பட்டம் பெற்ற ஆசிரியர்கள், பேராசிரியர்கள்—மிகச் சிலரைத் தவிர, அனைவரும் மேடையில் இலக்கியத் தமிழிலேயே பேசுகின்றனர். இவர்களும், நகைச்சுவை நிகழ்ச்சிகளைக் கூற முற்படும் பொழுது மக்கள் தமிழில் பேசுகின்றனர். இவர்களிலும், சிறந்த பேச்சாளரான காலஞ்சென்ற பேராசிரியர் சோமசுந்தர பாரதியார், மேடையிலும் மக்கள் தமிழிலேயே பேசினார். இப்பொழுது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இருக்கும் தமிழ்ப் பேராசிரியர் ஜி. சுப்பிரமணிய பிள்ளையும் மக்கள் தமிழிலேயே பேசுகின்றார். சோமசுந்தர பாரதியார் தொடங்கும்பொழுது இலக்கியத் தமிழில் தொடங்குவார், இரண்டு மூன்று நிமிடங்களில் மக்கள் தமிழுக்குச் சென்று விடுவார். பின்னர் சொற்பொழிவு முடிவது வரையிலும் மக்கள் தமிழில் தான் பேசுவார். மற்றும் சிலர் இலக்கியத் தமிழில் தொடங்குகின்றனர், சில விநாடிகளில் மக்கள் தமிழுக்குச் சென்று விடுகின்றனர். இறுதியில், முடிவுரையை இலக்கியத் தமிழில் கூறி முடிக்கின்றனர்.

சில ஆண்டுகளுக்கு முன்பு பண்டிதர் நடை படித்தவர்களிடையே சிறிது செல்வாக்குடன் இருந்தது. கரடு முரடான இந்த நடையைப் பண்டிதர் எழுத்தில் பெருவாரியாகவும், பேச்சில் சிறுவாரியாகவும் பயன்படுத்தி வந்தனர். இப்பொழுது இந்த நடை அறவே வழக்கிழந்து விட்டது. சிற்சில சமயங்களில் கேலிப் பேச்சுக்கும் இடமாகிவிட்டது. இதன் இடத்தைத் தற்கால எளிய இலக்கிய நடை பிடித்துக்கொண்டது. இப்பண்டிதர் நடையே வேண்டும் என்று கூறி அதில் எழுதுகின்ற ஒருவர் இருவர் கூட இன்று மேடையில் இலக்கியத் தமிழிலேயே பேசுகின்றனர். சிற்சில இடங்களில்—நகைச்சுவை நிகழ்ச்சிகளைக்

கூறும்பொழுது, இவர்களும் மக்கள் தமிழிலேயே பேசுகின்றனர். இவர்களால் பழமையை விடவும் மனம் வரவில்லை; புதுமையை ஒதுக்கவும் முடியவில்லை.

**கதை நிகழ்ச்சிகள்**

கிராமங்களில் கிராம தேவதைகளுக்கு விழா நடக்கும் போழுது இரவு நேரங்களில் கதை கூறுவார்கள். இது அந்த அந்தக் கடவுளின் கதையாகவே பெரும்பாலும் இருக்கும். முக்கியமாக, கோடைக் காலங்களில் இது நடைபெறும். காத்தவராயன் கதை, மகாபாரதக் கதைகள்-இவை நடைபெறும். கதை சொல்பவர் ஒருவர். அவர்க்கு எதிராக இரண்டு பேர் இருப்பார்கள். ஒருவர் மிருதங்கமோ, முரசோ வாசிப்பார்; மற்றொருவர் உடுக்கு அடிப்பார். கதை பெரும்பாலும் இவர்களிடையே உரையாடலாகவும், கதையைச் சொல்லுவதாகவும் நடைபெறும், இடையிடையே பாட்டுக்களும் இடம் பெறும். இவர்கள் கதையைச் சொல்லும்பொழுது இலக்கியத் தமிழையும், கதையை உரையாடலாகக் கூறும் பொழுது மக்கள் தமிழையும் பயன்படுத்துகின்றனர்.

திருவிழாக் காலங்களில் நடைபெறுகிற மற்றொரு நிகழ்ச்சி கதாகாலட்சேபம். வள்ளி திருமணம், சீதா கல்யாணம் முதலிய கதைகள் கதாகாலட்சேபத்தில் இடம் பெறுகின்றன. இவற்றில் கதையை வசனமாகச் சொல்லுதல், தானே பல பாத்திரங்களாக நின்று உரையாடுதல், பாக்கள், எல்லாம் கலந்துவரும். இங்குப் பாட்டைத் தவிர மற்ற எல்லாம் மக்கள் தமிழிலேயே நிகழும். அதிலும், கதை சொல்பவர் அந்தணராயின் அந்தணர் தமிழிலும், அந்தணர் அல்லாதவராயின் அவர்கள் தமிழிலும் கதாகாலட்சேபம் நடைபெறுகிறது.

**ரேடியோ**

அடுத்தபடி ரேடியோத் தமிழ். ரேடியோவில் இலக்கியத் தமிழைச் செய்தி ஒலி பரப்பிற்கும், நிகழ்ச்சிகளுக்கு முன்னுரை கூறுவதற்கும், அறிவிப்புகளுக்கும் பயன் படுத்துகின்றனர். ரேடியோ நாடகங்களில் பாத்திரங்கள் தனியாகப் பேசிக்கொள்ளும் இடங்களில் — பாத்திரங்கள் தாமாகச் சிந்திப்பதைக் கூற வேண்டிய இடங்களில் (soliloquies) இலக்கியத் தமிழைப் பயன்படுத்துகின்றனர்.

**திரைப்படங்களும், நாடகங்களும்**

இறுதியாக, தமிழ்ப் படங்களும், நாடகங்களும் பயன் படுத்துகின்ற தமிழைக் காண்போம். பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்ப் படங்க ளெல்லாம் இலக்கியத் தமிழையே பயன்படுத்தி வந்தன. தலைவன் தலைவியர் எப்பொழுதும் — காதலிக்கும் பொழுதும், ஊடும் பொழுதும் இலக்கியத் தமிழிலேயே பேசுவர். சிறு பாத்திரங்கள், நகைச் சுவைப் பாதத்திரங்கள் – இவர்களே மக்கள் தமிழில் பேசுகின்றனர். பராசக்தி, வேலைக்காரி, ராணி முதலிய படங்களைப் பார்த்தால் இவ்வுண்மை புலப் படும். ராணி என்ற படத்தில் கதாநாயகி தான் ராணி என்று உணராது கள்வர் கூட்டத்தில் இருக்கும் பொழுது மக்கள் தமிழில் பேசுகிறாள். ஆனால், அப்பொழுதும் காதலிக்கும் பொழுது இலக்கியத் தமிழிலேயே பேசுகிறாள். தான் ராணி என்று தெரிந்ததும் இலக்கியத் தமிழிலேயே பேசுகிறாள். கதாநாயகன் எப்பொழுதும் இலக்கியத் தமிழிலேயே பேசுகிறான். ஆனால், இன்று தமிழ்ப் படங்களின் நடை எவ்வளவோ மாறிவிட்டது. சமூகப் படங்கள் எல்லாம் மக்கள் தமிழிலேயே அமை கின்றன. தலைவனும், தலைவியும் மக்கள் தமிழிலேயே பேசுகின்றனர். 1964 தொடக்கத்தில் வெளிவந்த படம் "காதலிக்க நேரமில்லை" என்பது. பெரும் வெற்றியுடன்

அநேக இடங்களில் பல நாட்கள் ஓடிய படம் இது. இதில் மருந்துக்குக் கூட இலக்கியத் தமிழ் கிடையாது. அனைவரும் மக்கள் தமிழிலேயே பேசுகின்றனர். ஏகதேசம் இதே காலத்தில் வெளிவந்த படம் கர்ணன். அதில் வருகின்ற முக்கிய பாத்திரங்கள் எல்லாம் இலக்கியத் தமிழிலேயே பேசுகின்றனர். இன்று வரும் தமிழ்ப் படங் களில் புராணப் படங்களும், வரலாற்றுப் படங்களும், இலக்கியத் தமிழில் அமைகின்றன. கட்டபொம்மன், பொன்னியின் செல்வன், முருகன், கர்ணன், அருணகிரி நாதர் முதலியன இத்தகைய படங்கள். ஆனால், தற் பொழுது புராணப் படங்களும், வரலாற்றுப் படங்களும் மிகக் குறைந்து விட்டன. சமூகப் படங்களே மிகுதி. சமூகப் படங்களெல்லாம் மக்கள் தமிழையே பயன்படுத்து கின்றன. மக்கள் தமிழிலும் பல வகைகள் இருக்கின்றன. இடத்திற்கு இடம் மாறுவது ஒரு வகை. சாதிக்குச் சாதி மாறுவது மற்றொரு வகை. எனினும், இப்பொழுது தமிழில் பொதுப் பேச்சு ஒன்று உருவாகி வருகிறது. தமிழ்ப் படங்களில் இன்று தலைவன் தலைவியர் ஒரு குறிப் பிட்ட வகுப்பினரைச் சார்ந்தவர்களாயின், அவ்வகுப்பினர் பேச்சைப் பேசுகின்றனர்; இல்லையானால், பொதுப் பேச்சையே பேசுகின்றனர். சாதிப் பேச்சையும், இடப் பேச்சையும் நகைச் சுவைப் பாத்திரங்கள் கையாளு கின்றனர். ஏழைபங்காளன் என்ற படத்தில் தலைவன் சென்னை நகர் குடிசை வாழ்வோர் பேச்சைப் பேசு கின்றான். அங்குள்ள ஒரு பெண்ணையே அவன் காதலிக் கிறான். ஆயிரம் ரூபாய் என்ற படத்தில் தலைவி "பிளாட் பாரம்" தமிழில் பேசுகிறாள். அவள் குறப்பெண். ஆனால், தலைவன் பொதுப் பேச்சில் பேசுகிறான். இது சத்தியம் என்ற படத்தில் நாகேசும் மனோரமாவும் (நகைச்சுவை பாத்திரங்கள்) அந்தணர் தமிழைப் பேசுகின்றனர். பச்சை விளக்கு என்ற படத்தில் நாகேஷ் ஆங்கிலோ

இந்தியர் தமிழைப் பேசுகிறான். இதைப் போல மலையாளி பேசும் தமிழ், செட்டி நாட்டுத் தமிழ், திருநெல்வேலித் தமிழ், "ள" கரத் தமிழ், பண்டிதர் தமிழ் எல்லாம் இன்று தமிழ்ப் படங்களில் நகைச் சுவைக்குப் பயன்படுகின்றன. மக்களைப் பெற்ற மகராசி என்ற படம் கோயம்புத்தூர் தமிழிலேயே அமைந்திருக்கிறது.

சினிமாப் பாட்டுக்களிலும் புதுமைகள் தோன்றி விட்டன. தொடக்க காலத்தில் சினிமாப் பாடல்கள் எல்லாம் இலக்கியத் தமிழில் எழுதப்பட்டுக் கர்நாடக இசையோடு அமைந்திருந்தன. சினிமாப் பாட்டுப் புத்தகங் களில் ஒவ்வொரு பாட்டுக்கும் ராகம், தாளம் இவைகளைக் குறிப்பிட்டு வெளியிடுவர். இன்று இலக்கியத் தமிழோடு கர்நாடக இசையும் அமைந்த சினிமாப் பாடல்களைப் புராணப் படங்களிலும், வரலாற்றுப் படங்களிலும், அல்லது கலையை அடிப்படையாகக் கொண்ட படங்களிலும் தான் காணலாம். மற்ற சமூகப் படங்களி லெல்லாம் சினிமா மெட்டுகளில் அமைந்த பாட்டுக்களே இடம் பெறுகின்றன. சினிமா மெட்டுகளில் அமைந்த பாக்கள் பெரும்பாலும் மக்கள் தமிழிலேயே இருக்கின்றன.

தமிழ் நாடகங்களிலும் இன்று பெரும் புரட்சி ஏற்பட்டுவிட்டது. தெருக்கூத்திற்கு என ஒரு தமிழ்நடை இருந்தது. நவராத்திரி படத்தில் நிகழும் சங்கரதாஸ் சுவாமிகள் எழுதிய தெருக்கூத்தில் காணப்படும் நடையே அது. அதுவும் இலக்கிய நடையே. அந்த நடை தொடக் கத்தில் தமிழ் நாடகங்களிலும் கையாளப்பட்டு வந்தது. பின்பு அது எளிய இலக்கியத் தமிழாக மாறியது. இப் பொழுது தமிழ் நாடகங்க ளெல்லாம் பெரும்பாலும் மக்கள் தமிழிலேயே — பொதுப் பேச்சுத் தமிழ் — நடைபெறு கின்றன. டி. கே. எஸ். சகோதரர்கள் வரலாற்று நாடகங் களில் இலக்கியத் தமிழையும், சமூக நாடகங்களில் மக்கள்

தமிழையும் பயன்படுத்துகின்றனர். டி. கே. சண்முகம் அவர்கள் நாடகங்களில் மக்கள்தமிழையே பயன்படுத்த வேண்டும் என்ற கருத்துடையவர். அப்பொழுதுதான் நாடகங்கள் உண்மையாகவும், இயல்பாகவும் அமைந்து மக்கள் உள்ளத்தைத் தொட முடியும் என்று கருதுகிருர். வரலாற்றுப் படங்களும், புராணப் படங்களும் — அதே போல நாடகங்களும் இலக்கியத் தமிழைப் பயன் படுத்துவது, அவை தற்கால நிகழ்ச்சிகள் அல்ல என்று எடுத்துக்காட்ட ஓரளவு துணைபுரியும்.

### முடிவுரை

தற்காலத் தமிழ் நடையில் நம்மை யறியாமலே புதுமைகள் பல தோன்றி வருகின்றன. சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு வங்காள மொழியில் ஏற்பட்ட பெரும் புரட்சி இன்று தமிழ் மொழியில் தொடங்கி இருக் கிறது.

தற்காலத் தமிழில் மக்கள் தமிழ், இலக்கியத் தமிழ் என்று இரண்டு பிரிவுகள் இருப்பது போல், வங்காள மொழியில் சலித் பாஷை, சாது பாஷை என இரண்டு இருந்தன. சாது பாஷை எழுதுவதற்கும், சலித் பாஷை பேசுவதற்கும் பயன்பட்டு வந்தன. ஆனல், இன்று இரண்டும்ஒன்ருகி விட்டன. முன்பெல்லாம் நாடகங்களில் சிறு பாத்திரங்கள் கூட சாது பாஷையிலே பேசி வந்தனர். இப்பொழுது முக்கிய பாத்திரங்கள்கூட சலித் பாஷை யிலேயே பேசுகின்றனர். இப்போக்கு தாகூருக்கு முன்பே வங்காள மொழியில் தோன்றி விட்டாலும், பெரும் பான்மையோர் அதனைப் பின்பற்றவில்லை. ஆனல், தாகூர் தாம் அந்த நடையைத் தம்முடைய நூல்களில் பெருவாரி யாகப் பயன்படுத்தி நடைமுறைக்குக் கொண்டு வந்தார். தற்கால வங்காள இலக்கிய மொழியை வகுத்துக் கொடுத்தவர் தாகூரே.

சாது பாஷைக்கும் சலித் பாஷைக்கும் உரிய போராட்டத்தைத் தாகூர் ஒரு கதைமூலம் விளக்குகிறார். ஒரு அரசனுக்கு இரண்டு மனைவியர். மூத்தவள் ஆடம்பர வாழ்வுடையவள்; அரச படாடோபங்கள் மிக்கவள்; பெருமைக்காரி. இளையவள் கிராமப்பெண்; ஆடம்பரமற்றவள்; தூய உள்ளம் படைத்தவள்; கபடமற்றவள்; அடக்கமானவள். மக்கள் இளையவளுக்கு அரசிக்குரிய தன்மைகள் இல்லை என வெறுத்தனர். ஆனால், இவளுடைய நல்ல இயல்புகள் மெல்ல மெல்ல அரசனுடைய உள்ளத்தைக் கவர்ந்தன. அவளை விரும்பத் தொடங்கினான் அரசன். மூத்தவளை வெறுக்கத் தொடங்கினான். "மூத்தவளுக்குரிய இடத்தைப் பெற்று அரசனோடு தனியாக இளையவள் அரியாசனத்தில் அமரும் நாள் வெகு தூரம் இல்லை" என்று கூறித் தாகூர் கதையை முடிக்கிறார். இன்று வங்காள இலக்கியத்தில் இளையவள் அரியணையில் அமர்ந்து விட்டாள்.

தாகூர் "இளையவள் அரியாசனத்தில் அமரும் நாள் வெகு தூரம் இல்லை" என்று கூறிய சொற்றொடர் இன்று தமிழ்மொழிக்குப் பொருந்தும் போலும்.

தாகூர் தம் இலக்கியத்தில் சாது பாஷையும் சலித் பாஷையும் கலந்த ஒன்றைக் கையாண்டு வந்தார். ஆனால், இன்று சலித் பாஷை சாது பாஷையை அகற்றி விட்டது. இன்று வங்காளத்தின் சிறந்த எழுத்தாளரான புத்ததேவ போஷ், முற்றிலும் சலித் பாஷையிலேயே இலக்கியம் அமைய வேண்டும் என்கிறார். சிறிதளவு காணப்படுகின்ற சாது பாஷையையும் அகற்றிவிட வேண்டும் என்கின்றார். சாது பாஷையை ஆதரிப்பவர் இன்று யாரும் இல்லை கதையோ கட்டுரையோ — எல்லாம் இன்று சலித் பாஷையிலேயே எழுதப்படுகின்றன.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, தாகூருக்கும் முன்பு, வங்காள மொழியில் ஏற்பட்ட புரட்சியே இன்று தமிழ் மொழியிலும் ஆங்காங்குத் தோன்றுகிறது. மக்கள்தமிழும் இலக்கியத் தமிழும் ஆங்காங்கே மோதுகின்றன. எதிர் காலத்தில் இரண்டும் கலந்து ஒன்றித் தமிழ்மொழியாகத் தோன்றுமோ, அல்லது மக்கள்தமிழே அரியணை ஏறுமோ — இப்பொழுது ஒன்றும் கூறமுடியாது. மக்கள்தமிழும் தமிழ்தான் என்று ஒத்துக்கொள்ளும் பக்குவம் இன்னும் தமிழ் மக்களிடையே ஏற்படவில்லை. தமிழ் நாட்டிலும் ஒரு தாகூர் தோன்றினுல்தான் இப்போராட்டம் முடியும் போலும்.

# 2. யாழ்ப்பாணத் தமிழ்

## நோக்கம்

இக் கட்டுரை எழுதுந் தமிழையும், தமிழ் நாட்டு மக்கள் வீட்டில் பேசுந் தமிழையும், யாழ்ப்பாணத்தார் வீட்டில் பேசுந் தமிழையும் ஆராய்கின்றது. எழுதுந் தமிழைப் புத்தகத் தமிழ் என்றும், தமிழ் நாட்டு மக்கள் பேசுந் தமிழை நம் தமிழ் என்றும், யாழ்ப்பாண மக்கள் பேசுந் தமிழை யாழ்ப்பாணத் தமிழ் என்றும் இங்குக் குறிப்பிடுகிறோம். மேடைப் பேச்சுத் தமிழை விலக்கவே, வீட்டுத் தமிழ் எனப் பிரித்துக் கூறுகின்றோம்.

உச்சரிப்பை ஒலியெழுத்துக்களில் கொடுத்தால்தான் உச்சரிக்கும் முறையினைத் தெளிவாக விளக்க முடியும். அதற்கு வாய்ப்பின்மையால் தமிழிலேயே எழுதிக் காட்டி விளக்குகின்றோம். இதனால், ஆழச்சென்று வேறுபாடுகளை

---

யாழ்ப்பாணத் தமிழைப் பற்றிய விவரங்கள் திரு. என். சுசீந்திர ராஜா அவர்கள் பேச்சிலிருந்தே திரட்டப்பட்டன. இவர் தற்பொழுது தமது டாக்டர் பட்டத்திற்கு யாழ்ப்பாணத் தமிழை ஆராய்ந்து வருகின்றார். இவரது சொந்த ஊர் மயிலிட்டி காங்கேசன்துறை.

விளக்காமல், பரவலாக-மேற்போக்காக-உள்ள வேறுபாடு களையே இங்குக் கூறுகிறோம்.

## ஒரு நிகழ்ச்சி

யாழ்ப்பாணத்தில் நிகழும் ஒரு நிகழ்ச்சியை யாழ்ப் பாணத் தமிழிலேயே கீழே விளக்குகிறோம். இதில் எவ்வளவு புரிந்துகொள்ள முடிகிறது என்று நீங்களே கணக்கெடுத்துப் பாருங்கள்.

போன கிழமை கட்டாடியார் வந்து மாராப்பைக் காவிக்கொண்டு ஒழுங்கையிலே போய் மிதக்க விட்டுவிட்டு, கங்குவடலிக் கடலுக்குள்ளை குந்திக்கொண்டிருந்த சுப்பன் கக்கட்டமிட்டுச் சிரிச்சான். கட்டாடிக்கு என்ன கதைக் கிறது எண்டு தெரிய இல்லை. ஓரே கலக்கமயாய்ப் போச்சு. சுப்பன் மெள்ள அரக்கி அரக்கி வடலிக்குள்ளை இருந்து வெளிக்கிட்டான். சுப்பன் கமக்காரன்; நல்லாய் கடுக் கண்டவன். கட்டாடியோ இளந்தாரி.

சுப்பன் சும்மாட்டுக்குமேலை வச்சுக்கொண்டு வந்த கதியால் கட்டிலிருந்து ஒரு கதியாலை உருவி எடுத்தான். அதாலை கட்டாடிக்குச் சளரச் சளர சப்பல் வெளுவை குடுத்தான். பேந்து தன் கையிலை கொண்டுவந்த கந்து வாலை கட்டாடியைக் கட்டினான்.

அப்ப கையிலை கல்லாக்காரச் சரையோடை கந்தோரிலை இருந்துவந்த கலவாய்ச் சின்னையர் கொன்னை தட்டி தட்டி "ஏன்ரா கட்டாடியாரைக் கட்டுறாய்?" எண்டு சுப்பனைக்கேட்டான். சுப்பன் ஒண்டும் சொல்லாமல் மயிந்தினான்.

மோசம்போன கந்தற்றை அந்திரட்டி நாளைக்கு; சுறுக்காய் போனால்தான் நேரத்தோடை நாளைக்குக்

கிழக்கு வெளிக்க வண்டில் கட்டலாம். இரவைக்கு திருக்கல் கரத்தையை அன்னையிட்டை மாறவேணும். இப்படிச் சொல்லிக் கட்டாடி சுப்பனையும் சின்னயரையும் மண்டாடத் துவங்கினன். பேந்து, தோள் மூட்டிலே கட்டு எணடும், மாராப்பைக் காவிக்கொண்டு நாலு கட்டை நடையில் விடவேண்டும் எண்டும், மேல் கணகணக்குது, கச்சானும் வீசுது எண்டும் சொன்னன்.

சரி ஓட்ரு எண்டு சொல்லிவிட்டு கட்டாடி ஓழுங்கை முடக்கில் போகவிட்டு காணிலே கிடந்த ஊமலே எடுத்து அதாலே கட்டாடிக்கு எறிஞ்சான்.

**மலேயாளமா ?**

சாதாரணமாக யாழ்ப்பாணத் தமிழைக் கேட்ட நம் தமிழ் மாணவர்கள், "இதென்ன மலேயாளமா?" என்று கேட்கின்றனர். "ஏதோ தமிழ் போலவே இருக்கிறது. ஆனல், தமிழ் இல்லே" என்ற மயக்கமே அவர்களே இவ்வாறு எண்ணத் தூண்டுகிறது. சொற்களேப் பொறுத்தவரை யாழ்ப்பாணத் தமிழுக்கும் நாஞ்சில் தமிழுக்கும் மிகுந்த ஒற்றுமைகள் இருக்கின்றன. ஆனல், நம் தமிழிலோ அல்லது மலேயாளத்திலோ காணப்படுகின்ற அவ்வளவு மூக்கொலிகள் யாழ்ப்பாணத் தமிழில் இல்லே.

மலேயாளம் தமிழிலிருந்து வேருய மொழி என்ருல், யாழ்ப்பாணத் தமிழையும் வேறு மொழி என்று கூறலாமோ என்ற ஐயமே எழுகின்றது. இரண்டு தமிழையும் நெருங்கப் பிணேப்பது தமிழ் எழுத்துக்களே. மலேயாளம் வேறு எழுத்தைப் பெற்று வடமொழித் தாக்குதல் மிகுந்து வேருயது.

யாழ்ப்பாணத் தமிழர் பேசுவதைக் கேட்டால் மேடும் பள்ளமுமாக உயர்ந்து தாழ்ந்து செல்வதைக் காணலாம்.

ஆனால், இந்த மேடுபள்ளம் ஒரு வரன்முறைக்கு உட்பட்டே செல்லுகிறது. ஒவ்வொரு சொல்லும் முதலசையில் ஒலியழுத்தம் (Stress) பெறும். சொற்களைத் தனியாக உச்சரிக்கும்பொழுது இந்த இயல்பைக் காணேம். நம்மைப் போலவே சொல்லில் எல்லா அசைகளையும் ஒன்றுபோல் உச்சரிக்கின்றனர். ஆனால், பேசும்பொழுது ஒவ்வொரு சொல்லிலும் முதலசையை எடுத்துச் சொல்லுகின்றனர். நாம் பேசும்பொழுது சொல்லில் எல்லா அசைகளையும் ஓரே மாதிரியான ஒலியழுத்தத்துடனேயே உச்சரிக்கின்ரேம்.

**உயிர்**

இனி உயிர், மெய் இவற்றில் காணப்படுகின்ற வேறுபாடுகளைக் காண்போம். இவ்வாறு விளக்கும்பொழுது புத்தகத் தமிழை அடிப்படையாக வைத்துக்கொண்டே விளக்குவோம்.

(1) புத்தகத்தமிழில் குறிலும் நெடிலுமாகப் பத்துத் தனியுயிர்கள் இருக்கின்றன. (ஐ. ஔ இரண்டையும் உயிரை அடுத்த மெய்– அய், அவ் என்றே கொள்ளலாம்). ஆனல், இன்று நாம் பேசுந் தமிழில் எத்தனையோ புதிய உயிர்கள் புகுந்துவிட்டன. அவ்வாறு புகுந்த மூக்குயிர்கள் (Nasal vowels) பல. அவன், இவன், வந்தான், போனுன், குடம், மடம், வடம், வந்தோம், போனேம் என்ற மெல்லின ஈற்றுச் சொற்களில் நாம் இறுதி மெல்லினங்களை உச்சரிப்பதில்லை. இச்சொற்களில் ஈற்றில் மூக்குயிர்களையே உச்சரிக்கின்ரேம். இந்த மூக்குயிர்களைக் காட்ட + என்ற அடையாளம் இட்டு எழுதிக்காட்டுவோம். இச்சொற்களை அவெ + , இவெ + , வந்தா +. போனு + கொடொ +, மடொ +, வடொ +, வந்தோ +, போனே + என்று உச்சரிக்கின்ரேம். இதனல், நம் தமிழில் மூக்குயிர்கள் குறில்

நான்கு, நெடில் நான்கு ஆக எட்டுப் புகுந்துவிட்டன. யாழ்ப்பாணத் தமிழில் மூக்குயிர்களே இல்லை. மெல்லின ஈற்றுச் சொற்களை மெல்லின ஈருகவே உச்சரிக்கின்றனர்.

(2) நாரி, பாரி, லாரி, மாரி என்ற இச்சொற்களைப் புத்தகத் தமிழாகவே நாம் உச்சரிக்கின்றோம். ஆனால், யாழ்ப்பாணத் தமிழில் ஆகாரத்திற்குப் பதில் mat, cat என்ற ஆங்கிலச் சொற்களில் உச்சரிக்கப்படுகின்ற உயிரின் நெட்டுயிரை உச்சரிக்கின்றனர். இவை "ரி" என முடிந்த ஆகார முதலசை பெற்ற ஈரசைச் சொற்கள்.

(3) நம் தமிழில் முதலசையில் வரும் இகரமும் உகரமும், அடுத்து அகரம் வரும்பொழுது முறையே எகரமாகவும் ஒகரமாகவும் மாறுகின்றன. ஆனால், யாழ்ப்பாணத் தமிழில் இம்மாற்றம் ஏற்படுவது இல்லை. (உ-ம்) இடம்-எடம், இணங்கு-எணங்கு, திறப்பு-தெறப்பு, பிறப்பு-பெறப்பு, பிரண்டை-பெரண்டை, உலகம்-ஒலகம், உறங்கு-ஒறங்கு, குரங்கு-கொரங்கு, குடை-கொடை, குலை-கொலை.

இவ்விதிக்கு உட்படாத சொற்களும் நம் தமிழில் இருக்கின்றன. (உ-ம்) இவர், பிள்ளை, தில்லை, குட்டையன் முதலியன.

(4) மொழிமுதலில் வருகின்ற இகரம் சில சொற்களில் நம் தமிழில் மறைந்து விடுகிறது. யாழ்ப்பாணத் தமிழில் இச்சொற்கள் புத்தகத் தமிழைப் போலவே வழங்குகின்றன. (உ-ம்) இம்பா-ம்பா, இந்தா-ந்தா, இரண்டு-ரண்டு. இம்பா என்பது ஆடுமாடுகளை அழைக்கப் பயன்படுத்தும் ஒரு குறிப்புச் சொல். யாழ்ப்பாணத் தமிழில் இது அம்பாய் என வழங்குகிறது.

(5) அநேக சொற்களில் நம் தமிழில் இரண்டாவது அசையில் நிற்கும் உயிர் மறைந்து விடுகிறது. யாழ்ப்

பாணத் தமிழில் புத்தகத் தமிழ் போலவே இச்சொற்கள் வழங்குகின்றன. (உ-ம்) பாக்கியம்–பாக்யம், ஓடினான்–ஓட்னா+, பட்டினம்–பட்னொ+, எவ்வளவு–எவ்ளவு, சொல்வான்–சொல்வா+, திட்டினான்–திட்னா+, கத்தினான்–கத்னா+, வாழ்த்தினான்–வாழ்த்னா+.

(6) வரஇல்லை, போகஇல்லை, தெரியஇல்லை என்று இல்லை என்பதை அகரத்தின்முன் விட்டிசைத்தும், அது அள் என்று உகரத்தின்முன் அகரத்தை விட்டிசைத்தும் யாழ்ப்பாணத் தமிழில் கூறுகின்றனர். நம் தமிழில் இவை வரவில்லை, தெரியவில்லை என வகர உடம்படுமெய் பெற்றும், அதுஅள் என்பது அதுகள் என்றும் வழங்கும்.

## மெய்

**1. ஒலிப்புடை அடைப்பொலிகள் (Voiced Stops)** யாழ்ப்பாணத் தமிழில் மொழிமுதலில் வருதல் இல்லை. கணபதி, காந்தி, ஜன்னல், டாக்டர், தர்மம், பாபம் போன்ற சொற்களில் நம்மவரில் பலர் மொழி முதலில் **g, j, ḍ, d, b** என்பனபோன்ற ஒலிப்புடை ஒலிகளையே ஒலிக்கின்றனர். யாழ்ப்பாணத் தமிழில் இவை மொழி முதலில் ஒலிப்பிலா அடைப்பொலிகளாகவே (Voiceless Stops) உச்சரிக்கப்படுகின்றன. இங்கு ஜன்னல் > யன்னல் என்றாகிறது; டாக்டர் > இடாக்குத்தர் என்றாகிறது.

(2) மொழியிடை மெல்லினத்தின் பின்பு வருகின்ற வல்லினங்கள், ங்க், ஞ்ச், ண்ட், ந்த், ன்ற், ம்ப் என்பன போன்ற மயக்கங்களில், யாழ்ப்பாணத் தமிழில் ஒலிப்புடை ஒலியாகவும், ஒலிப்பிலா ஒலியாகவும் கட்டிலாது மாறி ஒலிக்கப்படுகின்றன. புத்தகத் தமிழிலும் இவை ஒலிப்புடை அடைப்பொலிகளாகவே ஒலிக்கப்படுகின்றன.

(3) பாய், காய், நாய், வாய் என்ற நெட்டெழுத்தை அடுத்த மகரவீற்று ஓரசைச் சொற்களை நாம் பா, கா, நா, வா என வழங்குகின்றோம். யாழ்ப்பாணத் தமிழில் இச் சொற்கள் mat, cat என்ற ஆங்கிலச் சொல்லில் வருகின்ற உயிரின் நெட்டெழுத் தீறாக வழங்குகின்றன. ஆனால், நோய் என்ற சொல்லை நோய் என்றே வழங்குகின்றனர்.

(4) நெய், மெய், செய், பெய், பொய் என்ற சொற்களை நாம் நெய்யி, மெய்யி, செய்யி, பெய்யி, பொய்யி என வழங்குகின்றோம். யாழ்ப்பாணத் தமிழில் இவை புத்தகத் தமிழாகவே வழங்குகின்றன. இவை யகரவீற்று குற்றெழுத்து ஓரசைச் சொற்கள்.

(5) பிள்ளை, சட்டை, கட்டை, கடை, வடை, மலை, மடை முதலிய ஐகாரவீற்றுச் சொற்களை நாமும் யாழ்ப்பாணத்தவரும் ஐகாரத்திற்குப்பதில் man என்பதில் வருகின்ற உயிரை இறுதியில் உச்சரிக்கின்றோம்.

(6) பெண், கண், பல், வில், கள், எள், முதலிய குற்றொற்றிறுதி ஓரசைச் சொற்களை நாம் பெண்ணு, கண்ணு, பல்லு, வில்லு, கள்ளு, எள்ளு என்று வழங்குகின்றோம். யாழ்ப்பாணத் தமிழில் பெண், கண் முதலிய மெல்லின ஈற்றுச்சொற்கள் புத்தகத் தமிழைப் போலவும், மற்றவை நம் தமிழைப்போலவும் வழங்குகின்றன.

(7) மெய்யெழுத்தில் முடியும் மற்ற சொற்கள் எல்லாம் நம்தமிழில் உகர உயிர்பெற்று வழங்குகின்றன. யாழ்ப்பாணத் தமிழில் இவை புத்தகத் தமிழாகவே வழங்குகின்றன. (உ-ம்) பால் > பாலு, தோல் > தோலு, உயிர் > உயிரு, தயிர் > தயிரு, கடல் > கடலு முதலியன.

(8) ன்ற் என்ற மெய்ம்மயக்கம் நம் தமிழில் ண்ண் என்று வழங்குகின்றது. யாழ்ப்பாணத் தமிழில் ண்ட் என்று வழங்குகின்றது. (உ-ம்) கன்று-கண்ணு-கண்டு, ஒன்று – ஒண்ணு – ஒண்டு, என்று – எண்ணு – எண்டு, நின்றான் – நிண்ணா+-நிண்டான், தின்றான் – திண்ணா+ – திண்டான்.

மேலே காட்டிய ஒற்றுமை வேற்றுமைகள் நம் தமிழை விட யாழ்ப்பாணத் தமிழே புத்தகத் தமிழோடு அதிகம் ஒத்து வருகின்றது என்பதைக் காட்டுகின்றன. ஒரு மொழி பிறந்த இடத்தில் நெடுங்காலம் வாழ்வதால் அதன் பேச்சு மொழியில் மாற்றங்கள் மிகுந்து வருகின்றன. புகுந்த இடத்தில் அது இளமையாகவே இருப்பதால் புத்தக மொழிக்கும் பேச்சு மொழிக்கும் வேறுபாடு குறைவாகவே காணப்படும். இன்று இங்கிலாந்தில் பேசப்படுகின்ற ஆங்கிலம் ஒருவர்க்கொருவர் புரிந்துகொள்ள முடியாத அளவு இடந்தோறும் மாறுபட்டு இருக்கின்றது. ஆனால், அமெரிக்கர் ஆங்கிலத்தில் அவ்வளவு வேறுபாடுகள் இல்லை. இந்த உண்மையையே நம் தமிழும் யாழ்ப்பாணத் தமிழும் இன்று காட்டுகின்றன.

### சுட்டு வினா

(1) பழந்தமிழில் சேய்மைச்சுட்டு, அண்மைச்சுட்டு, இடைச்சுட்டு என்று மூன்று சுட்டுகள் வழக்கிலிருக்கின்றன. இக்காலத்தில் புத்தகத் தமிழிலும் பேச்சுத் தமிழிலும் அது, இது என்று இரண்டே சுட்டுகள் வழக்கிலிருக்கின்றன. யாழ்ப்பாணத் தமிழில் அது, இது, உது என்று மூன்று வழக்கிலிருக்கின்றன.

(2) அங்கு, இங்கு, எங்கு என்ற சுட்டு வினா எச்சங்களை நம் தமிழில் சிலவிடங்களில் அஞ்ச, இஞ்ச, எஞ்ச என்று வழங்குகின்றனர். யாழ்ப்பாணத் தமிழில்

இஞ்ச என்பதொன்றே இவ்வாறு வழங்குகின்றது. மற்றைய இரண்டும் புத்தகத் தமிழாகவே வழங்குகின்றன.

(3) நம் தமிழில் சில வகுப்பினர் மனைவியை அழைக்க இஞ்ச என்பதைப் பயன்படுத்துகின்றனர். யாழ்பாணத் தமிழில் கணவன் மனைவியை இஞ்சாரும் என்று சில இடங்களில் அழைக்கின்றான். மனைவி கணவனை இஞ்சாருங் கப்பா என்று சில இடங்களில் அழைக்கின்றாள்.

(4) இப்பொழுது, அப்பொழுது, எப்பொழுது என்ற சுட்டுவினா எச்சங்களை நாம் இப்போ, அப்போ, எப்போ என்று வழங்குகின்றோம். யாழ்ப்பாணத் தமிழர் இப்ப, அப்ப, எப்ப என வழங்குகின்றனர்.

## மூவிடப்பெயர்கள்

| | புத்தகத் தமிழ் | நம் தமிழ் | யாழ்ப்பாணத் தமிழ் |
|---|---|---|---|
| **தன்மை** | | | |
| 1 த. ஒ. | நான் | நா + | நான் |
| 2. த. ப. (உளப்பாடு) | நாம் | நாமொ | நீங்கள் |
| 3. த.ப. (உளப்படுத்தா) | நாங்கள் | நாங்க | நாங்கள் |
| **முன்னிலை** | | | |
| 4. தாழ்ந்த சாதியினர் உயர்ந்த சாதியினரைக் குறிப்பிடுவது | — | — | நாம் |
| 5. மு. ஒ | நீ | நீ | நீ |

| | புத்தகத் தமிழ் | நம் தமிழ் | யாழ்ப்பாணத் தமிழ் |
|---|---|---|---|
| 6. மு. ஒ. (மதிப்பு) | நீர், நீங்கள், தாங்கள் | நீங்க | நீர், நீங்கள் |
| 7. மு. ப. (மதிப்பு) | நீங்கள் | நீங்க | நீங்கள் |
| **படர்க்கை** | | | |
| 8. ப. ஆ. ஒ. | அவன் | அவெ + | அவன் |
| 9. ப. ஆ. ஒ. (மதிப்பு) | அவர், அவர்கள் | அவங்க | அவர் |
| 10. ப. ஆ. ப. (மதிப்பு) | அவர்கள் | அவங் கெல்லா + | அவெ |
| பெ. ப. ,, | ,, | ,, | அவெயள் |
| 11. ப. ஆ. ப. (மதியாமை) | — அவனுஒ | அவனுக, | அவங்கள் |
| 12. ப. பெ. ஒ. | அவள் | அவ | அவள் |
| 13. ப. பெ. ஒ. (மதிப்பு) | — | — | அவ |
| 14. ப. பெ. ப. (மதியாமை) | — | அவளுக அவளுஒ | அவளவெ |
| 15. அஃறிணை ஒருமை | அது | அது | அது |
| 16. அஃறிணைப் பன்மை | அவை, அவைகள் | அதுஒ | அதுஅள் |

தன்மைப் பன்மையில் (2) உளப்பாட்டுத்தன்மை உளப்படுத்தாத்தன்மை என இரண்டு நம் தமிழில் இருக்கின்றன. ஆனால், யாழ்ப்பாணத் தமிழில் இந்த வேறுபாடு இல்லை.

தாழ்ந்த ஜாதியினர் உயர்ந்த ஜாதியினரை முன்னிலையில் யாழ்ப்பாணத் தமிழில் **நாம்** (4) என்று குறிப்பிடுகின்றனர். நாம் புத்தகத் தமிழில் **தாங்கள்** என்றும், நம் தமிழில் **நீங்க** என்றும் வழங்குகிறோம். "தாங்கள் வந்து வீட்டைப் பார்க்க வேண்டும்" என்பது புத்தகத் தமிழ். நீங்க வந்து வீட்ட பார்க்கணுங்க" என்பது நம் தமிழ். "நாம் வந்து வீட்டைப் பார்க்க" என்பது யாழ்ப்பாணத் தமிழ். புத்தகத் தமிழிலும் இவ் வழக்குகள் வயதில் முதிர்ந்தோர், மதிப்பிற்குரியோர் (உயர்ந்த ஜாதியினர் இதில் அடங்குவர்) இவர்களைக் குறிக்கப் பயன்படுத்தப் படுகின்றன. எனவே, இவ் வழக்கை முன்னிலை மதிப்பு (6) என்ற பிரிவில் கூறுகிறோம். ஆனால், யாழ்ப்பாணத் தமிழில் **நாம்** என்ற சொல்லைத் தாழ்ந்த ஜாதியினர் உயர்ந்த ஜாதியினரை முன்னிலைப்படுத்திக் கூறும்பொழுது பயன்படுத்துகின்றனர். மற்ற இடங்களில் முன்னிலை ஒருமை மதிப்பில் **நீர், நீங்கள்** (6) எனவும், பன்மை மதிப்பில் **நீங்கள்** (7) எனவும் கூறுகின்றனர். இவற்றில் **நீர்** சிறுமதிப்பு; **நீங்கள்** பெருமதிப்பு. ஒரு மாணவன் தன் ஆசிரியரை **நீங்கள்** என்றே குறிப்பிடுவான் (பெரு மதிப்பு). ஆனால், தன் நண்பனை **நீர்** என்றே குறிப்பிடுவான் (சிறுமதிப்பு). நண்பனை **நீங்கள்** என்று கூற மாட்டான்.

புத்தகத் தமிழில் படர்க்கை ஆண்பால் பன்மை மதியாமைக்கும் (11), அவ்வாறே பெண்பால் மதியாமைக்கும் (14) தனிச் சொற்கள் இல்லை. அவசியம் ஏற்படும் பொழுது பன்மை மதிப்பிற்குரிய சொற்களையே பயன் படுத்துகின்றனர். நம் தமிழிலும், யாழ்ப்பாணத் தமிழிலும் இவற்றிற்குத் தனிச்சொற்கள் இருக்கின்றன.

அஃறிணை ஒருமையில் வரும் அது என்பதை நம்மவரில் கணவனைச் சுட்டுவதற்கும், கடவுள், மடத்தலைவர்கள்

இவர்களைச் சுட்டுவதற்கும் பயன்படுத்துகின்றனர். யாழ்ப்பாணத் தமிழில் கடவுளை மட்டும் குறிக்கச் சிலர் பயன்படுத்துகின்றனர்.

அஃறிணைப் பன்மையில் வரும் **அதுஅள்** என்பதை உயர்திணை ஆண்பன்மை, பெண்பன்மை, இரண்டும் கலந்த பன்மை ஆகிய மூன்றற்கும் யாழ்ப்பாணத் தமிழில் பயன்படுத்துகின்றனர். நம் தமிழில் சில இடங்களில் **அதுஒ** என்பதையே பெண்பன்மையைக் (மதியாமை) குறிப்பிடப் பயன்படுத்துகின்றனர்.

### வேற்றுமை

ஆறும் வேற்றுமைக்கு யாழ்ப்பாணத் தமிழில் **ரெ, எடெ** என்று இரண்டு உருபுகள் காணப்படுகின்றன. நம் தமிழில் பெரும்பாலும் ஆறும் வேற்றுமை உருபு தொக்கியே நிற்கிறது. (உ—ம்) அவெ + பென்சில் — அவன்ரெ பெஞ்சில் (யாழ்ப்); அவ பென்சில்—அவளெடெ பெஞ்சில் (யாழ்ப்). புத்தகத் தமிழிலும் அது, உடைய என்ற உருபுகள் பெரும்பாலும் தொக்கியே நிற்கும். மற்றபடி வேற்றுமை உருபுகளில் நம் தமிழும் யாழ்ப்பாணத் தமிழும் ஒன்று போல் இருக்கின்றன. ஆனால், இரண்டும் புத்தகத் தமிழிலிருந்து மிகவும் வேறுபடுகின்றன.

**ரெ** என்பது ஆறும்வேற்றுமை உருபாக மலையாளத்திலும் வருகிறது.

### வினை

இங்கு வினைமுற்றுக்களில் காணப்படுகின்ற வேறுபாடுகளை மட்டுமே வரிசைப்படுத்திக் காட்டுகிறோம். எண்கள் மூவிடப் பெயர்களில் கொடுக்கப்பட்ட எண்களைக் குறிக்கும். மூன்று தமிழிலும் உள்ள மூவிடப்

பெயர்களைக் கொடுத்து அவற்றிற்கேற்ற வினைமுற்றுக்களை நிகழ்காலம், எதிர்காலம், இறந்தகாலம் என்ற முறையில் தந்திருக்கிறோம். இடப்பெயர்களைப் புத்தகத் தமிழ், நம் தமிழ், யாழ்ப்பாணத் தமிழ் என்ற வரிசையில் கொடுத்திருக்கிறோம், இல்லாதவற்றிற்குக் கொடுக்கவில்லை. காலங்காட்டும் இடைநிலை முதலியவற்றில் மூன்று தமிழும் வேறுபடுகின்றன. இவைகளை எல்லாம் இங்குக் காட்ட முயலவில்லை.

| மூவிடப் பெயர்கள் | நிகழ்காலம் | எதிர்காலம் | இறந்தகாலம் |
|---|---|---|---|
| 1. நான் | போகிறேன் | போவேன் | போனேன் |
| நா + | போறே + | போவே + | போனே + |
| நான் (யாழ்ப்) | போறன் | போவென் | போனென் |
| 2, 3 நாம் நாங்கள் | போகிறோம் | போவோம் | போனோம் |
| 2, 3 நாமொ நாங்க | போறோ + | போவோ + | போனோ + |
| 3. நாங்கள் (யாழ்ப்) | போறம் | போவம் | போனம்<br>போனனுங்கள் |
| 4. நாம் (யாழ்ப்) | போகுது<br>போகுதாக்கும் | போம்<br>போகும்<br>போமாக்கும்<br>போகுமாக்கும் | போனது<br>போனதாக்கும் |
| 5. நீ | போகிறாய் | போவாய் | போனாய் |
| நீ | போறெ | போவெ | போனெ |
| நீ (யாழ்ப்) | போறே | போவெ | போனெ<br>போனனீ |

| மூவிடப் பெயர்கள் | நிகழ்காலம் | எதிர்காலம் | இறந்தகாலம் |
|---|---|---|---|
| 6, 7 நீர் | போகிறீர் | போவீர் | போனீர் |
| நீர் (யாழ்ப்) | போறீர் | போவீர் | போனீர்<br>போனனீர் |
| 7. நீங்கள்<br>தாங்கள் | போகிறீர்கள் | போவீர்கள் | போனீர்கள் |
| நீங்க | போறீங்க | போவீங்க | போனீங்க |
| நீங்கள்<br>(யாழ்ப்) | போறியள்<br>போறீங்கள் | போவியள் | போனியள்<br>போனனீங்கள் |
| 8. அவன் | போகிறான் | போவான் | போனான் |
| அவ + | போறா + | போவா + | போனா + |
| அவன்<br>(யாழ்ப்) | போறான் | போவான் | போனான்<br>போனவன் |
| 9. அவர்<br>(மதிப்பு) | போகிறார் | போவார் | போனார் |
| அவர்கள் | போகிறார்கள் | போவார்கள் | போனார்கள் |
| அவங்க | போறாங்க | போவாங்க | போனாங்க |
| அவர்<br>(யாழ்ப்) | போறார் | போவார் | போனார்<br>போனவர் |
| 10. அவர்கள் | போகிறார்கள் | போவார்கள் | போனார்கள் |
| அவங்-<br>கெல்லா + | போறாங்க | போவாங்க | போனாங்க |
| அவெ<br>(யாழ்ப்) | போகினம்<br>போயினம் | போவினம் | போனவெ<br>போச்சினம் |
| அவெயெள்<br>(யாழ்ப்) | போகினம்<br>போயினம் | போவினம் | போனவெ<br>போச்சினம் |

| மூவிடப் பெயர்கள் | நிகழ்காலம் | எதிர்காலம் | இறந்தகாலம் |
|---|---|---|---|
| 11. அவனுஒ | போறானுஒ | போவானுஒ | போனானுஒ |
| அவனுக | போறானுக | போவானுக | போனானுக |
| அவங்கள் | போறாங்கள் | போவங்கள் | போனாங்கள் |
| (யாழ்ப்) | | | போனவங்கள் |
| 12. அவள் | போகிறாள் | போவாள் | போனாள் |
| அவ | போறா | போவா | போனா |
| அவள் (யாழ்ப்) | போறாள் | போவாள் | போனாள் |
| | | | போனவள் |
| 13. அவ (யாழ்ப்) | போறா | போவா | போனா |
| | | | போனவா |
| 14. அவளுஒ | போறாளுஒ | போவாளுஒ | போனாளுஒ. |
| அவெளவெ (யாழ்ப்) | போறாளெவெ | போவாளெவெ | போனாளெவெ |
| | | | போனவளெவெ |
| 15. அது | போகுது | போகும் | போனது |
| | | | போச்சுது |
| 16. அவை | போகின்றன | போகும் | போயின |
| அதுஒ | போவுதுஒ | போகு+ | போச்சு |
| ௨துஅள் ( பாழ்ப்) | போகுது அள் | போகும் | போனது அள் |
| | | போகுங்கள் | போச்சுது அள் |

யாழ்ப்பாணத் தமிழில் இறந்தகால வினைமுற்றில் இரண்டு வடிவங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று இறந்தகாலப் பெயரெச்சத்தோடு மூவிடப் பெயர்கள் இணைந்து இறந்தகால் வினைமுற்றாக வருவது. (உ-ம்) போனனுங்கள், போனனுன், போனனீர், போனனீங்கள் போனவன், போனவர் முதலியன. போனவன, போனவர் என்பன புத்தகத் தமிழிலும் நம் தமிழிலும் வினையாலணையும் பெயர்களாக வருகின்றன. மற்ற வழக்குகள் நம் தமிழிலும் புத்தகத் தமிழிலும் இல்லை.

இவ்வினை முற்றுக்கள் யாழ்ப்பாணத் தமிழில் வினையாலணையும் பெயராகவும் வருகின்றன. "நாங்கள் போனனுங்கள்" என்ற இடத்தில் போனனுங்கள் வினைமுற்று. "போனனுங்கள் பார்த்து வந்திருக்கலாம்" என்னும் பொழுது போனனுங்கள் வினையாலணையும் பெயர். இது வினைமுற்றும் வினையாலணையும் பெயரும் ஓரே வடிவைப் பெற்று நின்ற இடைக்காலத் தமிழின் நிலையையே நினைவூட்டுகின்றது.

## சொற்கள்

நம் தமிழிலும் புத்தகத் தமிழிலும் வழங்காத் சொற்கள் பல யாழ்ப்பாணத் தமிழில் வழங்குகின்றன. இக்கட்டுரையின் இரண்டாவது பகுதியில் கொடுக்கப் பட்ட யாழ்ப்பாண நிகழ்ச்சியில் காணப்படுகின்ற சொற்களை — நம் தமிழிலோ, புத்தகத் தமிழிலோ காணப் படாத சொற்களை மட்டும், இங்குத் தருகிறோம். கட்டாடியார் — வண்ணன்; மாராப்பு — துணி மூட்டை; காவி — தூக்கி; ஒழுங்கை — சிறிய வீதி;. மிதக்க விட்டுவிட்டு — சென்று சேரும்பொழுது; கங்கு வடலி — இளம்பனை; கக்கட்டமிட்டு — உரக்கச் சப்தமிட்டு; கதைக்கிறது —

சொல்கிறது; கலக்கடி—குழப்பம்; அரக்கி அரக்கி—நகர்ந்து நகர்ந்து; வெளிக்கிட்டான் — வெளியே வந்தான்; கமக்காரன் — விவசாயி; கடுக்கண்டவன் — பாலிய பருவம் கடந்தவன்; இளந்தாரி—இளையவன்; கதியால்—வேலியில் நாட்டும் கிளை; சப்பல் வெளுவை குடுத்தான் — அடி அடி என்று அடித்தான்; பேந்து—பின்பு; கந்துவான்—எருத்து மாடுகளைப் பிணைத்துக் கட்டும் கயிறு; கல்லாக்காரம் — பனங்கற்கண்டு; சரை — பார்சல்; கந்தோராலை — அலுவலகத்திலிருந்து; கலவாய் — அதிகம் பேசுபவன்; மயிந்திஞன் — பதுங்கிஞன்; கந்தற்றை அந்திரட்டி — இறந்தவருடைய கர்மாதிக்கிரியை; வண்டில் — வண்டி; இரவை இரவு; திருக்கல் கரத்தை—ஒருவகை வண்டி; அண்ணை—அண்ணன்; கச்சான் — மேற்குத் திசையிலிருந்து வீசும் காற்று; ஒழுங்கை முடக்கு—சிறு வீதியிலுள்ள திருப்பம்; காணில்—ரோட்டில் உள்ள நடைபாதை; ஊமல்—காய்ந்த பனங்கொட்டை.

அனேகம் சொற்கள் நாஞ்சில் தமிழுக்கும் யாழ்ப்பாணத் தமிழுக்கும் பொதுவாக இருக்கின்றன. இவைகளைத் தமிழ்நாட்டில் மற்ற இடங்களில் காண்பது அரிது. இவற்றில் சில இராமநாதபுர மாவட்டம் நாட்டுக்கோட்டைச் செட்டியார் பேசும் தமிழோடும் ஒத்து இருக்கின்றன. மாதிரியாகச் சில சொற்களைக் கீழே தருகிறோம்: (உ-ம்) அப்பு — அப்பன்; இருக்கிறது — உட்காருவது; கிடுகு — தென்னை ஓலையை முடைந்து கட்டிய ஒன்று; குழைத்து — பிசைந்து; குழை — இலை, தழை; கடகம்— பனை நாரால் முடைந்த ஒரு வகைப் பெட்டி; சிரட்டை — கொட்டாங் கச்சி; சுளகு — பனை நாரால் முடைந்த ஒரு வகை முறம்; சீனி—சர்க்கரை; சர்க்கரை—பனைவெல்லம்;

பட்டை – கிணற்றில் தண்ணீர் இறைக்கப் பனை ஓலையால் முடைந்த ஒன்று; நயினர் — தாழ்ந்த ஜாதியினர் உயர்ந்த ஜாதிப் பண்ணையாரைக் குறிப்பிடுவது.

மலையாளத்திற்கும் யாழ்ப்பாணத் தமிழுக்கும் பொது வான சில சொற்கள். (உ-ம்) பறைந்தான்—சொன்னான்; போகட்டெ—போகட்டுமா? வரட்டுமா முதலியன. ஆறும் வேற்றுமை உருபு மலையாளத்திலும் யாழ்ப்பாணத் தமிழிலும் ஒன்றுபோலவே இருக்கிறது.

## முடிவு

இதுவரை காட்டிய இயல்புகள் நம் தமிழைவிட யாழ்ப்பாணத்தமிழிலேயே புத்தகத் தமிழோடு மிகவும் ஒத்து வருகின்றது என்பதைக் காட்டுகின்றன. இதற் குரிய காரணங்களில் ஒன்றாக, தமிழ் புகுந்த இடம் யாழ்ப்பாணமாக இருப்பதை முன்பு கூறினோம். மற்றொன்று ஈழநாடு தமிழ் நாட்டிலிருந்து கடலால் பிரிக்கப்பட்டுத் தனியாக நிற்பது. ஈழநாட்டுள்ளும் யாழ்ப்பாணம் குடா நாடாகத் தனியே நிற்கின்றது நம் தமிழுக்கும் யாழ்ப் பாணத் தமிழுக்கும் எல்லைக்கோடு கடலே. இதனால் நம் தமிழுடன் வாழ்ந்த பல மொழிகளோடு யாழ்ப்பாணத் தமிழ் உறவுகொள்ளவில்லை, கன்னடம், தெலுங்கு, வட மொழி, மராத்தி முதலிய எத்தனையோ மொழிகளோடு நம் தமிழ் நெருங்கிய உறவு கொண்டது. இதனால் எத்தனையோ புதிய ஒலிகள் நம் தமிழில் புகுந்தன. இன்று மொழி முதலில் காணப்படுகின்ற ஒலிப்புடை அடைப் பொலிகள் (voiced stops) இவ்வுறவால் தோன்றியவை களே. யாழ்ப்பாணத்தமிழில் மொழிமுதலில் இன்னும் ஒலிப்புடை ஒலிகள் வருதல் இல்லை. மொழி இடையில் மெல்லினத்தை அடுத்த அடைப்பான்கள் ஒலிப்புடையன வாகவும், ஒலிப்பில்லாதனவாகவும் கட்டிலாது மாறிமாறி

வருகின்றன. இது பழந்தமிழ் நிலையிலிருந்து நம் தமிழைப் போல மாறிவருகின்ற யாழ்ப்பாணத் தமிழின் நிலையைக் காட்டுகிறது. பிற்காலத்தில் இது எவ்வாறு ஒரு நிலை எய்தும் என்று கூறமுடியாது. நம்மவர் தொடர்பால் எல்லாம் ஒலிப்புடை அடைப்பான்களாகலாம். ஈழத் தமிழரிடை நம் தமிழ் தனியியல்புடையது என்ற எண்ணம் வலுப்பெற்று வருவதால் பழைய நிலைக்கே திருப்பவும் செல்லலாம்.

இந்த ஒலிப்புடை அடைப்பொலிகள் மொழிமுதலிலும் உயிரிடையேயும் சென்னைத் தமிழில் மிகுந்து காணப்படுகின்றன. அங்கிருந்து தெற்கே செல்லச் செல்லக் குறைந்து கொண்டே வருகின்றன. திருநெல்வேலித் தமிழில் மிகக் குறைந்து, யாழ்ப்பாணத் தமிழில் மறைந்து விடுகின்றன.

நம் தமிழில் காணப்படாத பழந்தமிழ் இயல்புகள் பலவற்றை யாழ்ப்பாணத் தமிழில் காண்கிறோம். பழந் தமிழ் இயல்புகளைக் காண நம் இலக்கண இலக்கியங்கள் ஓரளவு பயன்படுகின்றன. தமிழ்ப் பேச்சுக்களும் **(Tamil dialects)** இதற்கு மிகவும் துணைபுரியும்.

இப்பேச்சுத் தமிழ்களெல்லாம் ஒரு மூலத்திலிருந்து கிளைத்திருக்க வேண்டும். இப்பேச்சுத் தமிழையும் பல பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவிற்கும் மூலத்தைக் காணமுடியும். இம்முறையில் தென்னாட்டுத் தமிழ், யாழ்ப் பாணத் தமிழ், மலையாளம் மூன்றும் ஒரே மூலத்திலிருந்து கிளைத்திருக்க வேண்டும். யாழ்ப்பாணத் தமிழர் வரலாறும் இந்தக் கொள்கையை வலியுறுத்தும். இக் கொள்கை இனிமேல்தான் தெளிவாக விளக்கப்படவேண்டும்.

---

# 3. தமிழின் ஒலியனியல்

1. இன்று எழுதப்படும் தமிழின் ஒலியன்களை விளக்குகின்றது இக்கட்டுரை. எழுதப்படும் தமிழைப் படிக்கும்பொழுது கட்டுரை ஆசிரியர் ஒலிக்கின்ற முறையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படுகிறது. இது பெரும்பான்மை மக்களுக்கு ஒத்திருக்கலாம். தமிழ் எழுத்துக்களையே பயன்படுத்தி ஒலியன்களை விளக்குகிறோம்.

2.1 தமிழில் பத்து உயிர்களும் பத்தொன்பது மெய்களும் ஒலியன்களாக வருகின்றன.

2.2 உயிர் ஒலியன்களையும் மெய் ஒலியன்களையும் கீழே இருப்பது போன்று ஒலிப்பட்டியலில் அடக்கிக் காட்டலாம்.

**உயிர் ஒலியன்கள்**

**குறில்**

| | முன் | நடு | பின் |
|---|---|---|---|
| மேல் | இ | | உ |
| இடை | எ | | ஒ |
| கீழ் | | அ | |

**நெடில்**

| | முன் | நடு | பின் |
|---|---|---|---|
| மேல் | ஈ | | ஊ |
| இடை | ஏ | | ஓ |
| கீழ் | | ஆ | |

## மெய் ஒலியன்கள்

| | ஈரிதழ் | பல்லிதழ் | நுனிநா பல் | நுனிநா நுனியண்ணம் | நாவளை | இடைநா இடையண்ணம் | கடைநா கடையண்ணம் |
|---|---|---|---|---|---|---|---|
| அடைப்பான் | ப் | | த் | ற்ற்[1] | ட் | ச் | க் |
| மூக்கன் | ம் | | ந் | ன் | ண் | ஞ் | ங் |
| உரசுவான் | | | | | ழ் | | |
| மருங்கன் | | | | ல் | ள் | | |
| வருடுவான் | | | | ர் | | | |
| ஆடுவான் | | | | ற் | | | |
| அரையுயிரன் | | வ் | | | | ய் | |

3.1 வேறுபாடு காட்டும் இரட்டையர் — உயிர்

| | |
|---|---|
| இடு | ஈடு |
| எடு | ஏடு |
| அடி | ஆடி |
| ஒடி | ஓடி |
| உடல் | ஊடல் |

1 ற்ற் ஒரு ஒலியன் /t/. தமிழ் எழுத்துக்களையே பயன்படுத்துவதால் ற், ற்ற் இரண்டிற்கும் வேறுபாடு காட்ட ற்ற் என எழுதிக் காட்டுகிறோம்.

*3.2 உயிர் ஒலியன்களை நாவின் உயரத்தால் மூன்ருகவும், நா, முன் பின் செல்வதால் மூன்ருகவும் பிரிக்கலாம். மேல் உயிர்களிலும் இடை உயிர்களிலும் முன், பின் என இரு பிரிவுகள் இருக்கின்றன. முன் உயிர்கள் இதழ் விரிந்தும், பின் உயிர்கள் இதழ் குவிந்தும் பிறக்கின்றன. ஒவ்வொரு உயிரிலும் குறில் நெடில் என வேறுபாடு உளது.*

*3.3 ஆகாரத்தைத் தவிர மற்ற நெட்டுயிர்கள் அதனதன் குற்றுயிர்களைவிட உயரத்தில் விறைப்பாகத் தோன்றுகின்றன. ஆகாரம் அகரத்தைவிட கீழே விறைப்பாகத் தோன்றுகிறது. சொற்களில் முதலில் முன்னுயிர்கள் வரும்பொழுது முதலில் யகரவொலி தோன்றுகிறது. அகர ஒலியன் மொழியின் இறுதியில் கீழிடை முன் இதழ்விரி* **(lower-mid front unrounded)** *உயிராகத் தோன்றுகிறது. (உ-ம்) பல, சில, படிக்க முதலியன. உகர ஒலியனுக்குக் கீழ்மேல் நடு இதழ்விரி உயிர்* **(lower-high central unrounded vowel)** *மாற்றொலியாக வருகிறது. (உ-ம்) கதவு, ஆடு, படு, அது முதலியன.*

*3.4 ஐ, ஔ என்பன ஒலி நிலையில் அஇ, அஉ என்றிருந்தாலும் ஒலியன் நிலையில் அய், அவ் எனவே கொள்ளப் படுகின்றன.*

*4.1 மெய் ஒலியன்களை வேறுபடுத்தும் சொற்கள்.*
*/ப் த் ற்ற் ட் ச் க்/*

| மொழிமுதல் | உயிரிடை-தனி | உயிரிடை-இரட்டிப்பு |
|---|---|---|
| *படம்* | *பாபம்* | *தப்பு* |
| *தடம்* | *பாதம்* | *பத்து* |
| *சடம்* | *பாடம்* | *பற்று* |
| *கடம்* | *பாகம்* | *பட்டு* |
| | | *அச்சு* |
| | | *மக்கு* |

/ம் ந் ன் ஞ் ண் ங்/

| முதல் | உயிரிடை-தனி | உயிரிடை-இரட்டிப்பு | கடை |
|---|---|---|---|
| மகன் | தமது | தம்மை | மதம் |
| | மூந்நூறு | | |
| நகம் | மனம் | | அதன் |
| ஞாயிறு | மணம் | மன்னன் | அவண் |
| | அங்ஙனம் | அண்ணன் | |
| | | விஞ்ஞானம் | |

/ல் ள் ழ்/

| உயிரிடை | கடை |
|---|---|
| பலம் | வால் |
| வளம் | வாள் |
| பழம் | வாழ் |

/ர் ற்/

| உயிரிடை |
|---|
| அரம் |
| அறம் |

/வ் ய்/

| முதல் | உயிரிடை |
|---|---|
| வாழ் | அவன் |
| யாழ் | அயன் |

4.2 அடைப்பான்கள் உயிர்களினிடையே இரட்டித்து வரும்பொழுது அந்த அந்த ஒலிப்பிலா அடைப்பொலி களாகத் **(voiceless stops)** தோன்றுகின்றன. சகரம், ற்றகரம் இவை நீங்க மற்ற அடைப்பான்கள் மொழிக்கு

முதலில் அந்த அந்த ஒலிப்பிலா அடைப்பொலிகளாகத் (voiceless stops) தோன்றுகின்றன. சகரம் மொழிக்கு முதலிலும் உயிர்களினிடையே தனித்து வரும்பொழுதும் நுனிநா நுனியண்ண உரசொலியாகத்(voiceless alveolar fricative) தோன்றுகிறது. ற்றகரம், சகரம், டகரம் இவை நீங்கலாக மற்ற அடைப்பான்கள் உயிர்களினிடையே அந்த அந்த இடத்தில் பிறக்கின்ற ஒலிப்புடை உரசொலி களாகத் (voiced fricative) தோன்றுகின்றன. டகரம் நாவளை ஒலிப்புடை வருடொலியாக (retroflex voiced flap) உயிர்களிடையே தோன்றுகிறது. ககரம் இகரத்தின் முன், முன் கடையண்ண ஒலியாகவும், உகரத்தின்முன், பின் கடையண்ண ஒலியாகவும், மற்ற உயிர்களின் முன், நடு கடையண்ண ஒலியாகவும் தோன்றுகிறது. மெல்லி னத்தை அடுத்து எல்லா அடைப்பான்களும் அந்த அந்த ஒலிப்புடை அடைப்பொலிகளாகத் (voiced stops) தோன்றுகின்றன.

உயிர்களினிடையே வரும் நகரமும் ஙகரமும் ஒலியால் நீண்டிருந்தாலும் அவ்விடத்தில் குறிலோடு வேற்றுமை இன்மையால் அவற்றை ஒலியன் நிலையில் இரட்டிக்காத தனி மூக்கன்களாகவே கொள்கிறோம்.

5.1 வரன்முறை

5.2 உயிர்

எல்லா உயிர் ஒலியன்களும் மொழிக்கு முதலிலும் இடையிலும் வரும். ஈற்றில் எகரமும் ஒகரமும் வருதல் இல்லை. ஈகாரம், ஓகாரம், ஊகாரம் ஆகிய மூன்றும் தீ, போ, பூ என ஓரசைச் சொற்களிலேயே ஈற்றில் வருகின்றன.

| | முதல் | இடை | கடை |
|---|---|---|---|
| இ | இடு | கிளி | எலி |
| ஈ | ஈடு | கீரி | தீ |
| எ | எடு | கெடு | ——— |
| ஏ | ஏடு | தேடு | அதற்கே |
| அ | அடி | தடி | பல |
| ஆ | ஆடி | தாடி | பலா |
| ஒ | ஒடி | கொடி | ——— |
| ஓ | ஓடி | கோடி | போ |
| உ | உடல் | சுடு | பொது |
| ஊ | ஊடல் | கூடு | பூ |

5.3·1 மெய்யொலியன்களில் ப், த், ச், க், ம், ன் (ந்), ஞ், வ், ய் ஆகிய இவை மொழிக்கு முதலில் வரும். ம், ன், ண், ழ், ல், ள், ர், ய் இவை மொழிக்கு இறுதியில் வரும். உயிர்களினிடையே ப், த், ச், ட், க், ம், ன், ஞ், ண், ல், ள், வ், ய் இவை தனித்தும் இரட்டித்தும் வரும். இவற்றில் மூக்கன், மருங்கொலியன், அரையுயிரன் இவை குற்றெழுத்தை அடுத்தே இரட்டித்து வரும். ங், ந் இரண்டும் உயிர்களினிடையில் தனித்தே வரும். ற்ற் மொழியின் இடையில், உயிர்களின் இடையில் மட்டும் வரும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ப் | படம் | கபம் | கப்பல் | மரம் |
| த் | தடம் | அது | பத்து | .......... |
| ற்ற் | .......... | பற்று | .......... | .......... |
| ட் | .......... | படம் | பட்டம் | .......... |
| ச் | சரம் | அசல் | அச்சம் | .......... |
| க் | கரம் | பகல் | பக்கம் | .......... |
| ம் | மலை | கமலம் | கம்மல் | கலம் |
| ந் | .......... | முந்நூறு | .......... | .......... |
| ன் | நகம் | கனம் | கன்னம் | மான் |
| ண் | .......... | மணல் | வண்ணம் | மண் |

| | | | | |
|---|---|---|---|---|
| / ஞ் / | ஞானி | அறிஞர் | விஞ்ஞானம் | .......... |
| / ங் / | .......... | அங்ஙனம் | .......... | .......... |
| / ழ் / | .......... | பழம் | .......... | தமிழ் |
| / ல் / | .......... | பலம் | கல்லூரி | வயல் |
| / ள் / | .......... | வளம் | பள்ளம் | கள் |
| / ர் / | .......... | அரம் | .......... | அவர் |
| / ற் / | .......... | அறம் | .......... | .......... |
| / வ் / | வயல் | அவன் | அவ்வாறு | .......... |
| / ய் / | யார் | பயல் | அய்யர் | பாய் |

5.3.2 வேற்று மெய் மயக்கம் — இருமெய்.

தகரத்தோடு மகரம் மயங்கும்.

/ த்ம் / ஆத்மா

டகரத்தோடு ப், ச், க் மயங்கும்

/ ட்ப் / தட்பம்

/ ட்ச் / கட்சி

/ ட்க் / வெட்கம்

மகரத்தோடு பகரம் மயங்கும்

/ ம்ப் / கம்பம்

நகரத்தோடு தகரம் மயங்கும்

/ ந்த் / தந்தை

னகரத்தோடு ப், ச், க், ம், ற்ற் மயங்கும்

/ ன்ப் / அன்பு

/ ன்ச் / நன்செய்

/ ன்க் / நன்கு

/ ன்ம் / நன்மை

/ ன்ற் ] மன்றம்

ணகரத்தோடு ப், ட், ச், க், ம் மயங்கும்

/ ண்ப் / பண்பு
/ ண்ட் / இரண்டு
/ ண்ச் / வெண்சாமரை
/ ண்க் / வெண்கலம்
/ ண்ம் / வெண்மை

ஞகரத்தோடு சகரம் மயங்கும்

/ ஞ்ச் / நெஞ்சு

ஙகரத்தோடு ககரம் மயங்கும்

/ ங்க் / பங்கு

ழகரத்தோடு த், க், ம், வ் இவை மயங்கும்

/ ழ்த் / வாழ்தல்
/ ழ்க் / வாழ்கிறான்
/ ழ்ம் / தாழ்மை
/ ழ்வ் / வாழ்வு

லகரத்தோடு ப், க், வ் இவை மயங்கும்

/ ல்ப் / சால்பு
/ ல்க் / நல்கு
/ ல்வ் / செல்வம்

ளகரத்தோடு க், வ் இவை மயங்கும்

/ ள்க் / கொள்கை
/ ள்வ் / கள்வன்

ரகரத்தோடு ப், த், க், ம், ண், ன் வ் இவை மயங்கும்.

| ர்ப் | மார்பு
| ர்த் | தேர்தல்
| ர்க் | சேர்கிறான்
| ர்ம் | கூர்மை
| ர்ண் | வர்ணம்
| ர்வ் | வியர்வை

றகரத்தோடு ப், ச், க் இவை மயங்கும்

| ற்ப் | கற்பு
| ற்ச் | பயிற்சி
| ற்க் | இயற்கை

யகரத்தோடு த், க், ம், வ் இவை மயங்கும்

| ய்த் | செய்தி
| ய்க் | செய்கை
| ய்ம் | தாய்மை
| ய்ந் | செய்ந்நன்றி
| ய்வ் | ஆய்வு

### 5.3.3 மும்மெய் மயக்கம்

இவற்றில் முதல்மெய் இரட்டித்த மெய்களுடனே அல்லது ந்த் என்பதனோடோ மயங்கும்.

ழகரத்தோடு ப்ப், த்த், ச்ச், க்க், ந்த் இவை மயங்கும்.

| ழ்ப்ப் | தாழ்ப்பாள்
| ழ்த்த் | வாழ்த்து
| ழ்ச்சி | தாழ்ச்சி
| ழ்க்க் | வாழ்க்கை
| ழ்ந்த் | வாழ்ந்து

ரகரத்தோடு ப்ப், த்த், ச்ச், க்க், ந்த் இவை மயங்கும்

| ர்ப்ப் | திர்ப்பு
| ர்த்த் | பார்த்து
| ர்ச்ச் | உணர்ச்சி
| ர்க்க் | பார்க்கும்
| ர்ந்த் | உணர்ந்து

யகரத்தை அடுத்து ப்ப், த்த், ச்ச், க்க், ந்த் இவை மயங்கும்.

| ய்ப்ப் | வாய்ப்பு
| ய்த்த் | தேய்த்து
| ய்ச்ச் | காய்ச்சல்
| ய்க்க் | வாய்க்கால்
| ய்ந்த் | பாய்ந்து

# 4. பெயர்

காலப்போக்கில் மொழி மாறுகிறது — வளருகிறது. மொழியின் அவ்வக்கால வளர்ச்சியை முன்பின் ஒப்பிட்டு ஆராய்வது ஒருவகை—இது வரலாற்றுமுறை (**Historical**). மற்றொரு வகை, கால வளர்ச்சியைக் கருதாது, குறிப்பிட்ட ஒரு காலத்தில் ஒரு இடத்தில் ஒருவன் இப்படிப் பேசுகிறான், அல்லது ஒரு வகுப்பினர் இப்படிப் பேசுகின்றனர் என்று ஆராய்வது — இது விளக்கமுறை (**Descriptive**).

தொல்காப்பியமும், நன்னூலும் விளக்கமுறை இலக்கணம். எனவே காலப்போக்கில் பிற்காலத்தில் மொழியில் ஏற்பட்ட வளர்ச்சிகளை எல்லாம் அவ்விலக்கண நூல்களில் திணித்துக் காண முயல்வது தவறு. பிற்காலத்தில் எழுந்த புதிய புதிய வழக்குகளை எல்லாம் உரையாசிரியர்கள் இலேசில் அடக்க முயன்று விளக்கத்தையும் வரலாற்றையும் குழப்பி மக்களை மயங்க வைத்தனர். மொழியின் வளர்ச்சியை உடன்பட்டு, புதிய வழக்குகளை ஆங்காங்கே திரட்டிக் கொடுத்தது உரையாசிரியர்களின் சிறப்பேயாகும். ஆனால், பிற்கால வழக்குகளுக்கெல்லாம் தொல்காப்பியத்திலும் நன்னூலிலும் இலக்கணம் காண முயல்வது தவறு. தற்காலத் தமிழுக்கும் இவைகளே இலக்கணம் என்று சாதிப்பதும் பொருந்தாதது. பெரும்பான்மை வழக்குகள் அவ்விலக்கண நூல்களோடு ஒத்து

வரலாம்; ஒத்துவராத புதிய வழக்குகளையும் காண்கிறோம். அவ்வழக்குகளையும் உடன்பட்டுத்தான் அவ்வக்காலத்திற்குத் தகுந்தவாறு மொழிகளுக்கு இலக்கணம் காண முயல வேண்டும்.

இங்குப் பெயர்ச் சொற்களைப் பகுப்பதில் தொல்காப்பியரும் நன்னூலாரும் கண்ட முறைகளையும் அவை தற்காலத் தமிழுக்குப் பொருந்தும் முறையையும் ஆராய்கின்றோம். படித்தவர்கள் எழுதுந் தமிழையும், அவர்கள் மேடையிலும் வகுப்பிலும் பேசுந்தமிழையுமே இங்கு ஆராய்கின்றோம். படித்தவர்களும், படிக்காதவர்களும் பேசும் வீட்டுத் தமிழை இங்கு ஆராயவில்லை. அதுவும் தமிழ்தான். அதனையும் ஆராயவேண்டியதுதான். ஆனால் இங்கு அதை எடுத்துக்கொள்ளவில்லை.

அந்தந்த மொழிக்குத் தக்கவாறு சொற்களைப் பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள் என்று பகுக்கின்றோம். பகுப்பதற்குரிய அடிப்படைகள் பல. சொற்கள் பெறும் உருபன்களை (morpheme) அடிப்படையாகக் கொண்டு சொற்களைப் பகுப்பது ஒருவகை. தமிழ் மொழியில் வேற்றுமை உருபன்களை ஏற்கும் சொற்களை எல்லாம் ஒரு பிரிவாகவும் வேற்றுமை உருபன்களை ஏலாச் சொற்களை மற்றொரு பிரிவாகவும் கூறலாம். காலங் காட்டும் உருபன்களை ஏற்கும் சொற்களை எல்லாம் ஒரு தொகையாகவும் அவ்வுருபன்களை ஏலாச் சொற்களை எல்லாம் மற்றொரு தொகையாகவும் பிரிக்கலாம். இப்படிச் சொற்கள் பெறுகின்ற உருபன்களை அடிப்படையாகக் கொண்டு பகுப்பதை உருபான் நிகழும் பாகுபாடு (morphological classification) என்பர். மாணவன்—ஆண்பாற் பெயர்; மாணவி—பெண்பாற்பெயர். அன் ஆண்பால் உருபன்; இ பெண்பால் உருபன். இவ்வுருபன்களை அடிப்படையாகக்கொண்டு இவற்றை ஆண்பாற் பெயர், பெண்பாற் பெயர் என்கிறோம். ஆனால் தம்பி என்ற பெயர் ஆண்பாற் பெயர், தங்கை என்ற பெயர் பெண்பாற்

பெயர் என்கின்றோம். இவற்றில் ஆண்பால் பெண்பால் உருபன்களைக் காணோம். பின்னர் எவ்வாறு இவற்றை ஆண்பாற் பெயர், பெண்பாற் பெயர் என்று கூறுவது? இதற்குப் பயன்படும் முறைக்குச் சொற்றொடரான் நிகழும் பாகுபாடு என்று பெயர். காளை என்பதை ஆண்பாற் பெயர் என்று கூறுவதில்லை; பசு என்பதைப் பெண்பாற் பெயர் என்று கூறுவதில்லை. தம்பி, தங்கை இவை கொண்டுமுடியும் வினைமுற்றுக்களால் ஆண்பாற் பெயர், பெண்பாற் பெயர் என்கிறோம். ஆண் பால் வினைமுற்றைக் கொண்டு முடியும் பெயரும் ஆண்பாற் பெயர். பெண்பால் வினைமுற்றைக் கொண்டு முடியும் பெயரும் பெண்பாற் பெயர். ஆனால் காளை, பசு இவற்றில் உருபன்களாலும் கொண்டு முடியும் வினைமுற்றுக்களாலும் ஆண் பெண் பால் விளங்கவில்லை இவ்வாறு உருபன்களை அடிப்படையாகக் கொள்ளாது சொற்றொடரை அடிப் படையாகக்கொண்டு பிரிக்கும் இவ்வகையை(syntactical classification) சொற்றொடரான் நிகழும் பாகுபாடு என்பர். ஒரு மொழியில் சொற்களைப் பகுக்கும்பொழுது உருபன்களையும், சொற்றொடர்களையும் அடிப்படையாகக் கொண்டே பகுக்க வேண்டும்.

இவைகளைத் தவிர நமது இலக்கண ஆசிரியர்கள் சொற் பாகுபாட்டிற்குப் பொருளையும் கருதி இருக்கின்றனர். மக்கட் சுட்டே உயர்திணை; மற்றுயிருள்ளவும் இல்லவும் அஃறிணை என்பது தொல்காப்பியர் கொள்கை. மக்கள், தேவர், நரகர் உயர்திணை; மற்றைய அஃறிணை என்பது நன்னூலார் கோட்பாடு. நமது கோட்பாட்டின்படி உயர் திணைப் பெயர்கள் ஆண் பெண் பால்காட்டும் பெயர்கள்; அஃறிணைப்பெயர்கள் ஆண் பெண்பால்காட்டாப்பெயர்கள். எனவே உயர்திணை அஃறிணைப் பெயர்களைப் **பால்காட்டும் பெயர்கள். பால்காட்டாப் பெயர்கள்** என்றே கூறிவிட லாம். இதனால் "தேவரையும் நரகரையும் எங்குச் சேர்ப்பது? தொல்காப்பியர் ஏன் சேர்க்கவில்லை" என்ற சிக்கல் வேண்டுவதில்லை. பொருளை அடிப்படையாகக் கொண்டு திணை என்பதற்கு ஒழுக்கம், குலம், பொருள் என்று பலவாறு பொருள்கொண்டு இடர்ப்பட வேண்டியதும்

இல்லை. "ஈண்டு மக்களென்றது மக்களென்னும் உணர்வை; எனவே, மக்களேயாயினும் மக்களென்று சுட்டாது பொருள் என்று சுட்டியவழி உயர்திணையெனப் படா தென்பதாம்." "யாக்கையும் உயிரும் பிரிந்த வழியும், வேறு கருதிய வழியும் அவருயிரையும் உடம்பையும் உயிரல்லன வாகிய அஃறிணையாகக் கொள்ளப்படுமென்க". "அஃறிணைக் கண்ணும் சேவலென்றற் றொடக்கத்து ஆண்பாலும், பெடை என்றற் றொடக்கத்துப் பெண்பாலுமுளவேனும் அவ்வாண்பாலும் பெண்பாலும் உயிருள்ளவற்றுட் சில வற்றிற்கும் உயிரில்லனவற்றிற்கும் இன்மையின் அப்பகுப் பொழித்து எல்லாவற்றிற்கும் பொருந்த ஒன்றெனப்பட்ட தென்க." என்றுஉரையாசிரியர்கள் இப்பாகுபாட்டிற்குப் பலவாறு காரணங்கள் காண முயன்றனர். இவைக ளெல்லாம் தத்துவ ஆராய்ச்சி. தத்துவ முறையிலும் மொழியை ஆராயலாம். ஆனால், அம்முறை ஆராய்ச்சியில் முடிவை அறுதியிட்டுக் கூறமுடியாது. பொருளடிப் படையில் ஏற்படும் பாகுபாட்டில் இத்தகைய இடர்ப் பாடுகள் உள்ளன. பொருள் கருதாது சொற்கள் பெறும் உருபன்களாலும், சொற்றொடர் ஆட்சியாலும் காணும் பாகுபாடு காட்சியளவையில் காணும் பாகுபாடு. மொழிகளுக்கெல்லாம் பொதுவான முறையுங்கூட.

நமது இலக்கண ஆசிரியர்களும் உயர்திணைப் பெயர்கள் ஆண் பெண் பால்காட்டும், அஃறிணைப் பெயர்கள், ஆண் பெண் பால்காட்டா எனக்கூறியுள்ளனர். ஆனால், உயர் திணை அஃறிணைப் பாகுபாட்டிற்கு அதுவே அடிப்படை என்று கூறவில்லை.

## பண்டைத்தமிழ் — பெயர் வகை

பெயர்
- உயர்திணை
  - ஆண்
  - பெண்
  - பலர்
- அஃறிணை
  - ஒருமை
  - பன்மை
- விரவுப் பெயர் (பொதுப் பெயர்)
  - ஆண்மை
  - பெண்மை
  - ஒருமை
  - பன்மை

# தற்காலத் தமிழ் — பெயர் வகை




ஆ. ஒ. — ஆண்பால் ஒருமை.
பெ. ஒ. — பெண்பால் ஒருமை.
ஆ. பெ. ப. — ஆண்பால் பன்மை, பெண்பால் பன்மை, ஆண் பெண் பன்மை.

ஆ. ப. — ஆண்பால் பன்மை.
பெ. ப. — பெண்பால் பன்மை.
ஆ. பெ. ஒ. — ஆண்பால் ஒருமை, பெண்பால் ஒருமை.

நமது இலக்கண ஆசிரியர்கள் கருதிய உயர்திணைப் பெயர்களிலேயே முற்காலத் தமிழும் இக்காலத் தமிழும் வேறுபடக் காண்கிறோம். பழந்தமிழ்ப் பாகுபாட்டில் ஆண், பெண், பலர் என்ற மூன்றே பிரிவுகளைக் காண்கிறோம். ஆண்பால் பன்மை, பெண்பால் பன்மை, இரண்டும் கலந்த பன்மை எல்லாம் பலர் பாலில் அடங்கும்.

இனித் தற்காலத் தமிழின் பால்காட்டும் பெயர்களை வகுத்துக் காண்போம்,

**வகை 1.**

இவ்வகைப் பெயர்ச் சொற்களில் ஆண்பால், பெண் பால், பலர் பால் என்ற மூன்றிற்கும் தனித்தனி சொற்கள் உள்ளன. பலர்பாலை நாம் ஆ. பெ. ப. என்று குறிப்பிடுகிறோம். இது ஆண்பன்மை, பெண் பன்மை, இரண்டும் கலந்த பன்மை ஆகிய மூன்றற்கும் பொது. பழந்தமிழ்ப் பாகுபாட்டில் இந்த ஒரு வகையைத் தான் காணலாம்.

(உ-ம்)

| ஆ. ஒ. | பெ. ஒ. | ஆ. பெ. ப. | |
|---|---|---|---|
| அவன் | அவள் | அவர் | அவர்கள் |
| இவன் | இவள் | இவர் | இவர்கள் |
| எவன் | எவள் | எவர் | |
| நல்லவன் | நல்லவள் | நல்லவர் | நல்லவர்கள் |
| கெட்டவன் | கெட்டவள் | கெட்டவர் | கெட்டவர்கள் |
| மகன் | மகள் | மக்கள் | |
| ஆசிரியன் | ஆசிரியை | ஆசிரியர்கள் | |

சில இடங்களில் பேச்சு வழக்கில் அவர்கள், இவர்கள், என்ற கள் ஈற்றுச் சொற்கள் சிறப்பொருமையிலும், அவர், இவர், எவர் என்ற அர் ஈற்றுச் சொற்கள் பலர்பாலிலும் வருகின்றன. ஆனால் இப்பழக்கம் இன்னும் ஒரு வரன் முறை எய்தவில்லை.

**வகை 2**

இவ்வகைப் பெயர்ச் சொற்களில் ஆண்பாற் பன்மை, பெண்பாற் பன்மை ஆகிய இரண்டிற்கும் தனித்தனிச் சொற்களும், ஆ. பெ. பன்மைக்கு மற்றொரு சொல்லும் காணப்படுகின்றன.

| ஆ. ஒ. | பெ. ஒ. | ஆ. ப. | பெ. ப. | ஆ. பெ. ப. |
|---|---|---|---|---|
| மாணவன் | மாணவி | மாணவர்கள் | மாணவிகள் | மாணவமாணவிகள்<br>மாணவமாணவியர் |
| சகோதரன் | சகோதரி | சகோதரர்கள் | சகோதரிகள் | சகோதரசகோதரிகள் |
| பார்ப்பனன் | பார்ப்பனி | பார்ப்பனர்கள் | பார்ப்பனிகள் | பார்ப்பனப்பார்ப்பனிகள் |
| (பார்ப்பான்) | (பார்ப்பாத்தி) | | (பாப்பாத்திகள்) | பார்ப்பனப்பார்ப்பனியர் |
| தோழன் | தோழி | தோழர்கள் | தோழிகள் | தோழன்தோழிகள்<br>தோழன்தோழியர் |
| நாடான் | நாடாத்தி | நாடார்கள் | நாடாத்திகள் | நாடான்நாடாத்திகள் |
| குறவன் | குறத்தி | குறவர்கள் | குறத்திகள் | குறவன்குறத்திகள்<br>குறவன்குறத்தியர் |

தற்காலத் தமிழில் இவ்வகைப் பெயர்ச் சொற்கள் ஒரு தனிச் சிறப்புடையன. மாணவி, சகோதரி என்பன வற்றில் **இ** பெண்பால் உருபு. மாணவர்கள், சகோதரர்கள், தோழர்கள் என்பன ஆண்பாலைக் குறிக்கின்றன. இங்குக் **கள்** பன்மை உருபு. மாணவிகள், சகோதரிகள், என்பன வற்றிலும் இந்தப் பன்மை உருபினைக் காணலாம். ஆ. பன்மையில் **கள்** என்பதன் முன் வருகின்ற **அர்** ஆண்பால் உருபு. **இ,** பன்மை உருபு **கள்** இவை பெற்று முடிந்த மாணவிகள் என்ற பெண்பாற் சொல் போல, மாணவர் கள் என்பது, ஆண்பால் உருபு **அர்,** பன்மை உருபு **கள்** இவை பெற்று முடிந்த ஒரு சொல். இங்கு வருகின்ற **அர்** அவர், மாணவமாணவியர் என்பனவற்றில் வருகின்ற பலர் பால் உருபு **அர்** என்பதின் வேறுயது. **கள்** என்பதும் பன்மை உருபே. ஆனால் **கள்** பால்காட்டுவன காட்டாதன இரண்டிற்கும் பொது. பலர்பால் உருபு **அர்** பால்காட்டு வனவற்றிற்கே உரியது.

இவ்வகையின் மற்றொரு சிறப்பு ஆண் பெண் பன்மைக்குரிய சொற்கள். ஆண் ஒருமை, பெண் ஒருமை இரண்டும் சேர்ந்து ஒரு சொல்லாகி கள் அல்லது அர் என்ற பன்மை உருபு பெறுகின்றது. இரண்டாவது வருவது எப்பொழுதும் பெண் ஒருமையேயாகும். இவற்றில் மாணவ–, சகோதர– என்பனவற்றின் **அன்** தொக்கி நிற்கின்றது. குறவன்குறத்திகள், தோழன் தோழிகள் என்பனவற்றோடு ஒப்பிடுக. சில சமயங் களில் ஆண் பன்மையையும் பெண் பன்மையையும் அடுத் தடுத்துக் கூறுகிறோம். மாணவர்களே மாணவிகளே, தோழர்களே தோழிகளே, சகோதரர்களே சகோதரிகளே என்ற மேடைப் பேச்சுக்களை அடிக்கடி கேட்கலாம். பன்மையில் வருகின்ற இம்மூவகைப் பாகுபாடுகளும் தற் காலத்தமிழில் காணப்படுகின்ற சிறப்பியல்புகள். இம்

மூவகைவேறுபாடுகளும் உருபுகளால் பெறப்படுகின்றன. சொற்றொடர் நிலையில் (syntax) எல்லாம் ஒரே வகையான வினைமுற்றைக் கொண்டே முடியும். அங்கிலேயில் மூன்றும் ஒரே பகுதியில் அடங்கும். இதனால் உருபனால் நிகழும் சொல்வகையும் சொற்றொடரான் நிகழும் சொல் வகையும் ஒத்து வாராமையும் காணலாம். இதனாலேயே ஒரு மொழியின் சொற்களை இவ்விரண்டன் அடிப்படையிலும் வகை செய்ய வேண்டும் என்பதும் பெறப்படுகின்றது.

**வகை 3**

| ஆ. ஒ. | ஆ. ப. |
|---|---|
| தந்தை | தந்தையர் |
| மாப்பிள்ளை | மாப்பிள்ளைகள் |
| அண்ணன் | அண்ணன்மார் |
| தம்பி | தம்பிமார், தம்பிகள், தம்பியர் |
| கணவன் | கணவன்மார் |
| அப்பா, அப்பன் | ......... |

இவ்வகையில் வருகின்ற சொற்களுக்கு இரண்டே வடிவங்கள்தான் இருக்கின்றன. இதற்குரிய பெண்பாற் சொற்கள் வடிவான்: முற்றும் வேறுயவை. இவ்வாண்பாற் சொற்களில் பலவற்றிற்குப் பால் காட்டும் உருபு இல்லை. அண்ணன் என்பதை அண்ணி என்பதோடு ஒப்பிடும் போது அன் ஆண்பால் உருபு என்று கொள்ளலாம். ஆனால் அக்காள் என்பதோடு ஒப்பிடும்போது இரண்டும் தனித்தனிச் சொற்கள் என்று கொள்வதே பொருந்தும். கணவன், அப்பன், என்பனவற்றிலும் ஆண்பால் உருபு காண்பதற்கில்லை. இச்சொற்கள் எப்பொழுதும் ஆண்பால் வினைமுற்றைக்கொண்டே முடியும். ஆண்பால் உருபு இவற்றில் நின்று வற்றியது (zero allomorph) எனினும் பொருந்தும்.

**வகை 4**

| பெ. ஒ. | பெ. ப. |
|---|---|
| தாய் | தாயார், தாய்மார் |
| தங்கை | தங்கையர், தங்கைகள் |
| மனைவி | மனைவியர், மனைவிகள் |
| அக்காள் | அக்கையர் |
| அம்மா, அம்மை | அம்மையர் |
| ஆத்தாள் | ......... |

இவை வகை-3 க்கு ஏற்ற பெண்பாற் பெயர்கள். இவற்றில் பெண்பாலைக் குறிக்க உருபு இல்லை. இவை பெண்பால் வினைமுற்றைக் கொண்டே முடியும். இவற்றில் பெண்பாலுக்குரிய உருபு நின்று வற்றியது எனினும் பொருந்தும். அம்மா, ஆத்தாள் என்பனவற்றிற்குப் பன்மை வடிவங்கள் கிடைக்கப்பெறவில்லை. வகை 3, 4 இரண்டையும் ஒன்ருக இணைத்து ஆ. ஒ., பெ. ஒ., ஆ. ப., பெ. ப. என ஒருவகையாகக் கொண்டாலும் பொருந்தும்.

**வகை 5**

| ஆ. ஒ. பெ. ஒ | ஆ. பெ. ப. |
|---|---|
| அறிவாளி | அறிவாளிகள் |
| தொழிலாளி | தொழிலாளிகள் |
| முதலாளி | முதலாளிகள் |
| புலவன் | புலவர்கள் |
| வணிகன் | வணிகர்கள் |
| வித்துவான் | வித்துவான்கள் |
| வியாபாரி | வியாபாரிகள் |

இவ்வகையில் அறிவாளி முதலாளி முதலியன ஆண் ஒருமைக்கும் பெண் ஒருமைக்கும் பொது. பால்காட்டும் உருபு இவற்றில் இல்லை. கொண்டு முடியும் வினைமுற்றைக்

கொண்டே ஒருமையில் ஆண்பால், பெண்பால் என்பதைக் காணவேண்டும். இவை ஆண்பால் வினைமுற்றையும் கொண்டும் முடியும்; பெண்பால் வினைமுற்றையும் கொண்டு முடியும். பன்மைச் சொற்கள் ஆண்பாற் பன்மை, பெண்பாற் பன்மை, இரண்டும் கலந்த பன்மை ஆகிய மூன்றற்கும் பொது. இப்பன்மைப் பெயர்கள் இம் முறையில் வகை–1 ல் வரும் பன்மைப் பெயர்களைப் போன்றவை. ஆனால் வகை–1 ல் ஒருமையில் ஆண்பால், பெண்பால் இவற்றைக் குறிக்க அச்சொற்கள் தனித்தனி உருபுகளைப் பெற்றிருக்கின்றன. அத்தகைய உருபுகள் இவ்வகையில் இல்லை.

நண்பன் — நண்பர்கள்; நண்பன் — ஆ. ப. ஒ.; நண் பர்கள் — ஆ. பெ. ப.; இத்தகைய சொற்கள் இன்னும் பல கிடைக்குமாயின் அவற்றைத் திரட்டி மற்றொரு வகை யாகக் கொள்ளவேண்டும்.

அஃறிணைப் பெயர்களையே பால் காட்டாப் பெயர்கள் என்கிறோம். ஆண்பால், பெண்பால் வேறுபாடுகளைக் காட்ட உருபுகள் இச்சொற்களிலும் இல்லை; கொண்டு முடியும் வினை முற்றுக்களிலும் இல்லை. பன்மையில் **கள்** உருபு பெற்று வருகின்றன. காளை — காளைகள்; பசு — பசுக்கள்; கோழி — கோழிகள்; சேவல் — சேவல்கள்; இங்கு பண்டைத் தமிழும் தற்காலத் தமிழும் வேறுபட வில்லை.

பால்பகா அஃறிணைப் பெயர்கள் (யானை வந்தது, யானை வந்தன; குதிரை வந்தது, குதிரை வந்தன; மரம் வளர்ந்தன; கண் சிவந்தது, கண் சிவந்தன;) பண்டைத் தமிழ் வழக்கு. தற்காலத் தமிழில் இப்பாகுபாடு வேண்டு வதில்லை. யானை வந்தது, யானைகள் வந்தன; குதிரை வந்தது, குதிரைகள் வந்தன; மரம் வளர்ந்தது, மரங்கள்

வளர்ந்தன, கண் சிவந்தது, கண்கள் சிவந்தன; இவ்வழக்கு களையே தற்காலத் தமிழில் காண்கிறோம். குதிரை வந்தன, மரம் வளர்ந்தன என்ற வழக்கைக் காணோம். பெயரிலும், வினைமுற்றிலும் பன்மை உருபுகள் வெளிப்பட்டே நிற்கின்றன. நான்கு குதிரை வந்தது என்னும்பொழுது, குதிரை ஒருமை, நான்கு அதன் அடை – அவ்வளவே, இங்கும் பன்மை உருபைச் சேர்க்கும்பொழுது, நான்கு குதிரைகள் வந்தன என்ற வழக்கையே காண்கிறோம்.

இவ்வாறு காலப்போக்கில் மொழியின் அமைப்பில் ஏற்படுகின்ற மாறுபாடுகள் பலப்பல. குறிப்பிட்ட சில காலங்களில் இம்மாறுபாடுகள் அதிகமாகத் தோன்றும்; சில காலங்களில் குறைவாகத் தோன்றும். தற்காலத் தமிழின் அமைப்பில் காணும் புதுமைகள் பலப்பல. பல வற்றை நாம் ஒத்துக்கொள்ளத் தயங்குகின்றோம். ஆனால் மொழி நாம் இடும் சட்டங்களுக்கு உட்பட்டு அடங்கி நடக்காது. அதுபோகின்ற போக்கில் விட்டுக்கொடுத்து தான் வளர்க்கவேண்டும். தமிழ் மொழியில் இன்று புகுந்த புதுமைகளையும் மொழி இயல் வல்லுநர் எடுத்துக் காட்டு கிறார். இது அவர் கடமை. அவர் மொழி இப்படி இருக்க வேண்டும் என்று சட்டம் விதிக்கமாட்டார். அது ஒரு பெரிய கழகமோ, அல்லது அரசாங்கமோ செய்யும் வேலை. அவை செய்யும் அவ்வேலைக்கு அவர் உதவி புரியலாம்; அறிவுரை கூறலாம். அவராகக் கூறுவது மொழி இவ்வாறு இருக்கிறது என்று காட்டுவதேயாகும். இதனாலேயே மொழியியல் இன்று ஒரு அறிவியற் கலையாகத் திகழ் கின்றது.

# 5. ஆக்கப் பெயர்கள்

1. முன்னுரை
2. சந்தி விதிகள்
3. சுட்டு, வினு இவற்றின் அடியாகப் பிறக்கும் பெயர்கள்
4. பெயரடையின் அடியாகப் பிறக்கும் பெயர்கள்
5. பெயரடியாகப் பிறக்கும் பெயர்கள்
6. வினையடியாகப் பிறக்கும் பெயர்கள்
7. பெயராக்க உருபுகளின் வகை
8. வினையாகவும் பெயராகவும் வரும் சொற்கள்
9. பெயரடையாகவும் பெயராகவும் வரும் சொற்கள்

1. தற்காலத் தமிழில் வழங்கும் பெயர்களின் ஆக்க முறையை ஆராய்கின்றது இக்கட்டுரை. இதில் காட்டப் படுகின்ற உதாரணங்களெல்லாம் எழுதுந் தமிழில் இடம் பெறுபவை. சிற்சில பேச்சில் வழங்குவன.

உருபு என்பதைப் பகுதி, விகுதி, இடைநிலை அனைத் திற்கும் பொதுவாக வழங்குகின்றோம்; மொழியியலில் **morph** என்ற பொருளில். இது நமது இலக்கண ஆசிரியர் வழக்கினின்றும் மாறுபட்டது.

2·0 சந்தி விதிகள்.

இங்குக் கொடுக்கும் சந்தி விதிகள், உதாரணங்களில் கொடுக்கப்படுகின்ற அடிச் சொற்களில் காணப்படுகின்ற வேறுபாடுகளை விளக்கும். பெரும்பான்மை முடிபுகள் நன்னூல் சூத்திரங்களோடு ஒத்து வருவன. ஆனால் இங்குக் காணப்படும் வேறுபாடுகள் அனைத்தையும் ஒன்றுய்த் திரட்டிக் காணும் நோக்கத்தோடு இங்குச் சந்தி விதிகள் வகுக்கப்படுகின்றன.

வினையாலணையும் பெயராக்கத்தின்போது (6·2) ஏற்படுகின்ற அடிச்சொல் வேறுபாடுகளையெல்லாம் இவ் விதிகளில் அடக்க முயலவில்லை. அவற்றை, காலங்காட்டும் உருபுகளை வினை அடிகள் பெறும் முறையை விளக்கும் பொழுதுதான் விளக்கவேண்டும்.

திரிபுகளை விளக்க ஒன்றற்கு மேற்பட்ட விதிகள் வேண்டுமாயின், அவைகளை நாம் கொடுத்திருக்கின்ற முறைப்படிப் பொருத்திக் காணுதல் வேண்டும்.

2·1 அகர இகரச் சுட்டும், எகர வினவும் பால் காட்டும் உருபினை ஏற்கும்பொழுது அவ்–, இவ்–, எவ்– என மாறும்.

| | | | | |
|---|---|---|---|---|
| அ | + | அன் | > | அவன் |
| இ | + | அன் | > | இவன் |
| எ | + | அன் | > | எவன் |

2·2 உயிரின் முன் நிலைமொழி உகரம் கெடும்.

| | | | | |
|---|---|---|---|---|
| சூது | + | ஆடி | > | சூதாடி |
| கரவு | + | அடம் | > | கரவடம் |
| விருப்பு | + | அம் | > | விருப்பம் |
| குரங்கு | + | ஆட்டி | > | குரங்காட்டி |
| பேச்சு | + | ஆளி | > | பேச்சாளி |

2·3 உயிரின் முன் நிலைமொழி இகர ஐகாரம் யகர உடம்படுமெய் பெறும்.

| | | | | |
|---|---|---|---|---|
| வண்டி | + | ஓட்டி | > | வண்டியோட்டி |
| பனை | + | ஏறி | > | பனையேறி |

2·4 அகரத்தின் முன் நிலைமொழி அகரம் கெடும்.

| | | | | |
|---|---|---|---|---|
| அழகான | + | அவன் | > | அழகானவன் |
| கெட்ட | + | அவன் | > | கெட்டவன் |

2·5 இகரம், அன் இவற்றின் முன் நிலைமொழி அம் கெடும்

| | | | | |
|---|---|---|---|---|
| கஞ்சம் | + | அன் | > | கஞ்சன் |
| கள்ளம் | + | அன் | > | கள்ளன் |
| பாவம் | + | இ | > | பாவி |
| வாதம் | + | இ | > | வாதி |
| உபகாரம் | + | இ | > | உபகாரி |
| லோபம் | + | இ | > | லோபி |

2·6 தகரம், ககரம் (வல்லினம்) இவற்றின் முன் நிலைமொழி மகரம் கெடும்.

| | | | | |
|---|---|---|---|---|
| கிராமம் | + | த்தான் | > | கிராமத்தான் |
| பட்டினம் | + | த்தான் | > | பட்டினத்தான் |
| நகரம் | + | த்தான் | > | நகரத்தான் |
| பணம் | + | க்காரன் | > | பணக்காரன் |
| நாடகம் | + | க்காரி | > | நாடகக்காரி |

2·7 தகரத்தின் முன் நிலைமொழி மகரம் இன மெல்லெழுத்தாக மாறும்.

| | | | | |
|---|---|---|---|---|
| பிணம் | + | தின்னி | > | பிணந்தின்னி |
| பழம் | + | தின்னி | > | பழந்தின்னி |

2·8 ககரத்தின் முன் நிலைமொழி ணகரம் இன மெல்லெழுத்தாக மாறும்.

| | | | | |
|---|---|---|---|---|
| பயந்தான் | + | கொள்ளி | > | பயந்தாங்கொள்ளி |
| தோற்ருன் | + | கொள்ளி | > | தோற்ருங்கொள்ளி |

2·9 அகரத்தின் முன் நிலைமொழி லகரம் ற்ற என மாறும்.

| | | | | |
|---|---|---|---|---|
| கல் | + | அல் | > | கற்றல் |
| வில் | + | அல் | > | விற்றல் |
| நில் | + | அல் | > | நிற்றல் |

2·10 பகரத்தின் முன் நிலைமொழி லகரம் றகரமாக மாறும்.

| | | | | |
|---|---|---|---|---|
| கல் | + | பது | > | கற்பது |
| வில் | + | பது | > | விற்பது |
| நில் | + | பது | > | நிற்பது |

2·11 'அம்' முன் நிலைமொழி ஈற்று வல்லினத்தின் முன் நின்ற இனமெல்லெழுத்து ஒத்த வல்லினமாக மாறும்.

| | | | | |
|---|---|---|---|---|
| தூங்கு | + | அம் | > | தூக்கம் |
| உறங்கு | + | அம் | > | உறக்கம் |
| விரும்பு | + | அம் | > | விருப்பம் |

2·12 கீழே காண்பவை மேலே காட்டிய விதிகளில் அடங்காது தனித்து வருகின்ற மாற்றுருபுகள். பக்கத்தில் அவை வரும் பகுதியின் எண்கள் கொடுக்கப்பட்டிருக் கின்றன.

| | |
|---|---|
| நட்பு | நண்ப்– (5·1) |
| சிநேகம் | சிநேகித்– (5·1) |
| பலம் | பலவ்– (5·1) |
| சோம்பல் | சோம்ப்– (5·3) |
| செல்வம் | செல்– (5·17) |

| | |
|---|---|
| சீவு | சீ- (6·15) |
| வா | வரு- (6·8, 6·23, 6·27) |
| காண் | காட்- (6·22) |
| கூவு | கூ- (6·24) |
| நம்பு | நம்பி- (6.25) |

3·0 சுட்டு வினை அடி.

3·1 பால், எண் காட்டும் உருபுகள் பெறுதல்.
அ- > அவன், அவள், அவர், அது, அவை.
இ- > இவன், இவள், இவர், இது, இவை.
எ- > எவன், எவள், எவர், எது, எவை.

4·0 பெயரடை அடி.

4·1 சேய்மைச் சுட்டுப்பெயர் பெறுதல்.

அழகான > அழகானவன், அழகானவள், அழகானவர், அழகானது, அழகானவை.

கெட்ட > கெட்டவன், கெட்டவள், கெட்டவர், கெட்டது, கெட்டவை.

நல்ல, சின்ன, சிறிய, பெரிய முதலிய பெயரடைச் சொற்களையும் இவ்வாறே ஒட்டிக் காண்க.

4·2 உருபு **த்தனம்** பெறுதல்.

கள்ள > கள்ளத்தனம்; கஞ்ச > கஞ்சத்தனம்; முரட்டு > முரட்டுத்தனம்; அசட்டு > அசட்டுத்தனம் முதலியன. இப்பெயர்களெல்லாம் அவ்வத்தன்மையைக் குறிக்கின்றன.

4·3 உருபு **மை** பெறுதல்

பெரு (ம்) > பெருமை; சிறு > சிறுமை; கரு (ம்) > கருமை; வெண் > வெண்மை.

5·0 பெயரடி.

5·1 பால் காட்டும் உருபுகள் பெறுதல்.

கள்ளம் > கள்ளன், கள்ளி; கஞ்சம் > கஞ்சன்; ஊழியம் > ஊழியன்; நட்பு > நண்பன்; சிநேகம் > சிநேகிதன், சிநேகிதி; பலம் > பலவான்.

5·2 உருபு இ பெறுதல்.

பாவம் ⊳ பாவி; வாதம் ⊳ வாதி; உபகாரம் ⊳ உபகாரி; லோபம் ⊳ லோபி. இவ்வடிகள் அம் விகுதியில் முடிந்த வடமொழிச் சொற்கள்.

5·3 உருபு ஏறி பெறுதல்.

சோம்பல் ⊳ சோம்பேறி; மரம் ⊳ மரமேறி; பனை ⊳ பனையேறி.

5·4 உருபு அடம் பெறுதல்.

கரவு ⊳ கரவடம்.

5·5 உருபு அம் பெறுதல்.

விருப்பு ⊳ விருப்பம்.

5·6 உருபு ஆடி பெறுதல்.

வாய் ⊳ வாயாடி; பேய் ⊳ பேயாடி; சூது ⊳ சூதாடி; கூத்து ⊳ கூத்தாடி; நாடகம் ⊳ நாடகமாடி.

5·7 உருபு ஆட்டி பெறுதல்.

குரங்கு ⊳ குரங்காட்டி.

5·8 உருபு ஆளி பெறுதல்.

ஊர் ⊳ ஊராளி; பேச்சு ⊳ பேச்சாளி; நோய் ⊳ நோயாளி; முதல் ⊳ முதலாளி.

5·9 உருபு **ஆளன்** பெறுதல்.

செயல் ⊳ செயலாளன்; பொருள் ⊳ பொருளாளன்.

5·10 உருபு **ஓட்டி** பெறுதல்

வண்டி ⊳ வண்டியோட்டி; தேர் ⊳ தேரோட்டி; கார் ⊳ காரோட்டி.

5·11 உருபு **தின்னி** பெறுதல்

பிணம் ⊳ பிணந்தின்னி; பழம் ⊳ பழந்தின்னி.

5·12 உருபு **த்தனம்** பெறுதல்

சீமை ⊳ சீமைத்தனம்; சண்டி ⊳ சண்டித்தனம்; ஊதாரி ⊳ ஊதாரித்தனம்; பொறுக்கி ⊳ பொறுக்கித்தனம்; பேடி ⊳ பேடித்தனம்; கருமி ⊳ கருமித்தனம்; வம்பு ⊳ வம்புத்தனம்; வாலு ⊳ வாலுத்தனம்.

5·13 உருபு **த்தான்** பெறுதல்

கிராமம் ⊳ கிராமத்தான்; பட்டினம் ⊳ பட்டினத்தான்; நகரம் ⊳ நகரத்தான்.

5·14 உருபு **காரன்** (ஆண்பால்), **காரி** (பெண்பால்) பெறுதல். உயிர், ரகரம், லகரம் இவற்றின் பின் **க்காரன், க்காரி** என இரட்டிக்கும்.

தயிர் ⊳ தயிர்க்காரி; தயிர்க்காரன்;

பால் ⊳ பால்க்காரன்; சீக்கு ⊳ சீக்குக்காரன், சீக்குக்காரி; காய்கறி ⊳ காய்கறிக்காரன்; காய்கறிக்காரி; மீன் ⊳ மீன்காரன், மீன்காரி; வண்டி ⊳ வண்டிக்காரன்,

5·15 உருபு **மான்** பெறுதல்

நீதி ⊳ நீதிமான்; புத்தி ⊳ புத்திமான். இவை இகரவீற்று வடமொழிச் சொற்கள்.

5·16 உருபு **மை** பெறுதல்.

பகை ⊳ பகைமை.

5·17 உருபு **வந்தன்** பெறுதல்

தனம் ⊳ தனவந்தன்; செல்வம் ⊳ செல்வந்தன்

5·18 உருபு **வி** பெறுதல்.

மனை ⊳ மனைவி; துணை ⊳ துணைவி.

6·0 வினையடி.

6·1 பால் காட்டும் உருபுகள் பெறுதல்.

தட்டு⊳ தட்டான், தட்டாத்தி; திருடு⊳ திருடன், திருடி, திருடர்கள்.

6·2 செய்மைச் சுட்டுப் பெயர் பெறுதல். (பெயரெச்சமும் செய்மைச் சுட்டுப் பெயரும் இணைந்து வினையாலணையும் பெயராகும்).

வந்த ⊳ வந்தவன், வந்தவள், வந்தவர், வந்தது, வந்தன; வருகிற ⊳ வருகிறவன், வருகிறவள், வருகிறவர், வருகிறது, வருகின்றவை வரும் ⊳ வருபவன், வருபவள், வருபவர், வருவது, வருபவை.

6·3 உருபு **இ** பெறுதல்.

தூங்கு ⊳ தூங்கி; பொறுக்கு ⊳ பொறுக்கி; தடுக்கு ⊳ தடுக்கி; (புல் தடுக்கி); சுற்று ⊳ சுற்றி (ஊர் சுற்றி); கொத்து⊳ கொத்தி; தின்னு⊳ தின்னி; பெருக்கு⊳ பெருக்கி (ஒலி பெருக்கி).

6·4 உருபு **ஏறி** பெறுதல்.

வந்து ⊳ வந்தேறி.

6·5 உருபு **ஐ** பெறுதல்.

கொல் ▷ கொலை; வில் ▷ விலை; நில் ▷ நிலை; தடு ▷ தடை; எடு ▷ எடை; நிறு ▷ நிறை.

6·6. உருபு **அடம்** பெறுதல்.

கட்டு ▷ கட்டடம்

6·7 உருபு **அம்** பெறுதல்.

திருப்பு▷ திருப்பம்; வருத்து▷ வருத்தம்; அழுத்து ▷ அழுத்தம்; கூட்டு ▷ கூட்டம்; ஆட்டு ▷ ஆட்டம்; வாட்டு ▷ வாட்டம்; ஓட்டு▷ ஓட்டம்; சுருக்கு▷ சுருக்கம்; பெருக்கு ▷ பெருக்கம்; நெருக்கு ▷ நெருக்கம்; எறக்கு▷ எறக்கம்; உருக்கு ▷ உருக்கம்; நீக்கு ▷ நீக்கம்; அடக்கு ▷ அடக்கம்; கலக்கு ▷ கலக்கம்; ஏமாற்று▷ ஏமாற்றம்; ஏற்று ▷ ஏற்றம்; அஞ்சு ▷ அச்சம்; தூங்கு ▷ தூக்கம்; உறங்கு ▷ உறக்கம். இவ்வடிச் சொற்கள் வல்லினம் இரட்டித்தோ வல்லினம் அதற்கினமான மெல்லினத்தை அடுத்தோ முடிந்த சொற்கள்.

6·8 உருபு **அணம்** பெறுதல்.

கட்டு ▷ கட்டணம்.

6·9 உருபு **அல்** பெறுதல்.

கீறு ▷ கீறல்.

6·10 உருபு **ஆளி** பெறுதல்.

பீச்சு ▷ பீச்சாளி.

6·11 உருபு **கொள்ளி** பெறுதல்.

பயந்தான் ▷ பயந்தாங்கொள்ளி; தோற்றான் ▷ தோற்றாங்கொள்ளி; வெடித்தான்▷ வெடித்தாங்கொள்ளி; (பீச்சான்?) ▷ பீச்சாங்கொள்ளி.

6·12 ஈற்றயல் இகரம் ஆகாரமாக மாறுதல்.
சாப்பிடு ⊳ சாப்பாடு; கூப்பிடு ⊳ கூப்பாடு.

6·13 ஈற்றயல் உயிர் நீளல்.
படு ⊳ பாடு; புறப்படு ⊳ புறப்பாடு; ஏற்படு ⊳ ஏற்பாடு; தடு ⊳ தாடு; சுடு ⊳ சூடு; கெடு ⊳ கேடு விடு ⊳ வீடு.

6.14 உருபு **பது** பெறுதல் (உயிரின்முன் **ப்பது** என இரட்டிக்கும்).

எடு⊳ எடுப்பது; கொடு⊳ கொடுப்பது; உடு⊳ உடுப்பது; பொறு⊳ பொறுப்பது; அடி⊳ அடிப்பது; கற⊳ கறப்பது; அடை⊳ அடைப்பது; கல்⊳ கற்பது; வில்⊳ விற்பது; உண்⊳ உண்பது; காண்⊳ காண்பது; தின்⊳ தின்பது; இவை அவ்வத் தொழிலைக் குறிக்கின்றன.

6.15 உருபு **ப்பு** பெறுதல்.
பகு⊳ பகுப்பு; கல⊳ கலப்பு; அள⊳ அளப்பு; தொகு > தொகுப்பு; சிரி⊳ சிரிப்பு; சிவ் > சிப்பு; குறி⊳ குறிப்பு; வகு⊳ வகுப்பு; விரி⊳ விரிப்பு; காய்⊳ காய்ப்பு; வார்⊳ வார்ப்பு.

6.16 உருபு **தி** பெறுதல்.
ஊர் ⊳ ஊர்தி; பகு ⊳ பகுதி; தொகு ⊳ தொகுதி; மற⊳ மறதி; மிகு⊳ மிகுதி.

6.17 உருபு **த்தி** பெறுதல்.
அடர்⊳ அடர்த்தி; வளர்⊳ வளர்த்தி

6.18 உருபு **தல்** பெறுதல்.
அறி⊳ அறிதல்; போ ⊳ போதல்; விடு ⊳ விடுதல்; வாழ் ⊳ வாழ்தல்; இவை அவ்வத் தொழிலைக் குறிக்கின்றன.

6.19 உருபு **த்தல்**, **அல்** பெறுதல். **த்தல்** உயிரின் பின்னும், ரகரத்தின் பின்னும் வரும். **அல்** வேறிடங்களில் வரும்.

அரி> அரித்தல்; அடி> அடித்தல்; பார்> பார்த்தல்; கடி> கடித்தல்; எடு> எடுத்தல்; கல்> கற்றல்; கூட்டு> கூட்டல்; வில்> விற்றல்; நில்> நிற்றல்; தோண்டு> தோண்டல்; கிண்டு> கிண்டல்; தாண்டு> தாண்டல்; இவைகளும் அவ்வத் தொழிலைக் குறிக்கின்றன.

6.9-ல் வரும் **அல்** (கீறு> கீறல்) தொழிலையும் குறிக்கும்; அதனால் ஏற்பட்ட வெடிப்பையும் குறிக்கும்; 6.9-ல் வருகின்ற **அல்** உருபையும் இங்கு வருகின்ற **அல்** உருபையும் சேர்த்து ஒரு தொகையாகக் கூறினும் பொருந்தும்.

6.20 உருபு **த்தை** பெறுதல்.

நட> நடத்தை

6.21 உருபு **டு**, **து**, **த்து** பெறல். **டு** டகரத்தின் பின்னும், **து** தகரத்தின் பின்னும் **த்து** மற்ற இடங்களிலும் வரும்.

திருடு> திருட்டு; பாடு> பாட்டு; எழுது> எழுத்து; நெய்> நெய்த்து; வா> வரத்து.

6.22 உருபு **சு**, **சி**, **ச்சி**; **சு** சகரத்தின் பின்பும், **சி** டகரத்தின் பின்பும், **ச்சி** பிற இடங்களிலும் வரும்.

ஏசு> ஏச்சு; பேசு> பேச்சு; வீசு> வீச்சு; காண்> காட்சி; உணர்> உணர்ச்சி; வீழ்> வீழ்ச்சி.

6.23 உருபு **கை** பெறுதல்.

அழு> அழுகை; வா> வருகை.

6.24 உருபு **ச்சல்** பெறுதல்.

கூவு> கூச்சல்; ஒழி> ஒழிச்சல்; காய்> காய்ச்சல்; கிட> கிடக்கை; நம்பு> நம்பிக்கை; வாழ்> வாழ்க்கை.

6.25 உருபு **க்கை** பெறுதல்.

6.26 உருபு **க்கு** பெறுதல்.
போ⊳ போக்கு.

6.27 உருபு **மானம்** பெறுதல்.
தீர்⊳ தீர்மானம்; தேய்⊳ தேய்மானம்; வா⊳ வருமானம்.

6.28 உருபு **மை** பெறுதல்.
வறு⊳ வறுமை.

6.29 உருபு **வது** பெறுதல்
போ ⊳ போவது; வா ⊳ வருவது; அறி ⊳ அறிவது; எறி⊳ எறிவது; விழு⊳ விழுவது; ஓடு⊳ ஓடுவது; எண்ணு⊳ எண்ணுவது; பாடு ⊳ பாடுவது; இதுவும் தொழிலைக் குறிக்கும்.

6.30 உருபு **வி** பெறுதல்.
கல்⊳ கல்வி; கேள்⊳ கேள்வி; (தோல்) ⊳ தோல்வி.

6 31 உருபு **வை** பெறுதல்.
கற⊳ கறவை; பற⊳ பறவை; பார்⊳ பார்வை.

6.32 உருபு **வு** பெறுதல்.
பணி⊳ பணிவு; துணி⊳ துணிவு; தேய் ⊳ தேய்வு; அறி⊳ அறிவு; தாழ்⊳ தாழ்வு; வாழ்⊳ வாழ்வு; உயர்⊳ உயர்வு; குறை⊳ குறைவு; தாழ்⊳ தாழ்வு.

7.0 உருபுகளின் வகை

7.1 சுட்டு, வினு, பெயரடை, பெயர், வினை ஆகிய எல்லாவற்றோடும் வரும் உருபுகள்.
பால்காட்டும் உருபுகள் 3.1, 4.1, 5.1 6.1

7.2 பெயரடை, பெயர், வினை இவற்றோடு வரும் உருபுகள். **மை** 4.3, 5.16, 6.28

7.3 பெயரைடை, பெயர் இவற்றோடு வரும் உருபுகள். **த்தனம்** 4.2, 5.12.

7.4 பெயர், வினை இவற்றோடு வரும் உருபுகள்.

**இ** 5.2, 6.3, **அம்** 5.5, 6.7, **ஏறி** 5.3, 6.4, **ஆளி** 5.8, 6.10, **அடம்** 5.4, 6.6, **வி** 5.18, 6.30

7.5 பெயரோடு மட்டும் வரும் உருபுகள்.

**ஆடி** 5.6, **ஆட்டி** 5.7, **ஆளன்** 5.9, **ஓட்டி** 5.10, **தின்னி** 5.11, **த்தான்** 5.13, **க்காரன், க்காரி, காரன், காரி** 5.14, **வந்தன்** 5.17.

7.6 வினையொடு மட்டும் வரும் உருபுகள்.

வினையாலணையும் பெயர் உருபு 6.2, **ஐ** 6.5, **அணம்** 6·8, **அல்** 6.9, **கொள்ளி** 6.11, ஈற்றயல் இகரம் ஆகாரமாதல், 6.12. ஈற்றயல் உயிர் நீளல், 6.13, **ப்பது—பது** 6.14, **ப்பு** 6.15, **தி** 6.16, **த்தி** 6.17, **த்தல்—அல்** 6.19, **த்தை** 6.20, **டு–து–த்து** 6.21, சு–சி–ச்சி, 6.22, **ச்சல்** 6.24, **கை** 6.23, **க்கை** 6.25, **க்கு** 6.26, **மானம்** 6 27, **வது** 6.29, **வை** 6.31, **வு** 6.32.

8.0 பெயராகவும் வினையாகவும் வரும் சொற்கள் தள்ளு, திருப்பு, சாவு, மெல்லு, நீட்டு, அடி, தடி, பிடி முதலியன.

9.0 பெயராகவும் பெயரடையாகவும் வரும் சொற்கள்.

பெரும்பாலும் எல்லாப் பெயர்களும் இவ்வாறு வருகின்றன. கல்> கற்றூண் (கல்தூண்), பல்> பற்பொடி (பல் பொடி), மண்> மண்குதிரை, பொன்> பொற்காப்பு, பொன்காப்பு, வெள்ளி > வெள்ளித்திரை, தீ > தீப்புகை, மீன்> மீன் வலை, பட்டு> பட்டுப் புடவை, நீர்> நீர்த்திவலை முதலியன.

# 6. எதிர் மறைகள்

I

தற்கால உரைநடையையே நாம் இங்குத் தற்காலத் தமிழ் என்று கூறுகிறோம். மேடைகளிலும், வகுப்பிலும் ஆசிரியர்கள் பேசும் திருந்திய தமிழும் இதில் அடங்கும். பழமையைப் போற்றி, அந்நடையையே பின்பற்றி எழுதும் பண்டிதர் நடையை நாம் இங்குக் கருதவில்லை. அதைப்போல் வீட்டில் மனைவி மக்களோடு பேசும் வீட்டுத் தமிழையும் நாம் இங்குக் கருதவில்லை. இவை இரண்டும் நீங்க மற்றவைகள் எல்லாம் இங்கு நாம் கூறும் தற்காலத் தமிழில் அடங்கும்.

II

தற்காலத் தமிழில் காணப்படுகின்ற எதிர்மறைகளைக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம். இப்பிரிவு தொடரடிப் படையில் (syntax) எழுந்தது.

(1) அஃறிணைப் பெயர்களையே கருத்தாவாகக் கொள்வன. (உ-ம்) போகாது, வராது, தூங்காது, கிடைக்காது (cannot be got என்ற பொருளில்), முடியாது (not over என்ற பொருளில்), காணாது (போதாது என்ற பொருளில்).

ஆள் வராது, பிள்ளை போகாது என்பன போன்றவற்றில் ஆள், பிள்ளை என்பன அஃறிணை வினை முற்றைக்கொண்டு முடியும் பெயர் வகையில் அடங்கும்.

போகேன், போகோம், போகான், போகாள், வாரான் என்பன போன்ற வழக்குகள் பண்டைத் தமிழைப் பின்பற்றி வழங்கி வருவன. ஆனால் நாம் வரையறுத்த தமிழில் இவை போன்ற வழக்குகளைக் காண்பது அரிது.

(2) ஐம்பாற் பெயர்களையும் கருத்தாவாகக் கொள்வன.

(அ) கிடையாது (is not, no என்ற பொருளில்), கூடாது (should not be என்ற பொருளில்), ஆகாது (not suitable என்ற பொருளில்) முதலியன. (உ-ம்) அது கூடாது, அவன் கூடாது, அவள் கூடாது, அவர்கள் கூடாது. இவ்வாறே மற்ற சொற்களையும் பொருத்திக் காண்க.

பன்மையில் இச்சொற்களை அவை கிடையா; அவை கூடா; அவை ஆகா எனச் சிலர் வழங்குகின்றனர். சிலர் அவை கிடையாது, அவை கூடாது, அவை ஆகாது என்றே வழங்குகின்றனர்.

(ஆ) இல்லை, அல்ல, வேண்டாம் முதலியன.

(உ-ம்) அது இல்லை, அவை இல்லை, அவன் இல்லை, அவள் இல்லை, அவர்கள் இல்லை; மற்ற சொற்களையும் இவ்வாறே பொருத்திக் காண்க.

(3) உயர்திணைப் பெயர்களையே கருத்தாவாகக் கொள்வது. இது கருத்தாவிற்கேற்ற விகுதி பெறும்.

மாட்டான்

(உ-ம்) அவன் மாட்டான், அவள் மாட்டாள், அவர் மாட்டார்.

(4) கருத்தா பெறுதன.

காணேம், தெரியாது, முடியாது (cannot என்ற பொருளில்) முதலியன. இவை அதைக் காணேம், என்னல் முடியாது, எனக்குத் தெரியாது என்று வருமே ஒழிய ***நான் காணேம், *நான் தெரியாது, *நான் முடியாது** என்று வாரா.

## III

இனி இவ்வெதிர்மறைகளுக்கேற்ற உடன்பாட்டையும், எதிர்மறை உருபுகள் தம்மேல் ஏற்று வருகின்ற உருபுகளையும் வரிசைப்படுத்திக் காண்போம். கொடுக்கப்பட்டிருக்கும் பட்டியலில் இடம் வலமான ஆறு பிரிவுகளில் ஒவ்வொன்றும் மற்றவைகளிலிருந்து ஒரு பொருட் பாகுபாட்டிலாவது வேறுபட்டிருக்கும். செங்குத்தான பிரிவுகள் உடன்பாடு. அஃறிணை ஒருமை வினைமுற்று முதலிய பொருட்பிரிவைக் குறிக்கும். இப்பொருட்பாகுபாடுகள்

அவைகளுக்கேற்ற உருபுகளைப் பெற்றோ, உருபின்றியோ பெறப்படும்.

எதிர்மறை உருபுகள் தாம் பெற்ற வினையெச்சம், பெயரெச்சம், வினை முதலிய உருபுகளின் மேலும் சில உருபுகள் பெற்று வரும். உதாரணமாகப் **போகாமல்** (போக+ஆ+மல்) என்பதன்மேல் தேற்றேகாரம் பெற்று **போகாமலே** (போக + ஆ + மல் + ஏ) என்று வரும். இவ்வாறு வருகின்ற பொருட்பாகுபாடுகளை நாம் இங்குக் கருதவில்லை. அவை இங்கு நமக்குத் தேவையுமில்லை. எதிர்மறை உருபுகளை அடுத்து வருகின்ற உருபுகளால் பெறப்படுகின்ற பொருட்பாகுபாடுகளையே நாம் இங்குக் கருதி இருக்கின்றோம்.

இப்பட்டியலின் அடிப்படையில் எதிர்மறைகளை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று முன்னிலையில் வரும் எதிர்மறைகள், மற்றொன்று முன்னிலையில் வாரா எதிர்மறைகள். முன்னிலையில் வரும் எதிர்மறையில் பட்டியலில் உள்ள முதற் பிரிவும் ஆறுவது பிரிவும் அடங்கும்.

(1) முன்னிலையில் வரும் எதிர் மறைகள்.

(அ) வராது, போகாது, தூங்காது, கிடைக்காது, கூடாது (not join என்ற பொருளில்), முதலியன இப் பிரிவில் அடங்கும். இவை பட்டியலில் இடம் வலமாக உள்ள முதற் பிரிவில் வரும் எதிர்மறைகள். இவ்வெதிர் மறைகள் இகரவீற்று வினையெச்சத்தைத் தவிர மற்ற பதின்மூன்று பொருளிலும் வரும். இவை முன்னிலையில் ஏவலில் வரும்.

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| 1. உடன்பாடு | போகும் | ஆகும் | முடியும் | —— | —— | —— |
| 2. அஃறிணை ஒருமை வினைமுற்று | போகாது | ஆகாது | —— | இல்லை | —— | —— |
| 3. அஃறிணைப் பன்மை வினைமுற்று | போகா | ஆகா | —— | இல்லை | —— | —— |
| 4. முன்னிலை ஒருமை | போகாதே | —— | —— | —— | —— | மாட்டாய் |
| 5. முன்னிலைப் பன்மை | போகாதீர்கள் | —— | —— | —— | —— | மாட்டீர்கள் |
| 6. உகர ஈற்று வினையெச்சம் | போகாது | ஆகாது | முடியாது | இல்லாது | காணாது | மாட்டாது |
| 7. மல் ஈற்று வினையெச்சம் | போகாமல் | ஆகாமல் | முடியாமல் | இல்லாமல் | காணாமல் | மாட்டாமல் |
| 8. விட்டால் ஈற்று வினையெச்சம் | போகா- விட்டால் | ஆகா- விட்டால் | முடியா- விட்டால் | இல்லா- விட்டால் | காணா- விட்டால் | —— |

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| 9. இகர ஈற்று வினையெச்சம் | —— | —— | —— | இன்றி | —— | —— |
| 10. பெயரெச்சம் | போகாத<br>போகா | ஆகாத<br>ஆகா | முடியாத<br>முடியா | இல்லாத<br>இல்லா | காணாத<br>காணா | மாட்டாத<br>மாட்டா |
| 11. வினா | போகாதா | ஆகாதா | முடியாதா | இல்லையா | காணாதா | மாட்டானா முதலியன |
| 12. ஐயவினா | போகாதோ | ஆகாதோ | முடியாதோ | இல்லையோ | காணாதோ | மாட்டானோ முதலியன |
| 13. ஏகார ஈற்றுத் தேற்றம் | போகாதே | ஆகாதே | முடியாதே | இல்லாதே | காணாதே | மாட்டாதே |
| 14. ஆண், பெண், பலர் | —— | —— | —— | —— | —— | மாட்டான்,<br>மாட்டாள்,<br>மாட்டார், |
| 15. கருத்தா பெறுதன | —— | —— | முடியாது (cannot) | —— | காணோம் | —— |

(ஆ) மாட்டான் — இது உடன்பாடு, அஃறிணை, விட்டால் ஈற்று வினையெச்சம், இகரவீற்று வினையெச்சம் இவை தவிர மற்ற இடங்களில் வரும். முன்னிலையில் இது ஏவலில் வருதல் இல்லை.

(2) முன்னிலையில் வராத எதிர்மறைகள். இவற்றின் உட்பிரிவுகள் நான்கு.

(அ) ஆகாது, தெரியாது, முடியாது (not over) இவை இப்பிரிவில் அடங்கும். இவை முன்னிலை, இகர வீற்று வினையெச்சம் இவை நீங்க மற்ற பொருள்களில் வரும்.

(ஆ) முடியாது (cannot என்ற பொருளில்), கூடாது (should not be என்ற பொருளில்), கிடையாது (is not என்ற பொருளில்), காணுது (போதாது என்ற பொருளில்) முதலியன இப்பிரிவில் அடங்கும். இவற்றில் அஃறிணை ஒருமைக்கும் பன்மைக்கும் வடிவம் ஒன்றே. முன்னிலை, இகரவீற்று வினையெச்சம் இங்கெல்லாம் வாரா.

(இ) இல்லை, அல்ல முதலியன. இவைகளும் அஃறிணை ஒருமையிலும் பன்மையிலும் இல்லை, அல்ல என்றே வழங்கு கின்றன. உடன்பாட்டிலும் முன்னிலையிலும் இவை வாரா. இவற்றின் சிறப்பியல்பு இவை இகரவீற்று வினையெச்ச மாக (அன்றி, இன்றி) வருதலேயாகும்.

(ஈ) காணேம், அஃறிணை ஒருமைக்கும் பன்மைக்கும் ஒரே வடிவந்தான். உடன்பாடு, முன்னிலை, இகரவீற்று வினையெச்சம் இங்கெல்லாம் இவை வாரா.

உகரவீற்று வினையெச்சம், **மல்** ஈற்று வினையெச்சம், பெயரெச்சம், வினா, ஐயவினா, தேற்றம் ஆகிய இப்பொருள் களில்தான் எல்லா எதிர்மறைகளும் வரும். **மல்** ஈறு எதிர் மறையைத் தவிர வேறெங்கும் வராது.

## IV

இனி எதிர்மறை உருபுகளைப் பிரித்துக்காட்ட முயல்வோம். சாதாரணமாக, கிடையாது, போகாது என்னும் பொழுது **ஆ** எதிர்மறை உருபு என்றும், **து/த்** அஃறிணை ஒருமை உருபு என்றும் கருதுகின்றனர். ஆனால்

(1) போகாது முதலியன வினையெச்சமாக வரும் பொழுது உயர்திணைக் கருத்தாவையும் அஃறிணைக் கருத்தாவையும் ஏற்று வரலாம். (உ-ம்) அவன் போகாது வந்தான், அது போகாது வந்தது.

(2) முன்னிலையில் **போகாதே, போகாதீர்கள்** என வருகின்றது. இங்கு இவை உயர்திணைக் கருத்தாவையே பெற்று வரும். ஆனால் **தகரம்** இங்கு நிற்கின்றது.

(3) ஐம்பாற் கருத்தாவையும் கொள்ளும் ஆகாது முதலியவற்றில் **து** அஃறிணை ஒருமையாக முடியாது.

எனவே தகரம் அஃறிணை உருபாக முடியாது.

**உ** (6) **மல்,** (7) **விட்டால்,** (8) இவை வினையெச்ச உருபுகள்; **அ** (10) பெயரெச்ச உருபு; **ஆ** (11), **ஒ** (12) இவை வினாவுருபுகள்; **ஏ** (13) தேற்றேகார உருபு. இவைகளை நீக்கிவிட்டால் நமக்கு **ஆத், ஆ** இரண்டும் எதிர்மறை உருபுகளாகக் கிடைக்கின்றன. இவற்றில் **ஆத்** உயிரின் முன்பும், **ஆ** மெய்யின் முன்பும், சொல்லின் இறுதியிலும் (தூங்கா, போகா முதலியன) வருகின்றன.

**தூங்காது, போகாது, வராது** முதலியன அஃறிணை ஒருமைக்கு வரும். **கிடையாது, கூடாது, ஆகாது** முதலியன ஆண்பால், பெண்பால், பலர்பால், அஃறிணை ஒருமை ஆகிய நான்கிற்கும் வரும். ஆகையால் இங்கெல்

லாம் இறுதியில் வருகின்ற உகரத்தைத் தனியாகப் பிரித்துப் பொருள் கூறுவதும் இயலாது. இங்கு **ஆது** என்பதையே எதிர்மறையாகக் கொள்ளுதல் வேண்டும். எனவே சொல்லின் இறுதியில் **ஆ** அல்லது **ஆது** எதிர் மறை உருபாக வரும்.

போகாதுதான், தெரியாதுதான், இல்லைதான் என்பன வற்றில் தான் என்பதைப் பெறுதற்கு, முற்றாக வருகின்ற வடிவை அடியாகக் கொள்ளவேண்டும். இது மாட்டான் தான், மாட்டாள்தான், மாட்டார்தான், இல்லைதான் என்பனவற்றால் தெளிவாகும். எனவே இது ஒரு தனி வகையில் அடங்கும்.

வேண்டாம் என்னும் பொழுது **ஆம்** எதிர்மறை உருபு. வேண்டாது (முற்று), வேண்டாத, வேண்டா முதலிய இடங்களில் **ஆது, ஆத், ஆ** முதலியன நாம் முன்பு கூறிய விதிகளுக்கிணங்கி எதிர்மறை உருபுகளாக வருகின்றன. வேண்டாம்+மல்>வேண்டாமல் என்னும் இடத்தில் இறுதி மகரம் கெட்டது.

காணேம் என்னும்பொழுது **ஓம்** எதிர்மறை உருபு. காணாது (வினையெச்சம்), காணமல் முதலிய இடங்களில் **ஆத், ஆ** முதலியன எதிர்மறை உருபுகளாக வருகின்றன.

இல்லை, அல்ல என்பன எதிர்மறைகள். இல்லாது, இல்லாமல், இல்லாவிட்டால், இல்லாத என்னும் இடங் களில் இல்ல்– என்பது **ஆத்** அல்லது **ஆ** என மேலும் ஒரு எதிர்மறை உருபைப் பெற்று வந்தது. இன்றி என்னும்பொழுது **இன்ற்–** என்பதுவே எதிர்மறை. எனவே இது **இல்லை, இல்ல்–, இன்ற்–** என மூன்று வடிவங்கள் பெறுகின்றது. இதைப் போலவே அல்லாது,

அல்லாமல், அல்லாவிட்டால், அல்லாத, அன்றி என்பனவும்.

மாட்டேன், மாட்டோம், மாட்டாய், மாட்டீர், மாட்டான், மாட்டாள், மாட்டார் என்பனவற்றில் **மாட்ட்-** என்பதுவே எதிர்மறையாதல் வேண்டும். சிலர் **ஏன்** முதலிய உருபுகளை **ஏ-ன், ஓ-ம், ஆ-ய், ஈ-ர், ஆ-ன், ஆ-ள், ஆ-ர்,** எனப் பிரித்து **ஆ** முதலிய நெட்டெழுத்துக்கள் எதிர்மறை உருபுகள் என்பர். சிலர் இவற்றை **எ-என், ஒ-ஒம், அ-அய், இ-இர், அ-அன், அ-அள், அ-அர்** எனப் பிரித்து முதல் உயிர் எதிர்மறை உருபு எனவும், இறுதியில் வருகின்ற **என்** முதலியன பால், இடம் காட்டும் உருபுகள் எனவும் கொள்வர். வினைமுற்றில் வருகின்ற பால், இடம் காட்டும் உருபுகள் **ஏன், ஓம், ஆய், ஈர், ஆன், ஆள், ஆர்** என்று நெட்டெழுத்தை முதலாகக் கொண்டே வருகின்றன. (உ-ம்) வந்தேன், வந்தோம், வந்தாய், வந்தீர், வந்தான், வந்தாள். **அன், அள், அர்** என்ற படர்க்கைப் பால்காட்டும் உருபுகள் வரும்பொழுது எப்பொழுதும் **அன்** சாரியை முன்பு பெற்றே வரும். (உ-ம்) வந்தனன், வந்தனள், வந்தனர். தன்மை முன்னிலையில் எண் இடம் காட்டக் குற்றெழுத்தை முதலாகவுடைய உருபுகள் வருதல் இல்லை. எனவே மாட்டான், மாட்டாள் என்ற இடத்தில் மட்டும் பால் இடம் காட்டும் உருபுகள் **ன், ள், ர்,** என்றோ, **அன், அள், அர்** என்றோ கொள்வது தற்காலத் தமிழின் இயல்புக்குப் பொருந்தாது. எனவே மாட்ட்- என்பதே எதிர்மறை எனக்கொண்டு மாட்டாது, மாட்டா என்னும்பொழுது **ஆது, ஆ** என மேலும் ஒரு எதிர்மறை உருபு பெற்று முடிகின்றது என்று கொள்ள வேண்டும், இல்லாது, இல்லா என்பனபோல.

எனவே இதுவரை நாம் கண்ட எதிர்மறை உருபுகளைக் கீழ்க்கண்டவாறு பிரித்துக் கூறலாம்:-

(1) மொழி முதலாக வரும் உருபுகள்.

(1) மாட்ட்-

(2) இல்லை, இல்ல்-, இன்ற்-

(3) அல்ல, அல்ல்-, அன்ற்-

(2) மொழியின் இறுதியில் வரும் உருபுகள்

(1) **-ஆம்.** இது வேண்டு என்பதோடு வினை முற்றில் வரும்.

(2) **-ஓம்.** இது காண் என்பதோடு வினை முற்றில் வரும்.

(3) **-ஆது/ஆ. ஆ** அஃறிணைப் பன்மையில் வரும்; **ஆது** பிற இடங்களில் வரும்.

(3) மொழியிடை வரும் உருபுகள்.

(1) **-ஆத்-** உயிரின் முன் வரும்.

(2) **-ஆ-** மெய்யின் முன் வரும்.

## V

எதிர்மறையில் காலங்காட்டும் உருபுகள் இல்லை. அகரவீற்று வினையெச்சத்தோடு (**infinitive** -போக, வர, தெரிய முதலியன) எதிர்மறை உருபைச் சேர்க்கிறோம். (உ-ம்) **போக + ஆது > போகாது.** எதிர்மறைகள் பிற சொற்களோடு இணைந்து சொற்றொடர் நிலையில் காலங்களைக் குறிப்பிடுகின்றன.

சொற்றொடர் நிலையில் நேற்று, இன்று அல்லது இப்பொழுது, நாளை என்னும் சொற்களோடு இணைந்து

வருவதை முறையே இறந்தகாலம், நிகழ்காலம், எதிர் காலம் என்று கொள்வோம்.

## நிகழ்வெதிர்வு (Present-Future)

இத்தகைய வழக்குகள் நிகழ்காலத்திற்கும் எதிர் காலத்திற்கும் பொது. எனவே நிகழ்காலத்திற்குரியது என்ருே, எதிர்காலத்திற்குரியது என்ருே குறிப்பிட்டு வரையறுப்பது இயலாது. இரண்டு காலத்திற்கும் பொது என்னுங் கருத்தால் நிகழ்வெதிர்காலம் என்கிருேம்.

(1) கூடாது, கிடைக்காது தூங்காது, போகாது, வராது, முடியாது. வேண்டாம், மாட்டான் முதலியன அகரவீற்று வினை எச்சத்தோடு இயைந்தும் இயையாதும் நிகழ்வெதிர் காலத்திற்கே வரும்.

| | |
|---|---|
| இன்று வரக்கூடாது. | இன்று கூடாது. |
| நாளை வரக்கூடாது. | நாளை கூடாது. |
| இன்று வரவேண்டாம் | இன்று வேண்டாம். |
| நாளை வரவேண்டாம். | நாளை வேண்டாம். |
| இன்று வரமாட்டான். | இன்று மாட்டான். |
| நாளை வரமாட்டான். | நாளை மாட்டான். |
| இன்று வரமுடியாது. | இன்று முடியாது. |
| நாளை வரமுடியாது. | நாளை முடியாது. |

(2) வருகிறது, போகிறது என்பன போன்ற நிகழ் காலத் தொழிற் பெயர்கள் ஆகாது என்பதோடு முடியும் பொழுது நிகழ்வெதிர் காலத்தைக் குறிக்கும்.

அவன் இன்று வருகிறது ஆகாது.
அவன் நாளை வருகிறது ஆகாது.

**நிகழ்விறப்பு (Present-Past)**

(1) பாடு என்பதைக் கொண்டு முடிந்த தொழிற் பெயர்கள், காணோம், இல்லை என்பவைகளைக் கொண்டு முடியும் பொழுது நிகழ்காலத்தையும் இறந்த காலத்தையும் காட்டும்.

இன்று வந்தபாட்டைக் காணோம்.

நேற்று வந்த பாட்டைக் காணோம்.

இன்று வந்தபாடில்லை.

நேற்று வந்தபாடில்லை.

இவற்றில் காணோம் என்பதன்முன் இப்பெயர்கள் இரண்டாம் வேற்றுமை உருபேற்று வருகின்றன.

(2) காணோம் என்பது அகரவீற்று வினை எச்சத் தோடு இயைந்தும் இயையாதும் வரும்பொழுது நிகழ்காலப் பொருளையும் இறந்தகாலப் பொருளையும் கொடுக்கும்.

அவன் இன்று / நேற்று வரக்காணோம்.

இன்று | நேற்று அவனைக் காணோம்.

(3) வினை எச்சம், இருக்க என்ற துணைவினை பெற்று, முடியாது, கூடாது, வேண்டாம், மாட்டான் முதலிய எதிர்மறைகளைக் கொண்டு முடியும்பொழுது நிகழ்காலமும் இறந்தகாலமும் காட்டும்.

இன்று | நேற்று தூங்கி இருக்க முடியாது.

இன்று | நேற்று தூங்கி இருக்கக் கூடாது.

இன்று | நேற்று தூங்கி இருக்க வேண்டாம்.

இன்று | நேற்று தூங்கி இருக்க மாட்டான்.

(4) வந்தது, போனது என்பனபோன்ற இறந்த காலத் தொழிற்பெயரை அடுத்து இல்லை, கிடையாது.

கூடாது, தெரியாது, ஆகாது, ஆகிய இவை வந்து முடியும் பொழுது நிகழ்காலமும் இறந்தகாலமும் பெறப்படும்.

இன்று | நேற்று வந்தது இல்லை.
இன்று | நேற்று வந்தது கிடையாது.
இன்று | நேற்று வந்தது கூடாது.
இன்று | நேற்று வந்தது தெரியாது.
இன்று | நேற்று வந்தது ஆகாது.

(5) இறந்தகால வினைமுற்றை அடுத்து இல்லை என்ற எதிர்மறை வந்து நிகழ்காலத்தையும் இறந்தகாலத்தையும் காட்டும்.

இன்று | நேற்று வந்தான் இல்லை,
இன்று | நேற்று போனான் இல்லை.

இவ்வாறு வினைமுற்றை அடுத்து இல்லை என்பதைத் தவிர வேறு எதிர்மறை எதுவும் வருவதில்லை. இக்காரணம் பற்றியே முன்னைய பகுதியில், வந்தது முதலியவற்றைத் தொழிற்பெயராகக் கொண்டோம். இதனால் இங்கு வருகின்ற வந்தான், போனான், என்பதை வினையாலணையும் பெயராகக் கொள்ளலாம். ஆனால் தற்காலத் தமிழில் வினையாலணையும் பெயர் பெயரெச்சத்தோடு அவன், அவள் என்பன பெற்று வந்தவன், வந்தவள் என்றே பிறவிடங்களில் எல்லாம் வருகிறது.

**நிகழ்காலம்**

வருகிறான், போகிறான் என்பனபோன்ற நிகழ்கால வினைமுற்றை அடுத்து இல்லை என்ற எதிர்மறை வந்து நிகழ்காலப் பொருளைத் தருகிறது.

இப்பொழுது அவன் வருகிறான் இல்லை.
இப்பொழுது அவன் போகிறான் இல்லை.

இங்கும் வினைமுற்றை அடுத்து இல்லை என்பதே வருகிறது.

இவ்வழக்குப் பேச்சுத் தமிழில் வற்றுனில்லை, போறுனில்லை என வழங்குகிறது.

தமிழை வரன்முறையாகக் கற்றுக்கொள்ளாத பிறமொழியாளர் இத்தகைய வழக்கை மூன்று காலத்திலும் பயன்படுத்துகின்றனர்.

**முக்காலத்திற்கும் வருவன**

(1) இல்லை என்ற எதிர்மறை அகரவீற்று வினையெச்சத்தோடு இயைந்தும், இயையாதும் முக்காலத்தையும் காட்டும்.

அவன் இன்று வரவில்லை.
அவன் நேற்று வரவில்லை
பேராசிரியர் நாளை வரவில்லை.

இன்று அவன் இல்லை.
நேற்று அவன். இல்லை.
நாளை சினிமா இல்லை.

(2) வினையெச்சத்தோடு போகிறது என்ற துணைவினை சேர்ந்து இல்லை, தெரியாது என்ற எதிர்மறைகளைக் கொண்டு முடிய மூன்று காலமும் பெறப்படும்.

இன்று வரப்போகிறது இல்லை | தெரியாது.
நேற்று வரப்போகிறது இல்லை | தெரியாது.
நாளை வரப்போகிறது இல்லை | தெரியாது.

'நான் சொல்லவில்லை என்றால் நேற்று அவன் வரப்போகிறது இல்லை''. என்ற இறந்தகால வழக்கைக் காண்க.

(3) வருகிறது, போகிறது என்பன போன்ற நிகழ்காலத் தொழிற்பெயர்கள் தெரியாது என்ற எதிர்மறையைக் கொண்டு முடியும்பொழுது மூன்று காலத்திலும் வரும்.

(உ-ம்) அவன் இப்பொழுது வருகிறது எனக்குத் தெரியாது.

அவன் நாளை வருகிறது எனக்குத் தெரியாது.

அவன் நேற்று வருகிறது எனக்குத் தெரியாது.

(4) கூடாது, வேண்டாம் என்பன அகரவீற்று வினையெச்சத்தோடு இயைந்து வினாவாக வரும்பொழுது மூன்று காலத்திலும் வரும். இங்கு வினா குரலிசையால் (intonation) பெறப்படும்.

(உ-ம்) நேற்று வரக்கூடாது?
இன்று வரக்கூடாது?
நாளை வரக்கூடாது?
நேற்று வரவேண்டாம்?
இன்று வரவேண்டாம்?
நாளை வரவேண்டாம்?

(5) வருகிறதா, போகிறதா என்ற ஐயவினா ஆகாரம் பெற்ற தொழிற்பெயர்கள் (வருகிறது + ஆ) இல்லை என்பதைக் கொண்டு முடியும்பொழுது மூன்று காலத்திலும் வரும்.

இன்று நான் வருகிறதா இல்லை
நேற்று நான் வருகிறதா இல்லை.
நாளை நான் வருகிறதா இல்லை.

**பழக்கம்**

வருகிறது, வருவது என்பனபோன்ற நிகழ்கால, எதிர்காலத் தொழிற்பெயர்கள் இல்லை, கூடாது, கிடையாது என்னும் எதிர்மறைகளைக் கொண்டு முடியும்பொழுது ஒரு பழக்கத்தின் எதிர்மறையைக் காட்டும்.

(உ-ம்) வருகிறது இல்லை; வருவது இல்லை.
வருகிறது கூடாது; வருவது கூடாது.
வருகிறது கிடையாது; வருவது கிடையாது.

# 7. வினா

இக்காலத் தமிழில் **யார்** என்ற வினாப் பெயரும், **எ, ஏ, ஆ** என்ற வினா உருபுகளும் வருகின்றன. யார் என்ற வினாப் பெயர் உயர்திணைக்குரியது. ஆனால் பால், எண், இடம் எதுவும் காட்டாது. அனைத்திற்கும் பொதுவாய் வரும். (உ—ம்) நான் யார்? நீ யார்? நீங்கள் யார்? அவன் யார்? அவள் யார்? அவர் யார்? அது யார்? முதலியன. அது யார்? என்னும் பொழுதும் உயர்திணையையே சுட்டுகிறது. தன்மை, முன்னிலை, படர்க்கை, ஆண், பெண், ஒருமை, பன்மை எல்லாவற்றிற்கும் பொதுவாய் வருதலின் ய்+ஆர் எனப் பிரிக்க இயலாது. யார் என்பது உயர்திணை வினாப் பெயர் எனக் கொள்வதே சிறந்தது. அஃறிணைக்குரிய வினா **என்ன** என்பது. இது பெயர் அன்று. இதனை **எ + ன்ன** எனப் பிரிக்கலாம்.

**எகர வினாவுருபு**

எவன், எவள், எவர், எது, எவை இவை வினாப் பெயர்கள். இவற்றில் முதலில் நிற்கும் **எ** வினாவுருபு. பின்பு நிற்கும் **அன்** முதலியன எண், இடம் காட்டும்

உருபுகள். இவற்றில் வினவுருபும், அதனை அடுத்து நிற்கும் உருபுகளும் கட்டுருபுகள் (bound morphs). **எவ்வளவு, எவ்வகை, எம்முறை, எவ்வாறு** இவற்றில் **எ**கரம் கட்டுருபு. **அளவு** முதலியன தனியுருபுகள் (free morphs). **எ**கர வினவுருபு சொல்லின் முதலிலேயே வரும்.

**எந்த, எங்ஙனம், எங்கு, என்ன, எங்கே, எத்தனை, எப்படி** இவை வினாச் சொற்கள். இவை பெயருமன்று வினையுமன்று. எத்தனை — இதனைப் பெயர் எனலாம். இது எத்தனைக்கு, எத்தனையில் என வேற்றுமை உருபேற்கும். இவற்றில் **எந்த** என்பது பெயர்கொண்டு முடியும். **எங்ஙனம், எங்கு** இவை இரண்டும் வினைகொண்டு முடியும். **என்ன, எங்கே, எத்தனை, எப்படி** இவை பெயரும் கொண்டு முடியும், வினையும் கொண்டு முடியும். (உ-ம்) எந்த மரம்? எங்ஙனம் வந்தான்? எங்கு வந்தான்? என்ன செய்தான்? என்ன அது? எங்கே அவன்? எங்கே போனான்? எத்தனை ரூபாய்? எத்தனை கொடுத்தான்? எப்படி விலை? எப்படிக் கொடுத்தான்? முதலியன. இவற்றில் **–ப்படி, –ங்ஙனம்** (எப்படி, எங்ஙனம்) இரண்டும் ஒரு வினை அல்லது பெயரின் தன்மையைக் குறிக்கும் உருபு. **–ங்கு** (எங்கு) ஒரு வினை நிகழும் இடத்தைக் குறிக்கும் உருபு. **–ன்ன** (என்ன) ஒரு பொருள் அல்லது செயல் எது என்று சுட்டும் உருபு. **–ங்கே** (எங்கே) ஒரு பொருள் அல்லது வினையின் இடத்தைச் சுட்டும் உருபு. **–த்தனை** (எத்தனை) எண்ணல் தொகையைச் சுட்டும் உருபு.

### ஏகார வினவுருபு

ஏகார வினா **தான்** என்ற தேற்ற உருபோடுதான் வரும். வேறெங்கும் வராது. (உ-ம்) அவன்**தானே** செய்தான்? அது**தானே** நானும் பார்த்தேன் என்ற

இடத்தில் தான் என்பதை அடுத்த ஏகாரம் தேற்ற உருபு; வினாவுருபன்று.

**ஓகாரவுருபு**

ஓகாரத்தையும், வினாவுருபாகக் கொள்வர் சிலர். ஆனால் தற்காலத் தமிழில் ஓகாரம் வினாவுருபன்று; ஐயவுருபேயாகும். (உ–ம்) வந்தானோ வரவில்லையோ. செய்தானோ செய்யவில்லையோ. யாரோ? என்ன நினைப்பானோ? இங்கெல்லாம் ஓ கா ர ம் ஐயவுருபே யாகும். கேள்வி. பதில் முறையாலும் ஓகாரம் ஐயவுருபு என்பதை நன்கு உணரலாம். அவனா (கேள்வி) –ஆம், அவன்தான் (விடை). அவன்தானே? (கேள்வி) –ஆம் அவன்தான் (விடை). அவனோ, இவனோ. இது கேள்வியாயின் இதற் கேற்ற விடை இல்லை. இதனையே அவனா? இவனா? என்றால் வினாவாக மாறிவிடுகிறது. யாரோ என்ற இடத்தில் யார் என்பது வினாப் பெயர்; அது ஐயவுருபாகிய ஓகாரம் ஏற்றது. என்ன நினைப்பானோ? என்ற வாக்கியத்தில் **என்ன** என்ற வினாச் சொல்லே வினாவைத் தருகிறது.

**ஆகார வினாவுருபு**

*1.*

தற்காலத் தமிழில் பெருவாரியாக வழங்கிவரும் வினா வுருபு ஆகார வினாவுருபேயாகும். சாதாரணமாகத் தனி யாக வரும் எந்தச் சொல்லோடும் பெயரடை தவிர இந்த வினாவுருபு வரும். ஆகார வினாவுருபைச் சேர்ந்த பின்பு வேறு எந்த உருபையும் சேர்க்க முடியாது. ஆனால் ஒரு சொல் பெயரடையாக வரும்பொழுது அது ஆகார வினாவுருபு ஏற்காது. இத்தகைய பெயரடை வேறுபாடுகளைக் கீழே காண்போம்.

(1) நல்ல, கெட்ட, சின்ன, பெரிய, பல, சில, மிக முதலிய பெயரடைகள் இவ்விகுதியுருபு ஏலா. இவை பெயரடை உருபின்றி இயல்பாகவே பெயரடைகளாயின.

(2) பெயர்ச்சொல் பெயரடையாக வரும்பொழுது இவ்விகுதியுருபு ஏலாது. (உ-ம்) மீன் வலை; பொன் வளை; பளிங்கு மண்டபம்; இங்கு, மீன், பொன், பளிங்கு முதலிய பெயர்ச்சொற்களே பெயரடைகளாக வந்தன. இவை விகுதியுருபு ஏலா.

(3) சுட்டு, வினா இவை அடியாகப் பிறந்த பெயரடைச் சொற்களோடு இவ்விகுதியுருபு வராது. (உ-ம்) அந்த நாள்; இந்த வீடு; எந்த இடம்?

(4) பெயரடியாகப் பிறந்த பெயரடைச் சொற்களோடும் இவ்விகுதியுருபு வராது. (உ-ம்) அதிக வேகம்; அதிக அழகு; அமுத சுரபி; அதிசயப் பிறவி; அன்ன நடை; ஆகாய விமானம்; ஆயுத உதவி; ஆனந்த விகடன்; இட நெருக்கடி; இலக்கிய மேதை; இனிய கவிதை; எண்ண அலைகள்; காட்டு மிருகம்; கிராம நிகழ்ச்சி; கொடுந்தமிழ், வெங்காய தோசை முதலியன. இவை 'அதிசயவா வேகம் என்பதுபோல வாரா. அதிகமா வேகம் என்னும்பொழுது அதிகம் பெயர்; பெயரடையன்று. இங்கு அதிக-, அக-, அமுத-, அதிசய-, அன்ன-, ஆகாய-, ஆயுத-, ஆனந்த-, இட-, இலக்கிய-, இனிய-, எண்ண-, காட்டு-, கிராம-, கொடுந்-, வெங்காய- என்பன அதிகம், அகம், அமுதம், அதிசயம், அன்னம், ஆகாயம், ஆயுதம், ஆனந்தம், இடம், இலக்கியம், இனிமை, எண்ணம், காடு, கிராமம், கொடுமை, வெங்காயம் இவற்றின் அடியாகப் பிறந்த பெயரடைச் சொற்கள். இவற்றைப் பெயரடியாகப் பிறந்த பெயரெச்சம் என்று கூறலாமா?

(5) . பெயரடை உருபுகளான -ம் (மா> மாம்பழம்), -ஆன (அழகு> அழகான. -த்து (தூரம்> தூரத்து), -ட்டு (சாப்பாடு> சாப்பாட்டு), -இன் (அன்னை> அன்னையின் ஆணை) முதலியவற்றோடும் இவ்வினாவுருபு வராது.

(6) எண்ணுப்பெயர் அடியாகப் பிறந்த பெயரடைகளோடும் இவ்வினாவுருபு வராது. (உ-ம்) ஒரு, இரு, ஒன்றாம், இரண்டாம், ஒன்றே, நூற்றி முதலியன.

(7) பெயரெச்சத்தோடும் வராது. இதுவும் பெயரடையாகவே வருகிறது. (உ-ம்) விழுந்த வண்டி.

(8) வினையடியாகப் பிறந்த உம் ஈற்றுப் பெயரடையோடும் வராது. இதே வடிவம் வினை முற்றாகவும் வரும். அப்பொழுது அந்த வினைமுற்றோடு இவ்வினாவுருபு வரும். (உ-ம்) படம் பேசும்; படம் பேசுமா? இங்குப் பேசும் என்ற வினைமுற்றோடு ஆகார வினாவுருபு வந்தது. ஆனால் பேசும் படம் என்னும்பொழுது, பேசும் என்பதோடு ஆகார வினாவுருபு வராது. இங்குப் பேசும் என்பது படத்திற்கு அடை. கொஞ்சும் சலங்கை, பொன்விளையும் பூமி, வளரும் பயிர், வாழும் வகை என்பன மேலும் சில உதாரணங்கள்.

(9) எதிர்மறை உருபுகளாகிய ஆ, ஆத இவற்றின் பின்பும் வருதல் இல்லை. இவ்வெதிர்மறை உருபுகளேற்கும் சொற்கள் பெயரடைகளாகவே வருகின்றன. (உ-ம்) அடங்கா உள்ளம்; சாகா வரம்; தூண்டா விளக்கு; நந்தா விளக்கு; பொருந்தா உணவு; வாடா மலர்; (தாய்) இல்லாப் பிள்ளை; (கவலை) இல்லா மனிதன்; படிக்காத மேதை; பொல்லாத மனிதன்.

(10) எங்கள், நம், உன், உங்கள் முதலிய இடப்பெயர்களோடும் வராது. இவைகளும் பெயரடைகள்.

(உ-ம்) எங்கள் தலைவர்; நம் பேராசிரியர்; உன் மனைவி; உங்கள் தம்பி.

இதனால் ஆகார வினாவுருபு பெறுதல் இயலாது பெயர் கொண்டு முடியும் சொற்கள் எல்லாம் பெயரடைகள் எனப் பெயரடைகளுக்கு இலக்கணம் வகுக்கலாம். இது ஓரளவு எதிர்மறை விளக்கமாகவே அமையும்

2

பொதுவாக வினைமுற்றோடும், வினைகொண்டு முடியும் எந்தச் சொல்லோடும் இவ்வினாவுருபு வரும். (உ-ம்) வந்**தா?** வர**வா?** வந்து கொண்**டா?** வேகமாக**வா** வந்தான்**?** நேற்**று** வந்தான்**?** தினமு**மா** போகிறான்**?** தினமும் போகிறா**னா?**

வினையுள்ளும் சிற்சில இடங்களில் ஆகார வினாவுருபு வருதல் இல்லை.

(1) ஏவல் வினையோடு வராது. இந்த ஏவல் வினைவடிவே வினைத்தொகையிலும் இருப்பதால் வினைத்தொகையிலும் வினையோடு இவ்வினாவுருபு வராது. (உ-ம்) பொரி கடலை, சுடு தோசை. அன்றியும் வினைத்தொகை பெயர் கொண்டு முடிதலின், வினை இங்குப் பெயரடை எனவும் கொள்ள லாம். பெயரடைக்கு நாம் முன்பு கூறிய விளக்கத்தாலும் இங்கு வினையைப் பெயரடை எனவே கொள்ளவேண்டும்.

(2) வினை எச்சம் பெயரெச்சத்தின் அடையாக வரும்பொழுது, வினை எச்சத்தோடும் ஆகார வினாவுருபு வராது. (உ-ம்) தொடர்ந்து படித்த புத்தகம். தொடர்ந்து என்ற வினையெச்சத்தோடு இங்கு இவ்வுருபு வராது. ஆனால் வினைகொண்டு முடியும்பொழுது வரும். (உ-ம்) தொடர்ந்து படித்தான், தொடர்ந்**தா** படித்தான்?

3

வேறுசில இடங்களிலும் ஆகார வினவுருபு வருதல் இல்லை.

(1) பெயர்ச்சொல்லை அடுத்து **மாத்திரம்** வருமாயின் அப்பெயர்ச் சொல்லோடு இவ்வினவுருபு வராது. (உ–ம்) நான் மாத்திரம்; தென்னலிராமன் மாத்திரம்; எனக்கு மாத்திரம்.

(2) வினை எச்சத்தை அடுத்து **விட்டு, கொண்டு** இவை வருமாயின் வினையெச்சத்தோடும் இவ்வினவுருபு வராது. (உ–ம்) சாப்பிட்டுவிட்டு, கொடுத்துவிட்டு, அடித்துவிட்டு, படித்துவிட்டு, பெற்றுக்கொண்டு, படுத்துக்கொண்டு, எடுத்துக்கொண்டு முதலியன.

(3) இரட்டிப்புச் சொற்களின் இடையே இவ்வாகார வினவுருபு வருதல் இல்லை. (உ-ம்) நடுநடுங்கி, படபடத்து, விடுவிடுத்து, கடுகடுத்து.

(4) பக்கவாத்தியச் சொற்களின் இடையேயும் வருதல் இல்லை. (உ-ம்) வந்துசிந்து, சுட்டுசொட்டு, மங்கிநொங்கி, தேடித்திராவி, கூடிக்குலாவி, வாடிவதங்கி, அலுத்துச் சலுத்து, கூனிக்குறுகி.

(5) எதிரொலிச் சொற்களின் இடையேயும் இவ் வினவுருபு வருதல் இல்லை. (உ-ம்) வந்துகிந்து; பாடிகீடி; பாட்டுகீட்டு; பஞ்சுகிஞ்சு முதலியன.

**வாக்கியம், சொற்றொடர்களில்**

1

பொதுவாக ஒரு வாக்கியத்தில் ஒரு இடத்திற்குமேல் இவ்வாகார வினவுருபு வராது. அவ்வாறு வருமாயின் இவ்வினவுருபு வருகின்ற சொற்றொடர் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வாக்கியமாகப் பிரிந்து விடுகிறது. ஒரு வாக்கி

யத்தை உதாரணமாகக் கொண்டு அதில் எங்கெல்லாம் இவ்வாகார வினுவுருபு வருகிறது என்று பார்ப்போம்.

நேற்றுச் சிதம்பரம் முனிசிபல் தேர்தலைக் காரணம் காட்டிப் பல்கலைக்கழகம் மூடப்பட்டது.

(1) நேற்ரு சிதம்பரம் முனிசிபல் தேர்தலைக் காரணம் காட்டிப் பல்கலைக்கழகம் மூடப்பட்டது?

(2) நேற்றுச் சிதம்பரம் முனிசிபல் தேர்தலையா காரணம் காட்டிப் பல்கலைக் கழகம் மூடப்பட்டது?

(3) நேற்றுச் சிதம்பரம் முனிசிபல் தேர்தலைக் காரணமா காட்டிப் பல்கலைக் கழகம் மூடப்பட்டது?

(4) நேற்றுச் சிதம்பரம் முனிசிபல் தேர்தலைக் காரணம் காட்டியா பல்கலைக்கழகம் மூடப்பட்டது?

(5) நேற்றுச் சிதம்பரம் முனிசிபல் தேர்தலைக் காரணம் காட்டிப் பல்கலைக்கழகமா மூடப்பட்டது?

(6) நேற்றுச் சிதம்பரம் முனிசிபல் தேர்தலைக் காரணம் காட்டிப் பல்கலைக்கழகம் மூடப்பட்டதா?

இந்த வாக்கியத்தில் மேலே காட்டிய இடங்களைத் தவிர வேறு எங்கும் ஆகார வினுவுருபு வருதல் இயலாது. ஒன்றற்கு மேற்பட்ட இடங்களில் ஆகார வினுவுருபு வருமாயின் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனி வாக்கியமாகப் பிரிந்து விடுகிறது. (உ-ம்) நேற்ரு? சிதம்பரம் முனிசிபல் தேர்தலையா காரணம் காட்டிப் பல்கலைக்கழகம் மூடப் பட்டது? (2) நேற்ரு? சிதம்பரம் முனிசிபல் தேர்தலையா? காரணம் காட்டியா பல்கலைக்கழகம் மூடப்பட்டது? இவ்வாறே வேறு இடங்களிலும் இவ்வினுவுருபைச் சேர்த்துக் கண்டுகொள்ளலாம். இவை ஒவ்வொன்றும் தனித்தனி வாக்கியம் என்பதை இங்கு ஏற்படுகின்ற விட்டிசையாலும், இவை தனித்து நிற்கும் ஆற்றலுடைமையாலும் நன்கு உணரலாம்.

2

**ஆல்** கொண்டு முடியும் நிபந்தனைச் சொற்றொடர் களினுள்ளே (phrase) இவ்வினு வருதல் இல்லை. இத்தொடரில் **ஆல்** உருபின் பின்புதான் இவ்வினுவுருபு வரும். வேறெங்கும் வராது.

(உ-ம்) (1) அப்பொழுது குதிரைப் படைத் தலைவன் இருந்**தால்**.........

(2) அவரவர் பணத்தை ஏப்பம் விட்டு விட்டுக் குதிரையை நன்ருகப் போஷிக்காவிட்**டால்**.........

(3) குதிரையை இப்படி வளர்த்**தால்**......

(4) நான் இன்னும் அதைப் போஷாக் குடன் வளர்த்திருந்**தால்**.........

எழுவாயோடு இவ்வினுவுருபு வரும். ஆனுல் எழுவாய் ஒரு வாக்கியத்தின் இறுதியில் வருமாயின் அவ்வெழு வாயோடு இவ்வினுவுருபு வராது. வாக்கியத்தில் எழுவாய் வேறு எங்கு வந்தாலும் அதனேடு வரும். கீழே கொடுக் கப்பட்டுள்ள உதாரணங்களில், முதலில் எழுவாயை இறுதி யில் கொடுக்கிறேம். பின்பு வேறு இடங்களில் இவ்வெழு வாயை வினுவுருபோடு கொடுக்கிறேம்.

(1) அ. என்று வெகுண்டான் அந்தத் தலைவன்.

ஆ. என்று அந்தத் தலைவ**ஞ** வெகுண்டான்?

(2) அ. தாடியை உருவிக்கொண்டே அவசரப்பட்டான் அதிகாரி.

ஆ தாடியை உருவிக்கொண்டே அதிகாரி**யா** அவசரப்பட்டான்?

(3) அ. உடனே கூப்பிட்டு விசாரித்தான் அரசன்.

ஆ. அரச**ஞ** உடனே கூப்பிட்டு விசாரித்தான்?

இ. உடனே அரச**ஞ** கூப்பிட்டு விசாரித்தான்?

ஈ. உடனே கூப்பிட்டு அரச**ஞ** விசாரித்தான்?

(4) அ. பொல்லாத முரட்டுக் குதிரையாக இருக்கிறது அது.

ஆ. அதுவா பொல்லாத முரட்டுக் குதிரையாக இருக்கிறது?

இ. பொல்லாத முரட்டுக் குதிரையாக அதுவா இருக்கிறது?

முடிவு

ஆகார வினாவுருபு வரும் இடங்களையும் வராத இடங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, சொற்றொடர்களுக்கு (phrase) இதன் அடிப்படையிலேயே இலக்கணம் கூறலாம் போலும். ஆகார வினாவுருபு வருதல் இயலாது இணைந்து நிற்கும் சொற்கள் சொற்றொடராகும். (உ-ம்) (1) தொடர்ந்து படித்த நல்ல புத்தகம்; மிக நல்ல பையன் — இவைகளெல்லாம் பெயர்ச் சொற்றொடர், பெயரைக்கொண்டு முடிதலின். (2) அப்பொழுது குதிரைப் படைத்தலைவன் இருந்தால்........; குதிரையை இப்படி வளர்த்தால்........; இவை வினைச் சொற்றொடர், வினைகொண்டு முடிதலின்.

[1] அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் துறை எம். ஏ., வகுப்பு மாணவர்களுக்கு நடத்திய கருத்தரங்கில் கிளைத்தது இக்கட்டுரை. இதற்குரிய செய்திகளில பெரும் பகுதியை மாணவ நண்பர் கோதண்டராமன் திரட்டினார். பின்பு இக்கட்டுரை அத்துறை ஆராய்ச்சிக் குழுவில் படிக்கப்பட்டது. அப்பொழுது எழுந்த தடைவிடைகள் பல. இதனால் மேலும் இக்கட்டுரை தெளிவுற்றது. இதற்குதவிய அனைவருக்கும் என் நன்றி.

2. இக்கட்டுரையில் வருகின்ற சொற்களின் ஆட்சியைக் கீழே தருகிறோம். உருபு- morph, கட்டுருபு- bound morph, தனியுருபு- free morph, வாக்கியம்- sentence, சொற்றொடர்- phrase.

# 8. ஙனமா? அனமா?

1. தற்காலத்தமிழில் **யாங்ஙனம், எங்ஙனம்** என்ற வினாக்களும், **அங்ஙனம், இங்ஙனம்** என்ற சுட்டுக்களும் வழங்குகின்றன. தொல்காப்பியத்தில் மூன்றிடங்களில் **ஆங்கனம்** என்ற சொல் வருகின்றது.[1] சங்க இலக்கியங்களிலும் **ஆங்கனம்** என வருகின்றது இங்கெல்லாம் இச்சொல் **ஆங்ஙனம்** என்றிருக்கவேண்டுமா? **ஆங்கனம்** என்றிருக்க வேண்டுமா? என்பதைப்பற்றி திரு. வே வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்களும், திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களும் வேறுபட்டுத் தடைவிடைகள் எழுதினர்.[2] ரெட்டியார் அவர்கள் ஆங்கனம் என்று பாடங்கொண்டார். நாட்டார் அவர்கள் ஆங்ஙனம் என்ற பாடமே பொருந்தும் என்றார். ரெட்டியார் அவர்கள் தொல்காப்பியர் ஙகரம் மொழிக்கு முதலில் வரும் எனக் கூறாமையால் ஆங்கு+அனம் என்றே இச்சொல்லைப் பிரிக்கவேண்டும் என்றார். **ஆங்கனம்** பிற்காலத்தில் **ஆங்ஙனம்** என்றாயிற்று; மாங்காய், தேங்காய் என்பன மலையாளத்தில் மாங்ஙாய், தேங்ஙாய் என்றாயது போல என்றார். நாட்டார் அவர்கள் நன்னூலை ஆதாரமாகக்கொண்டு மேலே செல்கின்றார். "சுட்டியா எகர வினாவழி அவ்வை ஒட்டி-

ஙவ்வும் முதலா கும்மே'' (நன்னூல் 51) என்பது நன்னூல் சூத்திரம். நன்னூலார் கருத்துப்படி **அங்ஙனம், இங்ஙனம், எங்ஙனம், யாங்ஙனம்** என்ற சொற்கள் அவர் காலத்து வழக்கிலிருந்தன என்பது பெறப்படுகின்றது. அவர் ஙனம் என்பதைத் தனிச்சொல்லாகக் கொண்டு இதனால் ஙகரம் மொழிக்கு முதலில் வரும் எனவும் கொண்டார்.

ரெட்டியார் அவர்களும் நாட்டார் அவர்களும் எழுதிய தடைவிடைகளை இங்கு விரித்துக்கூறத் தேவை இல்லை. அவர்கள் தடைவிடைகள் வந்த இடங்கள் அடிக்குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமன்று. புதிதாகக் கிடைத்த ஆதாரங்களைக் காட்டுவதே நம் நோக்கம்.

2. **யாங்ஙனம், யாங்கனம், ஆங்ஙனம், ஆங்கனம், அங்ஙனம், அங்கனம், ஈங்ஙனம், ஈங்கனம், இங்ஙனம், எங்ஙனம்** என்ற சொற்கள் இன்று வழக்கிலிருக்கின்றன. இவற்றுள் கனச்சொல் முந்தியதா? ஙனச்சொல் முந்தியதா? இவற்றின் வரலாறு என்ன? — இவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

தமிழில் இரண்டு வகையான மெய்மயக்கங்களைக் காண்கிறோம். உடனிலை மெய்மயக்கம், வேற்றுநிலை மெய்மயக்கம் என்பன அவை. வல்லினம் ஆறு, மெல்லினம் ஆறு, இடையினத்தில் யகரம், லகரம், வகரம் ளகரம் (நீங்கியவை ரகரம், ழகரம் இரண்டும்) ஆகிய இவை அனைத்தும் தொல்காப்பியர் கருத்துப்படி உடனிலை மெய்மயக்கமாக வரும். அதாவது ரகரம், ழகரம் இரண்டும் நீங்க மற்றவை உடனிலையாக மயங்கும்.[3] இதற்குத் தொல்காப்பியத்திலேயே உதாரணங்களைக் காணலாம்.

**உதாரணம்**

-க்க்- நீக்கு (1037), அடக்கம் (1206), ஆக்கல் (1047), ஊக்கிய (987)

-ச்ச்- நிச்சம் (1045), அச்சம் (562, 739), எச்சம் (174)

-ட்ட்- ஓட்டல் (1006), அட்ட (1009)

-த்த்- நிமித்தம் (1037), அடித்து (1414), ஏத்தல் (1114, 1153), ஏத்தி (1036, 1037)

-ப்ப்- அகப்படும் (1394), அப்பர் (1501, 1547), ஒப்பு (558, 1193), ஒப்பின் (556)

-ற்ற்- அவற்றின் (1559), அவற்று (628), ஆற்றல் (1075), ஈற்று (36, 295), ஏற்றல் (550, 588)

-ங்ங்- ஆங்ஙனம் (1308, 1469, 1498)

-ஞ்ஞ்- ஐஞ்ஞூறு (1358)

-ண்ண்- வண்ணம் (1468), அண்ணம் (83, 89), எண்ணி (1610)

-ந்ந்- முந்நீர் (980), அந்நிலம் (965), அந்நிலை (162, 934)

-ம்ம்- சும்மை (832), அம்ம (638, 761)

-ன்ன்- துன்னுதல் (1025), அன்ன (2, 119, 143), இன்ன (142, 678)

-ய்ய்- எய்யாமை (825)

-ல்ல்- ஓல்லார் (1022), அல்ல (202, 483), இல்லம் (313), இல்லை (47, 63)

-வ்வ்- தெவ்வு (829), அவ்வயின் (712, 1096)

-ள்ள்- உள்ள (653, 1458), உள்ளத்து (1179)

இவ்வாறு உடனிலையாக மயங்கிவரும் இம்மெய்களை நோக்கின் வல்லினம் ஆறும் குறிலை அடுத்தும், நெடிலை

அடுத்தும் மயங்கிவரக் காண்கிறோம். மற்றைய (ஆங்ஙனம், ஐஞ்ஞூறு நீங்க) குறிலை அடுத்தே மயங்கி வருகின்றமையைக் காண்கிறோம். இந்நிலை தற்காலத் தமிழுக்கும் ஒக்கும். தமிழ் மொழியின் அமைப்பில் காணப்படும் இயல்புகளில் இதுவும் ஒன்று. கொரத்தை அடுத்து இடையினம் மயங்கி வருகின்றமையைக் காணின் ஐகாரத்தை நெட்டெழுத்தாகக் கருதுவதா என்ற ஐயம் நிகழ்கின்றது. நமது இலக்கண ஆசிரியர்களும் அதற்கு ஒன்றரை மாத்திரையும், ஒரு மாத்திரையும் விதிக்கின்றனர். மொழியியல் கொள்கைப்படி ஐகாரம் சந்தியக்கரம் (diphthong). உடனிலை மெய்மயக்கத்தில், வல்லினம் ஒழிந்த மற்றைய, இவ்வாறு கட்டுண்டு வருவதைக் காணின் **ஆங்ஙனம், ஈங்ஙனம், யாங்ஙனம்** என்ற இம்மூன்றுமே நெட்டெழுத்தை அடுத்து உடனிலையாக மயங்கி வரக் காண்கிறோம் எனவே **ஆங்கனம், ஈங்கனம், யாங்கனம்** என்பனவே **ஆங்ஙனம், ஈங்ஙனம், யாங்ஙனம்** என்பனவற்றின் தொன்மை வடிவங்கள் என்பது பெறப்படுகின்றது -ங்க- என்ற வேற்றுநிலை மெய்மயக்கம் குற்றெழுத்தை அடுத்தும் நெட்டெழுத்தை அடுத்தும் வரும். (உ-ம்) ஈங்கு (558), ஓங்கிய (1080), செங்கடுமொழியான் (1060), செங்கோலரசர்க்கு (1571). இதனால் **ஆங்கனம்** என்று ஆகாரத்தை அடுத்து -ங்க்- என மயங்கும் மயக்கமே இயல்பானது; தமிழ் மொழியின் அமைப்புக்கும் பொருத்தமானது.

தொல்காப்பியத்தில் **ஆங்கனம்** என்ற இச்சொல் (1) **ஆங்கனம்** விரிப்பின் அளவிறந்தனவே (1308), (2) **ஆங்கனம்** அறிப அறிந்திசினோரே (1469), (3) ஓங்கிய மொழியாள் **ஆங்கனம்** ஒழுகின் (1498) என்று மூன்று இடங்களில் வருகிறது. இவ்விடங்களில் திரு. ரா. இராகவையங்கார்,[4] கழகத்தார்[5] இருவரும் **ஆங்ஙனம்**

எனப் பாடங் கொண்டனர். திரு. சு. வையாபுரிப் பிள்ளை,[6] திரு. கணேசய்யர்[7] இருவரும் **ஆங்கனம்** என்று பாடங் கொண்டனர். வ. உ. சி.[8] பதிப்பில் முதல் இடத்தில் **ஆங்கனம்** என்ற பாடமும், இரண்டாம் இடத்தில் **அங்கென** என்ற பாடமும், மூன்றும் இடத்தில் **அங்கவண்** என்ற பாடமும் காணப்படுகின்றன. எஸ். இராஜம்[9] பதிப்பில் முதல் இடத்தில் **ஆங்கனம்** என்ற பாடமும், இரண்டாம் இடத்தில் **அங்கு என** என்ற பாடமும், மூன்றும இடத்தில் **ஆங்கண், ஆங்கவண்** என்ற பாடமும் காணப்படுகின்றன. ஆனல் பிரதிப் பாடக்குறிப்பில் **ஆங்ஙனம், ஆங்ஙனம், ஆங்கனம்** என்பன முறையாக ஒவ்வொன்றிற்கும் கொடுக்கப்பட்டுள்ளன. **ஆங்கென, ஆங்கவண்** என்பனவற்றில் —ங்க— என்ற வேற்றுநிலை மெய்மயக்கம் நெட்டெழுத்தை அடுத்து வருகின்றது. இது தமிழ் மொழியமைப்பிற்குப் பொருந்தியதே மற்றவற்றில் பெரும்பான்மையோர் கொண்ட பாடம் **ஆங்கனம்** என்பதுவே. தமிழ் மொழியமைப்பும் இப்பாடத்தையே வலியுறுத்தும். இதனல் தொல்காப்பியத்திலும் **சங்க** இலக்கியங்களிலும் **ஆங்கனம்** என்று பாடங்கொள்வதே சிறப்புடையது.

3. **ஆங்கனம்** என்பதை **ஆங்கு + அனம்** என்று பிரிக்கின்றூர் ரெட்டியார் அவர்கள்; நன்கனம் என்பதை நன்கு + அனம் என்று பிரிப்பதைப்போல.[10] அனம் என்பது தன்மைப்பொருளை உணர்த்தும் உருபு (morph). இது ஆங்கு, ஈங்கு என்று இடம், காலம், தன்மை இவற்றையுணர்த்தும் சுட்டெச்சங்களோடும், யாங்கு என்ற வினைவெச்சத்தோடும் இணைந்து அவற்றைத் தன்மைப் பொருளைக் கொடுக்கும் சுட்டெச்சம், வினைவெச்சமாக மாற்றுகின்றது.

தொல்காப்பியம் முதல் மணிமேகலை ஈறாக உள்ள இலக்கியங்களில், அதாவது தொல்காப்பியம், சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், மணிமேகலை இங்கெல்லாம் **ஆங்கனம், ஈங்கனம், யாங்கனம்** எனவும், **ஆங்கு, ஈங்கு, யாங்கு** எனவும் நெட்டெழுத்து முதலிய வடிவங்கள் மிகுந்து காணப்படுகின்றன. குற்றெழுத்து முதலிய வடிவங்கள் (அங்கனம், அங்கு முதலியன) மிக அருமையாகவே காணப்படுகின்றன. அவ்விடங்களையும் ஐயுறுகின்றனர். இதனால் **அங்ஙனம், இங்ஙனம், எங்ஙனம், அங்கு, இங்கு, எங்கு** என்பன பிறகால வழக்கென்பது பெறப்படுகின்றது.

பண்டை இலக்கியங்களில் **ஆங்கு, ஈங்கு யாங்கு** என நெட்டெழுத்து முதலிய வடிவங்களே மிகுந்து காணப்படுகின்றன. தொல்காப்பியரும், பவணந்தியும் அ இ, உ என்பனவே சுட்டெழுத்துக்கள் என்கின்றனர். எனவே அ இ, என்பவை ஆங்கு, ஈங்கு என்பனவற்றிற்கும் அடியா? என்ற ஐயம் எழுகின்றது. தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் ஆன், ஈன் என்பன இடப்பொருளில் வருகின்றன. ஆகையால் ஆங்கு, ஈங்கு என்ற இடச்சுட்டுக்களுக்கு இடப்பொருளைத் தரும் ஆன், ஈன் என்பனவற்றையே அடியாகக்கொள்வது பொருந்தும். எனவே ஆன் + கு ▷ ஆங்கு; ஈன் + கு ▷ ஈங்கு என்றாயது என்றல் பொருந்தும்.[12]

4. தமிழில் மாங்காய் மலையாளத்தில் மாங்ஙாய் என்றாயிற்று; தேங்காய் தேங்ஙாய் என்றாயிற்று; தூங்கு தூங்ஙு என்றாயிற்று; வேங்கை வேங்ஙா என்றாயிற்று; வாங்கு வாங்ஙு என்றாயிற்று. இத்தகைய **ங்க் ▷ ங்ங்** மாற்றம் பிற்காலத்தில் மலையாளம் வேறாகப் பிரிந்த பொழுது எழுந்த மாற்றம். இதைப் போலவே **ஆங்கனம்** முதலியன **ஆங்ஙனம்** என்று பிற்காலத்தில் மாறின.

ஒருவேளை இது குடநாட்டில் தோன்றிய வழக்காயினும் ஆகலாம்.

எனினும் **ஆங்ஙனம், ஈங்ஙனம், யாங்ஙனம்** என்ற வழக்கு தமிழ்மொழியின் அமைப்புக்கு முரண்பட்டே வழங்கிற்று. இம்முரண்பாட்டைத் தவிர்க்கத் தோன்றிய வடிவங்களே **அங்ஙனம், இங்ஙனம்** என்பன; இவைகளில் **-ங்ங்-** என்ற உடனிலை மெய்மயக்கம் குற்றெழுத்தை அடுத்தே வருகின்றது. இது தமிழ்மொழியின் அமைப்புக்கு பொருத்தமானதே. இதனால் இவற்றை அங்கு+அனம், இங்கு+அனம், எங்கு+அனம் என்று பிரிக்கத் தேவையில்லை என்று கருதியே நன்னூலார் **ஙனம்** என்று பிரித்து **ஙனம்** மொழிக்கு முதலாயிற்று என்றார்போலும் எனினும் யாங்ஙனம் என்பது தமிழின் அமைப்புக்கு முரண்பட்டே இருந்தது. அதனால் தமிழின் அமைப்புக்கொத்த எங்ஙனம் என்பது வழக்கிற்கு வந்தது. யாங்ஙனம் பொதுவாக வழக்கிழந்தது, இறையனார் களவியல் உரையில் **அங்ஙனம்** இருபத்தெட்டு தடவை வருகிறது; **ஆங்ஙனம்** நான்கு தடவைதான் வருகிறது. அதில் இரண்டிடம் சூத்திர மேற்கோள். **இங்ஙனம்** இருபச்தெட்டு தடவை வருகிறது. **ஈங்ஙனம்** வரவே இல்லை. **எங்ஙனம்** பதினேழு தடவை வருகிறது.. **யாங்ஙனம்** ஏழு தடவை வருகிறது. இந்நூல் ஏறத்தாழப் பத்தாம் நூற்றுண்டைச் சார்ந்தது[11]. இவ்வாறு இவற்றின் ஆட்சி வழக்குத் தமிழ்நூல்களின் காலத்தை அறியவும் ஓரளவு துணை செய்யலாம்.

**அடிக்குறிப்பு**

1. இக்கட்டுரையில் தொல்காப்பிய மேற்கோளாகக் கொடுக்கப்பட்டுள்ள சூத்திர எண்களெல்லாம் தொல் காப்பியம்-மூலம், கழக வெளியீடு, 1954, என்பதைப்

பின்பற்றிக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆங்கனம் வந்துள்ள இடங்கள் 1308, 1469, 1498.

2. வே. வேங்கடராஜுலு ரெட்டியார்
**கபிலர்**, சென்னைப் பல்கலைக்கழகம், 1936,
பக்கம் 6, 118.

**செப்பமுடையார்க்குச் செய்யும் விண்ணப்பம்,** தமிழ்ப் பொழில், துணர் 13 (1938–39), மலர் 9, 10, 11. தமிழ்ப் பொழில், துணர் 17, (1941–42) பக்கம் 133 தொடங்கி, ந மு. வேங்கடசாமி நாட்டார்.

**செப்பமுடைமை**

தமிழ்ப்பொழில், துணர் 13 (1937–1938)
தமிழ்ப்பொழில், துணர் 14 (1938–39)
பக்கம் 9 தொடங்கி.

3. மெய்ந்நிலை சுட்டின் எல்லா வெழுத்தும்
தம்முற்றும் வரூஉம் ரழவலங் கடையே.
(தொல்காப்பியம்–30)

4. ரா இராகவையங்கார் (பதிப்பு)
**தொல்காப்பியம்,** செய்யுளியல், நச்சினார்க்கினியருரை,
மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பிரசுரம் 10, 1917.

5. தி. சு. பாலசுந்தரம் பிள்ளை (பதிப்பு)
**தொல்காப்பியம் (மூலம்)**
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
சென்னை–1, 1954.

6. எஸ். வையாபுரிப்பிள்ளை (பதிப்பு)
**தொல்காப்பியம், பொருளதிகாரம்,** 1934

7. சி கணேசய்யர் (பதிப்பு)
**தொல்காப்பியம் — பொருளதிகாரம்,** 1943.

8. வ. உ. சிதம்பரம் பிள்ளை
எஸ். வையாபுரிப் பிள்ளை (பதிப்பு)

9. எஸ். ராஜம் (பதிப்பு)
**தொல்காப்பியம் — மூலம்**
5, தம்புச் செட்டி தெரு
சென்னை–1, 1960.

10. வே. வேங்கடராஜுலு ரெட்டியார்
**திராவிட மொழியின் மூவிடப் பெயர்கள்**
(பக்கம் 117, 118)
சென்னைப்பல்கலைக் கழகம், 1939

11. கலித்தொகை, நெய்தற்கலி, பா–28–ல் வருகின்ற அங்கு என்பதை ஐயுறுகின்றார் ரெட்டியார் அவர்கள். தொல்காப்பியத்திலும் 1085–ம் சூத்திரத்தில் ஒரே இடத்தில் அங்கதன் என வருகிறது.

12. இக்கட்டுரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மொழியியல் துறை, ஆராய்ச்சிக் குழுவில் (**Research Circle**) படிக்கப்பட்டபொழுது எனது நண்பர்கள் திரு. அருணாசலம், திரு. அண்ணாமலை இருவரும் இக் கருத்தினைக் கூறினர்.

13. இவ்விடங்களைத் திரட்டிக் கொடுத்தவர் மொழியியல் துறை ஆராய்ச்சி மாணவி குமாரி. காமாட்சி சீனிவாசன் அவர்கள். இவ்வம்மையார் இந்நூலைப் பற்றிய ஆராய்ச்சியைத் தமது எம். லிட். ஆராய்ச்சிப் பட்டத்திற்கு எடுத்துக்கொண்டார்.

---

# 9. வற்றென் சாரியை

தொல்காப்பியர் தம் இலக்கண நூலில் கீழ்வரும் சாரியைகளையும் அவை வரும் இடங்களையும் கூறுகிறார்.[1]

1. அக்கு — இது ஊன், ஈம், கம், தாழ், முதலிய சொற்களின் பின்வரும் (270, 329, 384).[2]

2. அத்து — இது மக, நிலா, பனி, மழை, விண், வெயில், இருள், அழன், புழன், மகரவீற்று நாட்பெயர்க் கிளவி, ஆயிரம் முதலியவற்றின் பின்வரும் (125, 193, 228, 241, 287, 305, 317, 377, 402).

3. அம் — இது புளி, எரு, செரு, பனை, அரை, ஆவிரை, பீர், ஆல், வேல், குமிழ், ஈரெழுத்து மொழி, வல்லொற்றுத் தொடர், குற்றியலுகரவீற்று மரப்பெயர்க் கிளவி, மக்கள் முறை தொகூஉம் பெயர் முதலியவற்றின் பின்வரும் (244, 260, 283, 350, 365, 375, 386, 415, 417).

4. அன் — சுட்டு முதல் உகரம் (அது, இது, உது) யாது, பெண்டு முதலியவற்றின் பின்வரும் (176, 200, 421).

5. ஆன் — இது மகர, இகர, ஐகாரவீற்று நாட் பெயர்க்கிளவி, திங்கள், முதலியவற்றின் பின்வரும் (247, 286, 331).

6. இக்கு — இது திங்கட்பெயரின் பின்வரும் (248).

7. இன் — இது பனி, மக, ஆடூஉ, மகடூஉ, சே, வண்டு, பெண்டு, தென், உரும், அழன், புழன், பனை, கா, பத்து (இரண்டு நீங்க எட்டு வரையுள்ள எண்கள் வரும் பொழுது), ஒன்பது, ஆயிரம், அ, ஆ, உ, ஊ, ஏ, ஔ ஈற்றுச் சொற்கள், இவற்றின் பின்வரும் (169, 173, 184, 186, 193, 218, 241, 271, 279, 420, 433, 470, 476).

8. உம் — இது எல்லாவற்றை, எல்லார்தம்மை, எல்லீர்நும்மை இவற்றின் பின்வரும் (189, 191).

9. ஏ — இது அளவு, நிறை, எண் இவைகளைக் குறிக்கும் சொற்களின் பின்னும் (தத்தமக்கு இனமாய குறைந்த சொற்கள் பின் தோன்றும் பொழுது), இரு திசைச் சொற்கள் புணரும் பொழுதும் வரும் (164, 431).

10. ஒன் — இது ஓகார இறுதிச் சொற்களின் பின் வரும் (180).

11. கெழு — இது வகர, னகரவீற்றுச் சொற்களின் பின் வரும் (481).

12. வற்று — பல, சில, யா, அவை, இவை, உவை எல்லாம் இவற்றின் பின்வரும் (174, 175, 183, 189).

மேற்கூறிய சாரியைகளில் அக்கு, அம், ஆன், உம் இச்சாரியைகளைத் தொல்காப்பியர் விதிக்கும் இடங்களைத் தவிர வேறு இடங்களில் எடுத்தாளவில்லை.

தொல்காப்பியர் சாரியைக்கு விளக்கம் கூறவில்லை.

அடியார்க்கு நல்லார் "சாரியையாவது சொல் தொடர்ந்து செல்லும் நெறிக்கண் நின்று அதற்குப் பற்றுக் கோடாகச் சிறிது பொருள் பயந்ததும் பயவாததுமாய் நிற்பது" (சிலப்பதிகாரம் – பதிகம் 61 – 62 வரை) என்று சாரியைக்கு விளக்கம் கூறுகிறார். "சாரியை யென்றதன் பொருள், வேறாகி நின்ற இரு மொழியுந் தம்மிற் சார்தற் பொருட்டு இயைந்து நின்றது" என்கிறார் நச்சினார்க்கினியர் – நச். எழுத் – 118. எனவே சாரியை என்பது புணர்ச்சி நோக்கி வந்த பொருள் பயவா இடைநிலை எனக் கொள்கின்றனர்.

தொல்காப்பியர் கூறிய இச்சாரியைகளெல்லாம் பொருள் பயவா இடைநிலை என்று கூறுவதற்கில்லை. சில பொருள் பயக்கும் இடைநிலைகளாகவே இருக்கின்றன. அவற்றில் ஒன்று வற்று என்பது.

அவன், அவள், அவர், இவன், இவர், உவன், உவள், உவர், எவன், எவள், எவர், அவற்றை, இவற்றை, உவற்றை, எவற்றை, பலவற்றை, சிலவற்றை, இவ் வடிகளை (stem) அது, இது, உது, எது இவைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது சுட்டுப் பெயர்களுக்கும் வினாப் பெயர்களுக்கும் அடிச்சொற்களில் இரண்டு வடிவங்கள் இருப்பதைக் காணலாம். அவ்–, இவ்–, உவ்–, எவ்– என்பன ஒருவகை வடிவம்; இவ்வடிவங்கள் எப்பொழுதும் உயிரெழுத்துக்களின் முன்புதான் வரும். (உ–ம்) அவ்–அன், எவ்–அன், இவ்–அன், உவ்–அன் முதலியன. அ–, இ–, உ–, என்பன மற்றொரு வகை வடிவங்கள். இவை மெய்யெழுத்துக்களின் முன்புதான் வரும். (உ–ம்) அ–து, இ–து, எ–து. இதுபோல் பலவ்–, சிலவ்–, எல்லாவ்– (உ–ம்) பலவ்–அற்றை, சிலவ்–அற்றை, எல்லாவ்–அற்றை, என்பன பல, சில எல்லாம் என்பனவற்றின் உயிர்முன் வரும் வடிவங்கள். இவ்வாறு இச்

சொற்களைப் பகுப்பதால் பகுப்பில் ஒரு வரன்முறையைக் காண்கிறோம். இதனால் இச்சாரியை வற்றெனக் கொள்வதை விட அற்று[4] எனக் கொள்வதே பொருந்தும். நன்னூலாரும் அற்றுச் சாரியையே வகுத்தார்.

தொல்காப்பிய மூலத்தில் (விதிச் சூத்திரங்களைத் தவிர) அற்றுச்சாரியை வரும் இடங்களை நான்காகப் பகுக்கலாம். (1) அகரச்சுட்டு, இகரச்சுட்டு இவற்றின் பின் (3, 24, 26, 49). (2) பல என்ற சொல்லின்பின் — பலவற்றிறுதி, பலவற்றுப் படர்க்கை, பலவற்று மருங்கின் (210, 213, 220, 224, 701, 709). (3) பிற என்ற சொல்லின் பின்—பிறவற்றின் (1037). (4) அகர விறுதிப் பன்மை வினையாலணையும் பெயரின் பின் – கிளந்த வற்றியலான், மொழிந்தவற்றியலான் (602, 781, 879, 1348).

அற்று வரும் இடங்களையும் வராத இடங்களையும் கீழே காண்க.

| பன்மை | ஒருமை |
|---|---|
| யாவற்றை | யாதை |
| அவற்றை | அதை |
| இவற்றை | இதை |
| உவற்றை | உதை |
| எவற்றை | எதை |
| பலவற்றை | |
| பலவற்றிறுதி | |
| பலவற்றுமருங்கின் | |
| பலவற்றுப்படர்க்கை | |
| சிலவற்றை | |
| எல்லாவற்றையும் | |

இரண்டு வரிசைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது அற்று பன்மையிலேயே வரக் காண்கிறோம்; ஒருமையில் வராது. எனவே அற்று இடைநிலையாக

வரும் அஃறிணைப் பன்மை உருபு[5] எனக் கொள்வதே பொருந்தும். இவ்விடைநிலை எப்பொழுதும் வேற்றுமை யுருபின் முன்புதான் வரும். அவை, இவை என்னும் பொழுது ஐ எனவரும் பன்மையுருபு விகுதி. அவற்றை, இவற்றை என்னும் பொழுது அற்று என்னும் பன்மை உருபு இடைநிலை. பலவற்றிறுதி என்பது போன்ற சொற்றொடர்களில் வேற்றுமை உருபு தொக்கி நிற்கிறது.

பல, சில, எல்லாம், பிற என்பன பன்மையைக் குறிப்பன. இவைகளுக்குத் தகுந்த ஒருமை வடிவங்கள் இல்லை. இவற்றொடு பன்மை உருபு — அற்று இடைநிலை, வந்தது, உருபின் மேல் உருபு வந்து முடிந்த முடிபென்க; இது அவர்கள், இவர்கள் என்பன அவர், இவர் என்ற பலர்பாலின் மேல் கள் விகுதி பெற்றாற்போல.

எனவே அற்று இடைநிலையாக வரும் பன்மை உருபு; சாரியை அன்று.

**அடிக் குறிப்பு:**

1. தொல்காப்பியத்தில் இச்சாரியைகள் வரும் இவ்விடங்களைத் தொகுத்துக் கொடுத்தவர் குமாரி ஆர். சீதாபாய். இவ்வம்மையார் ஆராய்ச்சிப் பட்டத்திற்காகத் தொல்காப்பியச் சொல்லகராதி ஒன்று தொகுத்து, அதன் அடிப்படையில் தொல்காப்பியத் தமிழின் இலக்கணப் போக்கையும் ஆராய்ந்தார்.

2. எண்கள் சூத்திர எண்களைக் குறிக்கும். தொல்காப்பியம் — மூலம் — கழக வெளியீடு, 1954.

3. ஈண்டு இடைநிலை என்றது விகுதியாகவோ, தனி நிலையாகவோ வாராத இயல்பு நோக்கி.

4. கட்டுரை இறுதியில் அற்று சாரியை அன்று; பன்மையுருபு என்பது பெறப்படும்.

5. உருபு என்றது morph என்ற பொருளில்.

# 10. மொழியியல் கலைச்சொல் விளக்கம்

## *1. ஒலியியல்*

**ஒலியியல் (Phonetics)**

*மக்கள் எழுப்பும் பேச்சொலியைப் பற்றி எழும் ஒரு விஞ்ஞானத்துறை.*

**நோக்கம் (Scope)**

*மக்கள் தங்களுக்குள்ளே கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கு எல்லா மொழிகளும் பேச்சொலிகளைப் பயன்படுத்துகின்றன. அப்பேச்சொலிகளை விஞ்ஞான முறையில் ஆராய்ந்தால் ஒழிய மொழியைப் பற்றிய ஆராய்ச்சி தெளிவடைந்தது என்று கூறமுடியாது. ஒலியியலில் ஒலிகளை ஆராய்வதற்குச் சில அடிப்படைகளை அமைத்துக்கொண்டு அவற்றின் உதவியால் ஒலிகளின் பிறப்பை விளக்க முயல்கின்றோம்.*

**ஆராயும் முறை**

*ஒலியை ஆராயும் முறையில் மூன்று முறைகள் முக்கியமானவை.*

**1. பௌதிக ஒலி இயல் (Acoustic Phonetics)**

இதில் பேச்சொலிகளின் பௌதிகத் தன்மையை (Physical Properties) ஆராய்கின்றனர். ஒலியுறுப்புக் களின் அசைவுகளால் அங்குள்ள காற்றணுக்களில் உண் டாகும் அதிர்ச்சி, அதனால் ஆகாயத்தில் உள்ள காற்றில் உண்டாகும் அதிர்ச்சி ஆகிய இவைகளை ஆராய்கின்றனர். ஒலி அலைகளாக வரும் இவற்றை அளந்து கணக்கிடலாம். இம்முறையில் ஒலிகளை ஆராய விஞ்ஞானக் கருவிகளும், கணக்கு, பௌதிகம் இவற்றில் பயிற்சியும் தேவை.

**2. கேட்பொலியியல் (Auditory Phonetics)**

இது மனிதனுடைய கேட்கும் தன்மையை அடிப் படையாகக் கொண்டு மொழியை ஆராய்கின்றது. இது அவரவர் தன்மைக்கேற்ப மாறும் இயல்புடைமையால் இது ஒலி ஆராய்ச்சிக்குப் பொருந்துவதன்று.

**3. உச்சரிப்பொலியியல் (Articulatory Phonetics)**

இது மனிதனுடைய உடலுறுப்புக்களை, சிறப்பாக ஒலியுறுப்புக்களை அடிப்படையாகக் கொண்டு ஒலியை ஆராயும் முறையாகும். இவ்வொலியுறுப்புக்களும் அவற் றின் அசைவுகளும் மனித இனத்திற்குப் பெரும்பாலும் ஒன்றுபோல் இருக்கின்றமையால், இவற்றின் அசைவுகளை அடிப்படையாகக் கொண்டு ஒலிகளை ஆராய்வது எளிய, விஞ்ஞான அடிப்படையான முறையேயாகும்.

**ஒலியுறுப்புக்கள் (Organs of Speech)**

நுரையீரல், அதனைச் செயற்படுத்தும் தசை நார்கள், குரல்வளை, அதன் மேற்பாகம், வாய், வாயின் உள்ளே இருக்கும் உறுப்புக்கள், இதழ், மூக்கறை, மூக்கறை வாயில் இவைகளெல்லாம் ஒலியுறுப்புக்களாகும். இவ்வுறுப்புக்கள் எல்லாம் பேசுவதற்கென்றே ஏற்பட்ட

வை அல்ல: உண்பதற்கும், சுவாசிப்பதற்கும் அமைந்த உறுப்புக்கள். இவற்றைப் பேசுவதற்கும் பயன்படுத்திக்

ஒலியுறுப்புக்கள்




1. இதழ் (Lips)
2. பல் (Teeth)
3. நுனியண்ணம் (Alveolar ridge; Alveolum)
4. இடையண்ணம் (Dome)
5. கடையண்ணம் (Velum)
6. உள் நாக்கு (Uvula)
7. நா நுனி (Tip of the tongue)
8. நுனி நா (Blade of the tongue)
9. இடை நா (Centre; Front of the tongue)
10. கடை நா (Dorsum)
11. அடி நா (Root of the tongue)
12. மூக்கறை (Nasal cavity)
13. மூக்கறை வாயில் (Velic)
14. முன் தொண்டை (Pharynx)
15. காற்றுக் குழல் மூடி (Epiglottis)
16. ஒலித்தசை (Vocal cords)
17. காற்றுக் குழல் (Trachea)
18. குரல்வளை (Adamsapple)

கொள்கிறோம். பேசுவது இவற்றின் இரண்டாந்தரமான தொழிலேயாகும்.

## இதழ் (Lips)

இதனை உதடு எனவும் கூறலாம். மேலிதழும், கீழிதழும் ஒலியுறுப்புக்களாகப் பயன்படுகின்றன.

### பல்

மேற்பல் வரிசையும், கீழ்ப்பல் வரிசையும் பயன்படுகின்றன.

**அண்ணம்**

மேற்பல் வரிசையின் அடியிலிருந்து உள்நாக்கு வரையுள்ள கடினப்பகுதி அண்ணம். உள் நாக்கினை அடுத்திருக்கும் பகுதி மெதுவாக இருக்கும். மேற்பல் வரிசையை அடுத்திருக்கும் பகுதியை நுனியண்ணம் (**alveolar ridge, alveolum, alveolar region**) என்றும், அடுத்த பகுதியை இடையண்ணம் (**palate**) என்றும், அதற்கும் அடுத்த பகுதியைக் கடையண்ணம் (**velum**) என்றும் அண்ணத்தை மூன்றாகப் பிரிக்கலாம். ஒலியுறுப்புக்களில் மேல் தாடை அசையாது. கீழ்த்தாடையே அசையும்.

**நா (Tongue)**

ஒலியுறுப்புக்களில் வளையவும், நெளியவும், நீளவும், குறுகவும் ஆற்றலுடைய உறுப்பு இதுவேயாகும். நாவின் வெவ்வேறு பகுதிகள் வெவ்வேறு ஒலிகளை எழுப்பக் காரணமாய் அமைந்திருக்கின்றன. ஆகையால் நாவை, நாநுனி, நுனிநா, இடைநா, கடைநா, அடிநா எனப் பல பகுதிகளாகப் பிரித்துக் கூறுகிறோம். சிலர் நுனிநா, இடைநா, கடைநா என்று மூன்றே பிரிவுகளைக் கருதுவர்.

**உள்நாக்கு (Uvula)**

வாயின் அடிப்பாகத்தில் தொங்கும் தசைப்பகுதி இது. இதனை வாயில் உள்ள காற்றினால் அதிரச் செய்யலாம். முன் தொண்டையிலிருந்து காற்று மூக்கறையின் உள்ளே செல்லும் வாயிலை அடைக்கவோ, திறக்கவோ இது பயன்படுகிறது.

**முன்தொண்டை (Pharynx)**

இங்குத்தான் மூக்கறை வாயில் (**velic**), காற்றுக் குழல் (**trachea**), உணவுக் குழல் (**gullet**), வாய்ப்பாதை ஆகிய நான்கும் சந்திக்கின்றன.

**மூக்கறை (Nasal Cavity)**

மூக்கறை வாயிலிருந்து மேல்நோக்கிச் சென்று கீழே இறங்கி மூக்கில் முடிகிறது. காற்று இதன் வழியாக வந்து போகலாம்.

**காற்றுக் குழல் (Trachea)**

காற்றுக் குழல் வழியாகக் காற்று நுரையீரலுக்குச் சென்று வரும். இக்குழலின் மேற்பகுதி குரல்வளை (larynx). கீழ்ப்பகுதி இரண்டாகப் பிரிந்து இரண்டு பகுதிக்கும் செல்கிறது.

**காற்றுக்குழல் மூடி (Epiglottis)**

காற்றுக் குழலின் தொடக்கத்தில் இருப்பது இது. உணவுண்ணும் பொழுதும், தண்ணீர் குடிக்கும்பொழுதும், உணவோ, தண்ணீரோ மூச்சுக் குழலின் உள்ளே செல்லாதவாறு அதன் வாயை அடைத்துக் கொள்கிறது. தவறி இவை செல்லுமாயின் இம்மூடி அவ்வுணவை மேலே தூக்கி எறிந்து விடுகிறது. இவ்வாறு எறியப்பட்டவை மூக்கின் வழியாக வெளியே வருகின்றன. இதைத்தான் புரை ஏறுதல என்கிறோம். சுவாசிக்கும்பொழுது இது திறந்திருக்கும். இதனுல் காற்று, தங்கு தடையினறிச் சென்று வரலாம்.

**குரல்வளை (Larynx)**

காற்றுக் குழலின் மேற்பகுதி. இதில்தான் ஒலித் தசைகள் (vocal cords) இருக்கின்றன.

**ஒலித்தசைகள் (Vocal Cords)**

மெல்லிய கனமான இரண்டு தசைப் பகுதிகள். காட்ஸ் (cords) என்பதால் கயிறு போன்றவை என்று கருதுதல் வேண்டாம். இந்த இரண்டு தசைப்பகுதிகளுக்கும்

இடைப்பட்ட இடைவெளி, ஒலித்தசை வாயில் (glottis) எனப்படும். ஒலித்தசைகள் அகன்றிருக்கும் பொழுது இவ்வாயில் வழியாகக் காற்று தங்கு தடையின்றிச் சென்று வரும். அப்பொழுது ஒலித்தசைகளும் எத்தகைய அதிர்வும் இன்றி இருக்கும். இப்படிப் பிறக்கும் ஒலிக்கு ஒலிப்பிலா ஒலி (voiceless sounds) என்று பெயர். இவ்வாயில் குறுகி இருந்து, அதன் வழியாகக் காற்றைச் செலுத்தி, அக்காற்றால் அவ்வொலித் தசைகளை அதிரச் செய்து அவ் வதிர்ச்சியுடன் பிறக்கும் ஒலி ஒலிப்புடை ஒலி (voiced sounds).

## நுரையீரல் (Lungs)

நுரையீரல்கள், உதரவிதானம் (diaphram), விலா வெலும்பிலுள்ள தசை நார்கள் இவற்றின் செயலால் விரியவும், சுருங்கவும் செய்கின்றன. விரியும்பொழுது இவற்றின் உள்ளே சென்ற காற்று, அவை சுருங்கும் பொழுது வெளியே வருகிறது. ஒரு உள் மூச்சும் ஒரு வெளி மூச்சும் சேர்ந்தது ஒரு தடவை சுவாசித்தல். இது ஒரு ஒழுங்கான இடையீட்டோடு நிகழுகிறது. இதைத்தான் நாடித்துடிப்பு என்கிறோம். பேச்சில் ஒவ்வொரு நாடித் துடிப்பும் ஒவ்வொரு அசையாக வெளி வருகிறது.

## ஒலிப்பாகுபாடுகள்

ஒலிகளை ஒலிப்பிடத்தாலும் (position of articulation), ஒலிப்பு முறையாலும் (manner of articulation) விளக்கிக் கூறலாம். ஒலிப்பிடத்தை ஒலிப்பான் (articulator), ஒலிப்பு முனை (points of articulation) என இரண்டாகப் பிரிக்கலாம். இவற்றில் நெளிந்து வளைந்து

செயற்படும் ஆற்றலுடைய இதழ், நா இவற்றின் பல்வேறு பகுதிகள் ஒலிப்பான். இவற்றின் செயலால் காற்றின் போக்குப் பலவாறு திரிபடையும். ஒலிப்பான் சென்று பொருந்தும் மேற்பாக ஒலியுறுப்பின் ஒவ்வோர் இடமும் ஓர் ஒலிப்பு முனை. ஒலிப்பானும் ஒலிப்பு முனையும் இணையும் நிலையையே ஒலிப்பிடம் என்கிறோம். அடைத்தல், உரசுதல் இவை ஒலிப்பு முறை.

**உயிரும் மெய்யும்**

ஒலிப்பு முறையை அடிப்படையாகக் கொண்டு பேச் சொலிகளை உயிர் எனவும், மெய் எனவும் இரண்டாகப் பிரிக்கலாம். சுவாசப் பையிலிருந்து வெளிவரும் காற்று மற்ற ஒலியுறுப்புக்களால் எத்தகைய தடையும் எய்தாது வெளிவரும்பொழுது உயிரொலிகள் எழுகின்றன. அப்பொழுது ஒலியுறுப்புக்கள் காற்றை அடைக்கவோ, அதிர்ச்சியடையவோ செய்யா. மாறாக, இவ்வாறு வெளி வரும் காற்று மற்ற ஒலியுறுப்புக்களால் அடைபடுதல், உரசுதல் முதலிய வேறுபாடுகள் எய்துமாயின் அப்பொழுது பிறக்கின்ற ஒலிகள் மெய்யொலிகள்.

**மெய்**

**ஒலிப்பு முனை**

மேலிதழ், பல், நுனியண்ணம், இடையண்ணம், கடையண்ணம், உள்நாக்கு, குரல்வளை, முன்குரல்வளை இவை ஒலிப்பு முனைகள்.

**ஒலிப்பான்**

கீழிதழ், நா நுனி, நுனிநா, இடைநா, கடைநா, அடிநா இவை ஒலிப்பான்.

# மெய்யொலிகள்

| ஒலிப்பிடம் | | இதழொலி | | | நுனிநாவொலி | | | இடைநா இடையண்ணவொலி | | | கடைநா கடையண்ணவொலி | | | குரல்வளையொலி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஒலிப்பு முறை ↓ | | இதழ் நீட்டு | சரிதழ் | பல்லிதழ் | பல் | நுனி அண்ணம் | நாவளை | முன் இடை யண்ணம் | இடை யண்ணம் | பின் இடை யண்ணம் | முன் கடையண்ணம் | கடை யண்ணம் | பின் கடையண்ணம் | முன் குரல்வளை | குரல்வளை | பின் குரல்வளை |
| அடைப்பொலி | | p̑ b̑ | p b | p̣ ḅ | t̑ d̑ | t d | ṭ ḍ | | | | k̑ g̑ | k g | ḳ g̣ | ʔ̱ | ʔ | ʔ̣ |
| அடைப்புரசொலி | | | | | | | | č̑ ʃ̑ | č ʃ | č̣ ʃ̣ | | | | | | |
| உரசொலி | பிளந் துரசொலி | | | f v | θ ð | | | | | | x̑ ɣ̑ | x ɣ | ẋ ɣ̣ | | h ɦ | |
| | குழிந் துரசொலி | | | | | s z | ṣ ẓ | ś̑ ž̑ | ś ž | ṣ́ ẓ̌ | | | | | | |
| | மருங் குரசொலி | | | | ɬ̑ ɮ̑ | ɬ ɮ | ɬ̣ ɮ̣ | | | | | | | | | |
| மூக்கொலி | | M̑ m̑ | M m | Ṃ ṃ | N̑ n̑ | N n | Ṇ ṇ | Ñ̑ ñ̑ | Ñ ñ | Ṇ̃ ṇ̃ | Ŋ̑ ŋ̑ | Ŋ ŋ | Ŋ̣ ŋ̣ | | | |
| மருங்கொலி | | | ʟ l | | L̑ l̑ | L l | Ḷ ḷ | | | | | | | | | |
| ஆடொலி | | | ʀ | | ɾ̑ | ɾ | ɾ̣ | | | | | ʀ | | | | |
| வருடொலி | | | | | | ɽ | ɽ̣ | | | | | | | | | |

## ஒலிப்பு முறை

### அடைப்பொலி

ஒலிப்பானையும் ஒலிப்பிடத்தையும் இணைத்து எங்கேயாவது ஓரிடத்தில் காற்றை வெளிவராமல் தடுத்து நிறுத்துகிறோம். மூக்கறை வாயிலையும் அடைத்துக் கொள்கிறோம். பின்பு திடீரென வாய் அடைப்பைத் திறக்கும்பொழுது இவ்வொலியைக் கேட்கிறோம். ஈரிதழ் அடைப்பொலி, நுனிநா பல் அடைப்பொலி, நுனிநா நுனியண்ண அடைப்பொலி, நாவளை அடைப்பொலி, இடைநா இடையண்ண அடைப்பொலி, கடைநா கடையண்ண அடைப்பொலி, குரல்வளை அடைப்பொலி, முன்குரல்வளை அடைப்பொலி. ஆகிய இவை முக்கியமான அடைப்பொலிகளாம்.

அடைப்பொலிகளில் ஈடுபடும் காற்றறையை இரண்டிடங்களில் அடைத்து அதனை அமுக்கவோ (compress), நெகிழ்த்தவோ (rarefaction) செய்யலாம். இரண்டடைப்புக்களில் வெளியடைப்பு எப்பொழுதும் குரல்வளைக்கு மேலேயே இருக்கும். உள் அடைப்பு உள்நாக்கிடத்திலேயோ, குரல்வளையிலேயோ, நுரையீரலிலோ இருக்கலாம். இவ்வாறு அடைபட்டுக் காற்றை அமுக்கி எழுப்பும் அடைப்பொலிகளை அமுக்க அடைப்பான் (pressure stops) எனவும், உள் அடைப்பு நுரையீரலின் அடியில் இருக்குமாயின் பல்மானிக்கு அமுக்க அடைப்பொலி என்றும், குரல்வளையில் இருக்குமாயின் குரல்வளை அமுக்க அடைப்பொலி என்றும், கடையண்ணத்தில் இருக்குமாயின் கடையண்ண அமுக்க அடைப்பொலி என்றும் கூறுவர். இவ்வாறே காற்றின் அமுக்கக் குறைவால் (rarefaction) தோன்றும் அடைப்பொலிகளை உறிஞ்சடைப் பொலிகள் (implosive, suction stops) என்று கூறுகிறோம்.

**உரசொலிகள் (Fricatives)**

காற்றை ஒரு குறுகிய இடையீட்டின் வழியாகச் செலுத்தி அவ்விடத்தில் அக்காற்றை அதிரச் செய்யும் பொழுது உரசொலிகள் பிறக்கின்றன.

காற்று செல்லும் இவ்வாயில் ஆழமில்லாமல் வெடிப்பு போன்று இருக்குமாயின் அங்குப் பிறக்கின்ற உர சொலிகளை வெடிப்புரசொலி (slit fricatives) என்றும், குழிந்திருக்கும் இடையீட்டின் வழியே காற்றுச் செல்லப் பிறக்கும் உரசொலிகளைக் குழிந்துரசுவான் (groove fricatives) என்றும், காற்றைப் பக்கவாட்டில் செலுத்தி அதிரச் செய்யும்பொழுது பிறக்கும் உரசொலி மருங்குர சொலி (lateral fricatives) என்றும் பெயர் பெறும்.

தட்டையுரசொலி (surface fricative) என்று ஒரு வகையை ஹாக்கட் கூறுகிறார். இங்குக் காற்றுத் தட்டையாக விருக்கும் ஆழமான வெடிப்பு போன்ற இடையீட்டின் வழியே செல்லும்பொழுது அதிருகிறது.

அடைப்பொலிகளும் உரசொலிகளும் தடையொலிகள் (obstruents), காற்றுப் பலவாருகத் தடுக்கப்படுவதால். மற்ற ஒலிகள் எல்லாம் தொடரொலிகள் (continuants).

**மூக்கொலி (Nasals)**

அடைப்பொலிக்குக் கூறிய, இதழ் தொடங்கி அடிநா வரையுள்ள அடைப்புக்களோடு, மூக்கறை வாயிலைத் திறந்து காற்றை மூக்கறையின் வழியே வெளியிடும் பொழுது மூக்கொலிகள் பிறக்கின்றன.

**மருங்கொலிகள் (Laterals)**

வாய் வெளியில் நடுவிடத்தை அடைத்துக்கொண்டு காற்றை இருமருங்கோ ஒருமருங்கோ செலுத்தி எழுப்பும் ஒலி மருங்கொலி.

மருங்கொலிகளில் இருண்ட (dark) மருங்கொலி, தெளிந்த (clear) மருங்கொலி என இரண்டு இருக்கின்றன. இருண்ட மருங்கொலியில் நாவின் நுனியைக் கொண்டு வாயின் நடுவிடத்தை அடைத்துக்கொண்டு, இடை நாவையும் கடை நாவையும் தாழ்த்தி வைத்துக் கொள்கிறோம். தெளிந்த மருங்கொலியில் இவற்றை உயர்த்தி வைத்துக் கொள்கிறோம்.

**ஆடொலி (Trills)**

நெகிழ்ந்த ஒலியுறுப்புக்களைக் காற்றில் வேகமாக அதிரச் செய்வதால் எழும் ஒலி.

**வருடொலி (Flaps)**

ஒலிப்பு முறை ஆடொலியைப் போன்றதே. ஆனால் இங்கு ஓரே ஒரு அடிதான் இருக்கும். ஆடொலியைப் போன்று அதிர்ச்சி தொடர்ந்து இராது.

**நாவளையொலி (Retroflex)**

நா நுனியை அண்ணத்தை நோக்கி வளைத்து எழுப்பும் ஒலிகள் நாவளை ஒலிகள்.

உயிர், ஆடொலி, வருடொலி இவைகளை எல்லாம் பொதுவாக நீரியொலிகள் (liquids) என்பர். மூக்கொலியையும் இவற்றுடன் சேர்த்து சோணர ஒலிகள் (sonorous) என்பர்.

**அடைப்பொலிகளின் விடுதி (Release of Stops)**

அடைப்பொலிகளில் அடைபட்டிருக்கும் இடங்களைத் திறக்கும் முறையில் இவ்வொலிகள் வேறுபாடெய்தும். ஒலிப்பானை ஒலிப்பு முனையிலிருந்து எடுக்கும் முறையே விடுதி.

**1. திடீரென விடுதல் (Sharp Release)**

ஒலிப்பானைத் திடீரென்று வேகமாக நீக்கிக் காற்றை வெளியிடுகிறோம்.

**2. மூச்சொடு விடுதல் (Aspirated Release)**

பல்மானிக்கு அமுக்கத்தில் அமுக்கத்தை அதிகமாக்கிக் காற்று குபீரென்று வெளிக்கிளம்பும்படி விடுதல். இதனை மூச்சுடை அடைப்பொலி என்போம் (aspirated stops)

**3. உரசொடு விடுதல் (Affricated Release)**

ஒலிப்பானை மெதுவாக நீக்கி அதே இடத்தில் சிறிய இடைவெளியின் மூலம் காற்றைச் செலுத்தி அதிரச் செய்து விடுகிறோம். இதனை அடைப்புரசொலி என்போம்.

**4. மூக்கொடு விடுதல் (Nasal Release)**

வெளியே உள்ள அடைப்பைத் திறப்பதற்கு முன்பு, உள்நாக்கைத் திறந்து காற்றை மூக்கறையின் உள்ளே திடீரெனச் செலுத்தி வெளியிடுதல்.

**இணையொலிகள் (Co-articulation)**

ஒவ்வொரு ஒலியையும் எழுப்பும்பொழுது ஒலியுறுப் புக்களில் சிலவே செயற்படுகின்றன. மற்றைய வாளா இருக்கும். இவ்வாறு இருக்கும் உறுப்புக்கள் அவற்றின் செயலால் வெளிவரும் ஒலியின் தன்மையை மாற்றலாம். இவ்வாறு எழும் ஒலிகள் இணை ஒலிகள் எனப்படும். ஆறு வகையான இணை ஒலிகளைக் காணலாம்.

**1. இதழின் சாயல் (Labialization)**

இதழால் எழும் ஒலியைத் தவிர வேறு எந்த ஒலியும் இதழின் சாயலைப் பெற்றியங்கலாம்.

**2. நாவளைச் சாயல் (Retroflection)**

நாவளை ஒலியைத் தவிர வேறு எந்த ஒலியும் நாவளைச் சாயலைப் பெறலாம்.

**3. கடையண்ணச் சாயல் (Velarization)**

கடையண்ண ஒலியைத் தவிர வேறு எந்த ஒலியும் கடையண்ணச் சாயல் பெற்று இயங்கலாம்.

**4. முன் தொண்டைச் சாயல் (Pharyngalisation)**

முன்தொண்டையில் எழாத எந்த ஒலியும் முன் தொண்டைச் சாயல் பெற்றுத் தோன்றலாம். இங்கு முன் தொண்டையை இடுக்கிக் கொள்கிறோம்.

**5. அண்ணச் சாயல் (Palatalization)**

இடையண்ண ஒலியைத் தவிர வேறு எந்த ஒலியும் அண்ணச் சாயல் பெற்றியங்கலாம். இங்கு இடை நாவை இடையண்ணத்தை நோக்கி உயர்த்தி வைத்துக் கொள்கிறோம்.

**6. குரல்வளைச் சாயல் (Laryngalization)**

குரல்வளையில் எழும் ஒலியல்லா எந்த ஒலியும் குரல் வளைச் சாயல் பெற்று எழலாம். இங்குக் குரல்வளையை இடுக்கி வைத்துக் கொள்கிறோம்.

## உயிர்

உயிரொலிகளைச் (1) செயற்படும் நாவின் பகுதி, (2) இப்பகுதி அண்ணத்தை நோக்கி எழும் உயரத்தின் அளவு, (3) இதழின் அமைப்பு — ஆகிய இந்த மூன்றின் அடிப்படையில் விளக்குகிறோம்.

இங்கு நமது தேவைக்கு நாவை மூன்றாகப் பிரித்துக் கொள்வோம். (1) நுனிநா (2) இடைநா (3) கடை நா என்பன அவை.

## 1. நாவின் பகுதி

### முன் உயிர்

நுனிநா, நுனியண்ணத்தை நோக்கி எழும்பொழுது பிறக்கும் உயிர்கள் முன் உயிர்கள். நா எழும் உயரத்திற்குத் தக்கவாறு முன்னுயிர்களைப் பலவாருகப் பிரிக்கலாம்.

### நடு உயிர்

இடைநா, இடையண்ணத்தை நோக்கி எழும்பொழுது பிறக்கும் உயிர்கள் நடு உயிர்கள்.

### பின் உயிர்

கடைநா கடையண்ணத்தை நோக்கி எழும்பொழுது பிறக்கும் உயிர்கள் பின் உயிர்கள்.

## 2. நா எழும் உயரம்

நா அண்ணத்தை நோக்கி எழும் உயரத்திற்குத் தக்கவாறு உயிர்களை வகை செய்யலாம். நா எவ்வளவு தூரம் மேலே அண்ணத்தை நோக்கி எழுந்து நின்று உயிர் ஒலிகளை எழுப்ப முடியுமோ அவ்வளவு உயரத்தில் நா நிற்க எழும் உயிரொலிகளை மேலுயிர்கள் எனவும், நா எவ்வளவு தூரம் தாழ்ந்திருக்க முடியுமோ அவ்வளவு தாழ்ந்து கிடக்க எழும் உயிர்களைக் கீழுயிர்கள் எனவும், இடைப்பட்ட உயரங்களில் நிற்க எழும் உயிர்களை இடை உயிர்கள் எனவும் கூறுவர். மேலுயிர்களை மேல், கீழ்மேல் என இரண்டாகவும், இடையுயிர்களை மேலிடை, நடுவிடை, கீழிடை என மூன்ருகவும், கீழுயிர்களை மேல்கீழ், கீழ் என இரண்டாகவும் பிரித்து நா எழும் உயரத்தால் உயிர்களை ஏழாகப் பிரிப்பர். இது அமெரிக்கர் முறை. இதனைக் கீழே படத்தில் காண்க.

## உயிரொலிகள்

| | முன் | | நடு | | பின் | |
|---|---|---|---|---|---|---|
| | இதழ் விரி | இதழ் குவி | இதழ் விரி | இதழ் குவி | இதழ் விரி | இதழ் குவி |
| மேல் | i | ü=y | ɨ | u̇ | ï=ɯ | u |
| கீழ்மேல் | ɪ | ʊ̈ | ɪ̵ | ʊ̇ | ɪ̈ | ʊ |
| மேலிடை | e | ö | ė | ȯ | ë=ɤ | o |
| நடுவிடை | E | Ω̈ | Ė=ə | Ω̇ | Ë | Ω |
| கீழிடை | ɛ | ɔ̈ | ɛ̇ | ɔ̇ | ɛ̈=ʌ | ɔ |
| மேல்கீழ் | æ | ω̈ | æ̇ | ω̇ | æ̈ | ω |
| கீழ் | a | ɒ̈ | ȧ | ɒ̇ | ä=ɒ | ɒ=[illegible] |

டேனியல் ஜோன்ஸ் உயரம் நோக்கி உயிர்களை அடைப்புயிர் (close vowels), அரையடைப்புயிர் (half close vowels), அரை திறப்புயிர் (half open vowels), திறப்புயிர் (open vowels) எனப் பிரிக்கின்றார். அடைப்புயிர்தான் மேலுயர். நாவிற்கும் அண்ணத்திற்கும் இடைப்பட்ட வெளி மிகவும் குறைவாக இருப்பதால் அடைப்புயிர் எனப்பட்டது. கீழுயிர்தான் திறப்புயிர். நாவிற்கும் அண்ணத்திற்கும் இடைப்பட்ட வெளி அதிகமாக இருப்பதால் திறப்புயிர் எனப்பட்டது. இடைப்பட்ட உயிர்களை மேலிருந்து கீழாக அரையடைப்புயிர், அரை திறப்புயிர் என்கிறார். இவர் உயிர் ஒலிகளைக் கீழே காட்டியவாறு நாற்கோணங்களால் விளக்கிக் காட்டுவார். இந்த முறையையே உலக ஒலியியல் கழகமும் (International Phonetic Association, — I PA) பின்பற்றுகிறது.




படம் 1




படம் 2




படம் 3




படம் 4

## 3. இதழ் (Lips)

இதழின் செயலால் இதழ்குவியுயிர், இதழ்விரியுயிர் என இரண்டாக உயிர்களைப் பகுக்கிறோம். உ, ஒ போன்ற உயிர்கள் இதழ்குவியுயிர். இவற்றை உச்சரிக்கும்பொழுது இதழ் குவிந்திருத்தலைக் காண்க. இ, எ இவை போன்ற உயிர்கள் இதழ் விரியுயிர். இவற்றை உச்சரிக்கும்பொழுது இதழ் விரிந்திருத்தலைக் காண்க.

பெரும்பாலும் உயிரொலிகள் ஒலிப்புடையனவாகவே இருக்கின்றன. ஆனால் **ஒலிப்பிலா உயிர் ஒலிகளும்** இருக்கின்றன. தசையை விறைப்பாக வைத்துக்கொண்டு ஒலிக்கும் உயிர்கள் **விறைப்புயிர்கள் (tense vowels).** தசையை நெகிழ்வாக வைத்துக்கொண்டு ஒலிக்கும் உயிர்கள் **நெகிழ்வுயிர்கள் (lax vowels).** மூக்கின் வழியாகக் காற்று வர எழும் உயிர்கள் **மூக்குயிர்கள்.** நா வளைவோடு எழும் உயிர்கள் **நாவளையுயிர்கள்.**

### முணுமுணுப்பொலி (Murmured Sounds)

ஒலித்தசைகளின் இடைவெளி அடைத்தும் அடைக்காமலும் இருக்க, நெகிழ்ந்திருக்கும் ஒலித்தசைகளின் ஓரங்களை வேகமாக அதிரச்செய்யும்பொழுது ஒலிப்பொலி எழுகிறது. ஒலித்தசைகள் வெடிப்பு போன்று கொஞ்சம் அகலமாக இடம் விட்டு அகன்றிருக்க, அதன் வழியாக வெளிவரும் காற்று இலேசாக ஒலித்தசைகளை அதிரச் செய்யும். பெரும் பகுதி காற்று இத்தகைய அதிர்ச்சியை உண்டுபண்ணாமலே வெளியேறும். சில சமயங்களில் வெளிவரும் காற்றும் சிறிது அதிரும். இத்தகைய சிறிது ஒலிப்புடை, அல்லது சிறிது ஒலிப்பும் உரசும் உடைய ஒலியே முணுமுணுப்பொலி.

## இரகசிய ஒலி (Whisper)

ஒலிப்பொலிக்கு வைத்துக் கொள்வதைப்போல் ஒலித் தசைகளைச் சிறிய இடையீட்டுடன் விறைப்பாக வைத்துக் கொள்கிறோம். இதனால் காற்றுச் செல்லும்பொழுது ஒலித் தசைகளில் அதிர்ச்சி ஏற்படுவதில்லை. இதுவே இரகசிய ஒலி. சில சமயம் காற்று ஒலிப்பிலாது அதிரும். சில சமயம் ஒலித்தசைகளை விறைப்பாக வைத்துக்கொண்டு, அவற்றின் பின்புள்ள ஆர்டினுயிட் கார்டி லீசுகளை அகல விரித்துக் காற்றைச் செலுத்துகிறோம்.

ஒலிப்புடை ஒலிகள், இரகசிய ஒலியில் ஒலிப்பிலா ஒலிகளாக மாறுகின்றன. ஒலிப்பிலா ஒலிகள் அப்படியே இருக்கின்றன.

## ஒலித் தொடர் (Sequence of Phones)

தொடர்ந்து பேசும்பொழுது, பேச்சில் சில ஒலிகள் வெளிப்படையாகவும் அதிக தூரமும் கேட்கும். இவ்வொலிகளைச் சோணர (sonorous) ஒலிகள் என்கிறோம். பெரும்பாலும் உயிரெழுத்துக்கள் சோணர ஒலிகளாக இருக்கின்றன. ஒன்றை நோக்க ஒன்று சோணர ஒலி என்று கூறமுடியுமே ஒழிய அதற்கெனத் தனியாக ஒரு அளவு கூறமுடியாது. மெய்யெழுத்துக்களை நோக்க உயிரெழுத்துக்கள் சோணர ஒலிகள். ஒலிப்புடை உயிர்கள் ஒலிப்பிலா உயிர்களைவிடச் சோணர ஒலிகள். குற்றுயிர்களை விட நெட்டுயிர்கள் சோணர ஒலிகள். இது பெரும்பாலும் கேட்போரின் தன்மையைப் பொறுத்தது. எனினும் அசையை (syllable) அறுதி இடுவதற்கு இது மிகவும் முக்கியம்.

**அசை (Syllable)**

ஒன்றோ பலவோ ஒலிகள் தொடராக ஒரு நாடித் துடிப்பில் வெளிவருவது ஒரு அசை. ஒவ்வொரு அசையும் ஒவ்வொரு ஒலியைச் சோணர ஒலியாகப் பெற்றிருக்கும். இது பெரும்பாலும் உயிராகவே இருக்கும். இவ்வொலியை அசை முடி (peak) என்போம்.

**அசையொலி (Syllabic Sound)**

அசையின் சிகரமாக வரும் ஒலி.

**திறந்த அசை (Open Syllable)**

அசையொலியில் முடியும் அசை.

**அடைத்த அசை (Closed Syllable)**

அசையொலியல்லாத மற்ற ஒலிகளில் முடியும் அசை. இந்த ஒலியை அசையீறு (coda) என்றும் கூறுவர்.

**அசைமுதல் (Onset)**

அசையின் முதலில் வரும் அசையொலியல்லாத மற்ற ஒலிகள்.

**ஈருயிர்த் தொடர் (Diphthong)**

இரண்டு உயிர்கள் அடுத்தடுத்து வரும்பொழுது, சில சமயம் ஒன்று அசையொலியாகவும் மற்றொன்று அசையொலி அல்லா ஒலியாகவும் வரும்பொழுது இத்தொடரை ஈருயிர்த்தொடர் என்கிறோம். இரண்டாவது உயிர் அசையொலியாக வரும்பொழுது அதனை **ஏறும் ஈருயிர்த்தொடர்** (rising diphthong) எனவும், முதல் உயிர் அசையொலியாக வரும்பொழுது இத்தொடரை **இறங்கும் ஈருயிர்த் தொடர்** (falling diphthong) எனவும் கூறலாம்.

இரண்டு உயிரும் அசையொலிகளாக வருமாயின் அது ஈருயிர் மயக்கத்தில் அடங்கும்.

**மேற்கூற்றியல்புகள் (Suprasegmental Features)**

பேசும்பொழுது உயிரும், மெய்யும் அடுத்தடுத்து வருவதோடு நின்றுவிடுவதில்லை. இவ்வொலி ஒவ்வொன்றும் வேறு சில தன்மைகளோடு கலந்து வருகின்றது. இவைகளையே மேற்கூற்றியல்புகள் என்கிறோம். ஒலியழுத்தம் (stress) சுரம் (pitch), சுரவிசை (intonation), அளவு (quantity) ஆகிய இவை மேற்கூற்றியல்புகள்.

**ஒலியழுத்தம் (Stress)**

பேசும்பொழுது தசை நார்கள் செயற்படுகின்றன. அப்பொழுது ஆற்றல் செலவாகிறது. பொதுவாக ஒலியழுத்தம் இவ்வாற்றலைப் பொறுத்தது எனலாம். பேச்சில் முன்னைய ஒலியையும் பின்னைய ஒலியையும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது ஒன்றின் ஒன்று சப்தம் (loudness) மிக்கதாக இருககக் காணலாம். இதனையே ஒலியழுத்தம் (stress) என்கிறோம்.

**சுரம் (Pitch)**

சுரத்தை அதன் பௌதிகத் தன்மையால் விளக்கலாம். ஒலியால் காற்றில் அதிர்ச்சி ஏற்படுகிறது. இவ்வதிர்ச்சியை அளந்து விநாடிக்கு இத்தனை அதிர்ச்சி (vibration) என்று கணக்கிடலாம். ஒரு சைகிள் என்பது ஒலியலை அதன் தோற்ற நிலையிலிருந்து மேலும் கீழும் சென்று திரும்பவும் பழைய இடத்திற்கு வருவதாகும். விநாடிக்கு இத்தனை சைகிள் அதிர்வு என்று இதனைக் கணக்கிட்டுக் கூறுவர். இந்த அதிர்ச்சியின் அளவைப் பொறுத்ததே சுரம். சுரம் மேலே செல்லச் செல்ல விநாடிக்குச் சைகிளின்

எண்ணிக்கை அதிகப்படும். இதனை அடிப்படையாகக் கொண்டே நமது இசையில் ஏழு சுரங்களும் அமைந்திருக்கின்றன.

**சுரவிசை (Intonation)**

தொடர்ந்த பேச்சில் ஏற்படுகின்ற வேறுபட்டு வரும் சுரத்தொடர்ச்சியே சுரவிசை ஒரு சொல்லினுள்ளே ஏற்படுகின்ற சுர வேறுபாடு குரல் (tone). ஒரு வாக்கியத்திலோ, சொற்றொடரிலோ ஏற்படுகின்ற சுரவேறுபாடு சுரவிசை.

**அளவு, மாத்திரை (Quantity)**

தமிழில் இதனை மாத்திரை என்போம். ஒலியைக் குறுககியும் நீட்டியும் ஒலிககலாம். நீளத்திற்குத் தக்கவாறு அடுத்துப் புள்ளி இட்டோ, அதே வரிவடிவைத் திருப்பி எழுதியோ மாத்திரையைக் காட்டுவர்.

## 2. ஒலியனியல்

பேசும்பொழுது எழுகின்ற ஒலிகள் பல. ஒரே சொல்லைப் பல தடவை ஒருவன் உச்சரிக்கும்பொழுதும் பலர் அதை உச்சரிக்கும்பொழுதும் ஒன்றுபோல் இருப்பதில்லை. இவ்வேறுபாடுகளை ஒலிக்கருவிகளும், ஒலியியல் பயிற்சி மிக்குடையாரும் எளிதில் கண்டுகொள்ள முடியும். ஆனால் ஒருவன் பேசுவதைப் புரிந்துகொள்வதற்கு இவ் வேறுபாடுகள் தேவையில்லை. இவ்வேறுபாடுகள் எல்லாம் சாதாரண மக்களுக்குப் புலப்படுவதும் இல்லை. இவ்வேறுபாடுகள் மொழியின் அமைப்பில் (structure) பங்கு கொள்வதில்லை. மொழியின் அமைப்பில் பங்குகொள்ளும் ஒலிக்கூறுகளே ஒலியன்கள். இவ்வொலியன்களில் காணப்

படும் வேறுபாடுகளே சொற்களைப் பிரித்தறிய உதவும். ஒரு மொழியில் காணப்படும் ஒலிகளை அம்மொழிக்குரிய ஒலியன்களாக வகை செய்யும் முறையே ஒலியனியல்.

**ஒலியன் (Phoneme)**

ஒரு மொழியின் ஒவ்வொரு ஒலியனும் அம்மொழியிலுள்ள மற்ற ஒலியன்களோடு வேற்றுநிலை வழக்கில் பின்னிக் கிடக்கும். ஒவ்வொரு ஒலியனும் ஒலியொற்றுமையுடைய ஒலிகளைத் தன்னகத்தே அடக்கி, அதைப்போன்ற மற்ற ஒலியன்களோடு வேற்றுநிலை வழக்கில் அம்மொழியில் வழங்கும்.

**மாற்றொலி (Allophone)**

ஒரு ஒலியனில் அகப்பட்ட ஒலிகளெல்லாம் அவ்வொலியனின் மாற்றொலிகள்.

**துணைநிலை வழக்கு (Complementary Distribution)**

இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட ஒலிகளோ ஒன்று வரும் சூழ்நிலையில் மற்றைய வராமல் இருக்குமானல், அவை துணைநிலை வழக்கில் வருகின்றன என்கிறோம்.

இவ்வாறு துணைநிலை வழக்கில் வரும் ஒலியொற்றுமையுடைய ஒலிகளை ஒரு ஒலியனுடைய மாற்றொலிகள் என்று கொள்கிறோம்.

**வேற்றுநிலை வழக்கு (Contrastive Distribution)**

இரண்டு ஒலிகள் ஒரே சூழ்நிலையில் வந்து பொருள் வேறு பயக்குமாயின் அவை வேற்றுநிலை வழக்கில் வருகின்றன என்கிறோம். இவற்றின் ஒலிவேற்றுமைக்கு முன்பின் வருகின்ற ஒலியன்கள் காரணம் என்று கூறமுடியாது.

**குறைஒலி இணை (Minimal Pairs)**

ஒரே ஒலியால் வேறுபட்டுப் பொருள் வேறு பயக்கும் இரு சொற்களைக் குறை ஒலி இணை என்கிறோம்.

**பன்மைத் துணை நிலை வழக்கு (Multiple Complementation)**

இரண்டு ஒலிகள் ஒரே சூழ்நிலையில் வேற்றுநிலை வழக்கில் வருகின்றன. இவற்றோடு ஒலியொற்றுமை யுடைய மற்றொரு ஒலி வேறொரு சூழ்நிலையில் வருகிறது. இவ்வொலி மேற்கூறிய இரண்டு ஒலிகளோடும் வேற்று நிலை வழக்கில் அமைகிறது. இதனையே பன்மைத் துணை நிலை வழக்கு என்கிறோம்.

**ஊசலாட்டம் (Free Variation)**

ஒரே சொல்லில், ஒரே சூழ்நிலையில் இரண்டு ஒலி களோ, ஒலியன்களோ, ஒருவன் அச்சொல்லைத் திரும்பத் திரும்பச் சொல்லும்பொழுது மாறி மாறி ஒலிக்குமாயின் அதனை ஊ ச லா ட் ட ம் என்கிறோம். மாற்றொலிகள் இவ்வாறு வருமாயின் மாற்றொலி ஊசலாட்டம் எனவும், ஒலியன்கள் இவ்வாறு வரின் ஒலியனூசலாட்டம் எனவும் கூறுகிறோம்.

## 3. உருபனியல் (Morphology)

ஒரு மொழியில் இருக்கின்ற உருபன்களையும், அவற்றின் வரன்முறையையும் விளக்கும் இயல்.

**உருபு (Morph)**

சொற்களைப் பொருள்தரும் ஒலியக் கூறுகளாகப் பகுத்து ஒவ்வொரு கூறும் ஒவ்வொரு உருபு என்கிறோம். பொருள் வேறு பயக்கும் இரண்டு ஒலியக் கூறு வெவ்வேறு

உருபு. ஒரே பொருளைத் தந்து ஒலியன்களால் வேறு படுமாயின் அவைகளும் வெவ்வேறு உருபுகளே.

## உருபன் (Morpheme)

பொருள்தரும் மிகச் சிறிய ஒலியக்கூறு. ஒவ்வொரு உருபனும் அம்மொழியில் உள்ள மற்ற உருபன்களோடு வேற்றுநிலை வழக்கில் அமைந்திருக்கும் இது ஒன்ரோ பலவோ உருபன்களால் ஆயது; மறித்து வரும் இயல் புடையது. அது ஒரு சொல்லாகவோ, அசையாகவோ அல்லது அசையில் ஒரு கூருகவோ இருக்கலாம். இரண்டு உருபன் ஒரே வடிவுடையதாகவும் இருக்கலாம். ஒரு சொல்லில் உருபன்கள் ஒரு குறிப்பிட்ட வரன்முறை யிலேயே வரும். ஒவ்வொரு உருபனிலும் ஒன்ரோ பலவோ உருபுகள் அடங்கி இருக்கும் இவைகளை மாற்றுருபுகள் என்கிரும்.

## மாற்றுருபு (Allomorph)

வேற்றுநிலை வழக்கில் வராது ஒரே பொருளைத் தந்து ஒரு உருபனில் அடங்கும் ஒன்ரோ பலவோ ஒலியக் கூறுகள்.

## வேர் (Root)

ஒரு சொல்லின் மூலக்கூறு (nucleus) இதுவே. ஒரு சொல்லில் ஒன்றற்கு மேற்பட்ட வேர்கள் இருக்கலாம்.

## அடி (Stem)

கட்டு வேர்கள் (bound roots) எல்லாம் அடியாக வரும். ஆனல் அடிகளெல்லாம் வேர்களாக இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. ஒரு அடியில் ஒன்ரோ பலவோ வேர்களால் ஆய மூலக்கூறு இருக்கலாம். அல்லது மூலக்கூறும் வேரல்லா உருபன்களும் இருக்கலாம்.

**கட்டு உருபன் (Bound Morphemes)**

*எடுத்துக்கூறும் இடங்களைத் தவிர, தனியாக வராத உருபன்கள் கட்டுருபன்கள். இவை எப்பொழுதும் வேறு உருபன்களோடு சேர்ந்தே வரும்.*

**தனி உருபன் (Free Morphemes)**

*தனியாக வரும் ஆற்றலுடைய உருபன்கள்.*

**கூட்டலுருபன் (Additive Morphemes)**

*வேர், முன்னொட்டு, பின்னொட்டு, உள்ளொட்டு, மேலொட்டு, அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி இவை கூட்டுருபனில் அடங்கும்.*

**பின்னொட்டு (Suffix)**

*வேரின் பின்வரும் கட்டுருபுகள்.*

**முன்னொட்டு (Prefix)**

*வேரின் முன்வரும் கட்டுருபுகள்.*

**உள்ளொட்டு (Infix)**

*வேரின் உள்ளே வரும் கட்டுருபுகள்.*

**மேலொட்டுகள் (Suprafixes)**

*மேற்கூற்றொலியன்களாலேயே ஆய உருபன்கள், வேருடனே, அடியுடனே வரும்.*

**அடுக்குத் தொடர் (Reduplication)**

*ஒரு வேர் அல்லது அடியின் ஒரு பகுதி இரட்டித்து உருபனை அமைதல்.*

**இரட்டைக்கிளவி (Repetitive Morpheme)**

*ஒரு அடியோ, வேரோ முழுவதும் இரட்டித்து உருபனாதல்.*

**விலக்குருபன் (Replacive Morpheme)**

*அடியுருபன்களின் ஒலியன்களில் சில நீங்க, அந்த இடத்தில் வரும் வேறு ஒலியன்கள் பொருள் தந்து நிற்றல்.*

**கழித்தல் உருபன் (Subtractive Morpheme)**

*அடி உருபன்களிலிருந்து ஒலியன்களைக் கழிப்பதே உருபனாக அமைதல்.*

**ஓரினமாதல் (Assimilation)**

*ஒலியன்கள் ஒன்றுபோலாகும் முறையை விளக்குவது.*

**வேற்றினமாதல் (Dissimilation)**

*ஒரு ஒலியன் அதே தன்மையிலிருந்து மாறி வருகின்ற நிலை.*

**அண்மை உறுப்பு (Immediate Constituents)**

*பொருள் தரும் முறையில் உறுப்புக்களை ஒன்றாக இணைத்தல்.*

# பிற்சேர்க்கை

## மொழியியல் கலைச் சொற்கள்

Acoustic phonetics ... பௌதிக ஒலியியல்
Adams apple ... குரல் வளை
Additive Morpheme ... கூட்டல் உருபன்
Adjective ... பெயரடை
Adverb ... வினையடை
Affix ... ஒட்டு
Affricate ... அடைப்புரசொலி
Analysis ... பகுப்பு, வகைசெய்தல்
Apicals ... நுனிநா ஒலிகள்
Apico-alveolar (alveolar) ... நுனிநா நுனியண்ண ஒலி (நுனியண்ண ஒலி)
Apico-dental ... நுனிநா பல்லொலி (பல்லொலி)
Apico-domal (retroflex) ... நுனிநா இடையண்ண ஒலி, நாவளை ஒலி, நாமடி ஒலி.
Apico-interdental (interdental) ... நுனிநா பல்லிடை ஒலி (பல்லிடை ஒலி)
Allomorph ... மாற்றுருபு
Allophone ... மாற்றொலி
Alveolar region ... நுனியண்ணம்
Archi phoneme ... ஆர்க்கி ஒலியன்
Articulator ... ஒலிப்பான்
Articulatory phonotics ... உச்சரிப்பொலியியல்
Aspirates ... மூச்சொலி
Assimilation ... ஓரினமாதல்
Atoms ... அணு

Auditory phonetics ... கேட்பொலியியல்
Automatic ... இயல்பான
Back ... பின்
Back-vowels ... பின்னுயிர்கள்
Bilabials ... ஈரிதழ் ஒலி
Blade of the tongue ... முன்நா, நாவிளிம்பு
Bound-form ... கட்டுவடிவம்
Bound-morph ... சார்புருபு, கட்டுருபு
Cardinal vowels ... அடிப்படை உயிர்கள்
Centre (central) ... நடு
Central vowels ... நடுவுயிர்கள்
Centre of the tongue ... நடுநா
Close vowels ... அடையுயிர், மூடுயிர்
Co-articulation ... இணை ஒலிப்பு
Coda ... அசையீறு
Complex form ... சிக்கல் வடிவு
Complementary distribution ... துணைநிலை வழக்கு
Component ... 'கூறு'
Component, phonetic ... ஒலிக்கூறு
Componential analysis ... கூறுகளை வகைசெய்தல்
Compound form ... கட்டுவடிவு
Concord ... இயைபு
Constituent ... உறுப்பு
Constitute ... உறுப்பி
Continuent ... தொடரொலி
Cluster ... மயக்கம், இணைப்பு
Defective form ... குறைவடிவு
Derivative nouns ... ஆக்கப் பெயர்கள்

Derivatives ... ஆக்கங்கள்
Derivative suffixes ... ஆக்கப்பின்னொட்டுகள்
Diacritics ... குறையீடுகள்
Dissimilation ... வேற்றினமாதல்
Distribution ... வரன்முறை
Dome (hard palate) ... இடையண்ணம்
Dorso-velar (dorsal velar) ... கடைநா கடையண்ண ஒலி
Dorsum ... கடைநா
Epiglottis ... மூச்சுக்குழல் மூடி
Flap ... வருடொலி
Frame ... சட்டம்
Free form ... தனி வடிவு
Free variation ... ஊசலாட்டம்
Fricative ... உரசொலி
Front ... முன்
Front vowels ... முன்னுயிர்கள்
Front rounded high vowel ... முன் இதழ் குவி மேலுயிர்
Glide ... உடம்படுமெய்
Half close vowel ... அரையடையுயிர்
Half open vowel ... அரை திறப்புயிர்
High ... மேல்
Higher-mid ... மேலிடை
Higher-low ... மேல்கீழ்
High vowel ... மேலுயிர்
Historical Linguistics ... வரலாற்று மொழியியல்
Hypothesis ... எடுகோள்
Immediate constituents ... அண்மை உறுப்பு

Implosive ... உறிஞ்சடைப்பொலி,
உறிஞ்சொலி
Infix ... உள்ளொட்டு
Interlude ... அசையிடை
Intonation ... குரலிசை, சுரவிசை
Labial ... இதழொலி
Labio-dental ... இதழ்பல்லொலி
Labio-alveolar ... இதழ் நுனியண்ணவொலி
Larynx ... குரல்வளை
Lateral ... மருங்கொலி
Lax ... நெகிழ்வு
Lax-vowels ... நெகிழ்வுயிர்
Level ... நிலை
Level, grammatical ... இலக்கணவியல் நிலை
Level, morphemic ... உருபனியல் நிலை
Level, phonemic ... ஒலியனியல் நிலை
Level, phonetic ... ஒலியியல் நிலை
Level, semantic ... பொருளியல் நிலை
Linguist ... மொழியியல் வல்லுநர்
Linguistics ... மொழியியல்
Lips ... உதடு, இதழ்
Low ... கீழ்
Lower-high ... கீழ்மேல்
Lower-mid ... கீழ்இடை
Lungs ... நுரையீரல்
Macrosegment ... பெரும்பகுதி
Manner of articulation ... ஒலிப்பு முறை
Mean-mid ... நடுவிடை
Mid ... இடை
Microsegment ... நுண்பகுதி
Minimal pairs ... குறைஒலி இணை

Molecule ... மூலக்கூறு
Morph ... உருபு
Morpheme ... உருபன்
Morphemically conditioned ... உருபால் கட்டுணல், உருபுக்கட்டு.
Morphophoneme ... உருபொலியன்
Morphophonemics ... உருபொலியனியல்
Multiple complementation ... பன்மைத் துணைநிலை வழக்கு
Nasal ... மூக்கொலி
Nasal cavity ... மூக்கறை
Nasal phoneme ... மூக்கன், மூக்கொலியன்
Neatness of pattern ... அமைப்பழகு
Neutralization ... சமன் செய்தல்
Non-automatic ... இயல்பல்லா
Non-contrastive ... வேற்றுநிலையற்ற
Onset ... அசைமுதல்
Open vowel ... திறப்புயிர்
Oral Cavity ... வாய்வெளி
Oscillation ... அலைவு
Palatal ... இடையண்ண ஒலி
Pattern ... அமைப்பு
Pitch ... சுரம்
Points of articulation ... ஒலிப்பு முனை
Position of articulation ... ஒலிப்பிடம்
Prefix ... முன்னொட்டு
Principle of complementation ... துணைநிலைக் கொள்கை
Principle of contrast ... வேற்றுநிலைக் கொள்கை
Principle of economy ... சிக்கனக் கொள்கை

Pharynx ... முன் தொண்டை
Philology ... மொழிநூல்
Phone ... ஒலி
Phoneme ... ஒலியன்
Phonemics ... ஒலியனியல்
Phonemicization ... ஒலியன்களை வகைசெய்தல்
Phonetics ... ஒலியியல்
Phonetic similarity ... ஒலியொற்றுமை
Phonologically conditioned ... ஒலியால் கட்டுணல், ஒலிக்கட்டு
Semantics ... சொற்பொருளியல்
Peak ... அசைமுடி
Plosives ... வெடிப்பொலிகள்
Protruded labial ... இதழ்பிதுக்கொலி
Reduplication ... அடுக்குத்தொடர்ச்சி
Release ... விடுநிலை
Replacive Morpheme ... விலக்குருபன்
Retroflex ... நாவளைவொலி, நாமடிவொலி
Repetitive Morpheme ... இரட்டைக்கிளவி உருபன்
Rolled ... உருளொலி
Root ... வேர்
Root of the tongue ... அடிநா
Rounded vowel ... இதழ்குவியுயிர்
Significant sound ... பொருளுடை ஒலி
Slit fricative ... பிளந்துரசொலி
Spectrum ... நிறமாலை
Sound spectrum ... ஒலிநிறமாலை
Stem ... அடிச்சொல், அடி
Stops ... அடைப்பொலிகள்
Stop phoneme ... அடைப்பான், அடைப்பொலியன்

Stress ... ஒலியழுத்தம், அழுத்தம்
Subtractive Morpheme ... கழித்தல் உருபன்
Suffix ... பின்னொட்டு
Syllable ... அசை
Technique ... முறை
Technique, standard ... பொதுமுறை
Teeth ... பல்
Tense ... விறைப்பு
Tense vowel ... விறைப்புயிர்
Tentative ... தற்காலிகமான
Tip of the tongue ... நாநுனி
Tip and blade of the tongue ... நுனிநா
Tone ... குரல்
Trachea ... மூச்சுக்குழல்
Trill ... ஆடொலி
Unreleased ... விடுபடாமை
Unreleased stop ... விடுபடா அடைப்பொலி
Unrounded ... இதழ்குவியா, இதழ்விரி
Uvula ... உள்நாக்கு
Velic ... மூக்கறை வாயில்
Velum ... கடையண்ணம்
Vibration ... அதிர்வு
Vocal cords ... ஒலித்தசை
Voice ... ஒலிப்பு
Voiceless ... ஒலிப்பிலா
Vowel ... உயிர்

அருள் அச்சகம், பாளையங்கோட்டை.